மங்கையர் மலர்

செப்டம்பர் '86 விலை ரூ 3/-



"நான் முடிவு செய்தா செய்தது தான்!"

ரேவதி பேட்டி



உங்கள்
வாழ்வில்
மகிழ்ச்சி
அளிக்கும்
லக்ஷ்மி!
லக்ஷ்மி
100% பாலியெஸ்டர்
ஷிஃபான் மற்றும்
டிஷ்யூ புடவைகள்:
• சுப்ரபா
• சுஹாசினி
• சுஜாதா
• காலக்ஸி
• கீதாஞ்சலி
• யாமினி
• சுவர்ணா
• தீபிகா
லக்ஷ்மி மில்ஸ்
கோயம்புத்தூர்
ADWAVE/LMC/3165

மாம்பலம் ரயில்வே ஸ்டேஷன். செங்கோட்டை பாஸஞ்சர் வேகம் குறைந்து நிற்க ஆரம்பித்த போது கணவன் இறங்கிவிட்டார். மனைவியும் அதைப் பார்த்து 'தடாலெ'ன்று இறங்கி விட்டாள். ரயில் முழுமையாக நிற்காததால் அவளால் 'பாலன்ஸ்' பண்ண முடியாமல் சறுக்கி விழுந்து விட்டாள். கணவனுக்கு வந்ததே கோபம். நூற்றுக்கணக்கானவர்கள் தங்களைப் பார்க்கிறார்களே என்று கூட இல்லாமல் பளார் பளாரென்று அறைய ஆரம்பித்து விட்டார். முப்பதுக்கு மேல் வயதான அந்தப் பெண்ணுக்கு எத்தனை அவமானமாக இருந்திருக்கும்?

'மனைவி' என்று ஆகிவிட்டதாலேயே ஆடு, மாடு போல அடிப்பதற்குக் கணவனுக்கு உரிமை வந்து விடுகிறதா? இதைப் பற்றி மூன்று பெண்களிடம் கேட்டபோது —

திருமதி பானுமதி நாராயணன் (குடும்பத் தலைவி)

"சாதம் குழைந்தால் கோபம்; சாம்பாரில் உப்பு குறைந்தால் கோபம்; ஆபீசில் உள்ள கோபம்....அப்பப்பா....வீட்டிற்குள் நுழைந்ததும் ஒரே ரகளைதான்.


கல்யாணமான புதுசிலே இவரைப் பற்றித் தெரியாம, "ஏன் கோபமா இருக்கீங்க?" என்று கேட்டதற்குக் கையில் இருந்த பிரீப் கேஸைத் தூக்கி எறிந்துவிட்டார். மறு நாள் நான் கால் விரலுக்கு மருந்து போடும் போதுதான் அவரே தன் தவறை உணர்ந்தார். இதுபோல் பலமுறை வீட்டுப் பொருள்கள் அவரது கலவரத்தால் பாதிப்புக்குள்ளாகி

மனைவியைக் கணவன் அடிக்கலாமா?

பார்வதி







பானுமதி

யிருக்கின்றான்.

நல்லவேளை இந்தக் கலர் டீ.வி. சமீபத்தில் அதாவது அவருக்குக் கொஞ்சம் கோபம் குறைந்த பிறகு வாங்கியிருக்கிறோம். இல்லை என்றால் அதுவும் தூள்..... தூள் தான்.

''அன்னிக்கு சம்பளம் வாங்கி வந்ததை சரியா எண்ணிப் பார்க்காம புருஷன் மேல இருக்கிற நம்பிக்கையில பீரோவில வெச்சுப் பூட்டிட்டேன்.

மறுநாள், 'ஆயிரம் ரூபாக் குறையா இருக்குதுன்னு சொன்னதுக்கு, 'நேத்திக்கே ஏன் சொல்லலே'ன்னு கத்தியவர் ஓர் அறை விட்டார்.

அன்று முழுவதும் நான் சாப்பிடவும் இல்லை. பேசவும் இல்லை. ஆபீஸ் சென்று சம்பளம் பற்றி விசாரித்திருக்கிறார். தப்பு ஆபீசில்தான். பணமும் கிடைத்தது. அவர் மனமும் மாறியது.

வரும்போது நிறைய மல்லிகைப் பூவும் 'சிந்து பைரவி' சினிமா டிக்கெட்டும்!

கோபம் இருக்கும் இடத்தில்தானே குணம் இருக்கிறது. அடிக்கிற கைதானே அணைக்கிறது. வருஷங்கள் ஆக ஆக வாழ்க்கையில அனுபவமும் கூடுதில்லையா? இப்போதெல்லாம் அவர் ரொம்பவும்மாறிவிட்டார்.''

திருமதி பார்வதிமஹாதேவன் (வங்கி அலுவலர்)

''அடிக்கிறதென்பதே ஓர் அநாகரீகச் செயல் என்பது என் அபிப்ராயம். என்னதான் படித்திருந்தாலும் அடிக்கிறவர்கள் அடித்துக் கொண்டேதான் இருக்கிறார்கள். சிலரைப் படிப்பும் பட்டமும் இந்த விஷயத்தில் திருத்தி விடுவதே இல்லை. அவர்களது பழக்க வழக்கங்கள்தான் காரணம்.

உணர்ச்சியின் வேகம் உச்ச கட்டத்திற்குப் போகும்போது கையில் கிடைத்ததை எடுத்து அடிக்கும் காட்டு மிராண்டித்தனம் உலகெங்கும் உண்டு. நம் நாட்டில் கொஞ்சம் அதிகம்.

என் கணவர் எச்.பி.பி.யில் மார்க்கெட்டிங் இஞ்சினியராக இருக்கிறார். ஒரே ஒரு முறை கோபம் வந்தபோது டிபன் பாக்ஸைத் தூக்கி எறிந்தார்.... அன்று ஏற்பட்ட சம்பவத்திற்குப் பிறகு ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொண்டோம்.

எங்கள்கோபமெல்லாம்பார்வைகளோடு சரி. ஒரு மாதிரி மூடில் அவர் வருகிறார் எனத் தெரிந்தால் நான் பேசாமல் இருந்து விடுவேன். காப்பி கொடுத்துவிட்டு கப் சிப். எனது வேலையில் மும்முரமாக இருப்பேன். அவராகவே சமாதானம் ஆகிவிடுவார். எங்கள் வீட்டில் நாங்கள் இருவருமே விட்டுக் கொடுத்துச் செல்லும் மனோபாவம் படைத்தவர்கள். வாழ்க்கை என்பதே அதுதானே...

மாலையில் வீட்டிற்கு வரும்போது நான் சீக்கிரமாக ஆபீஸ் முடிந்து வந்தவுடன் நன்றாக டிரஸ் பண்ணிக் கொண்டு சூடா காப்பி செய்து தயாராய் வைத்திருப்பேன். அப்படியென்றால் நான் அவருக்கு அடிமை என்று அர்த்தமில்லை. அவர் சோர்வாக வரும்போது நான் உற்சாகமாக வரவேற்பதும், நான் வருத்தப்படும்போது அவர் தேற்றுவதும்..... இதுதானே வாழ்க்கையின் ரகசியமே!

திருமதி லட்சுமி (வீட்டு வேலை செய்பவர்)

பேட்டியின் தலைப்பைச் சொல்ல ஆரம்பிக்கும்போதே, 'புருஷன் பெண்டாட்டி தகராறப் பத்தியாக் கேக்கிற, எம் புருஷன் எங்கெல்லாம் அடிச்சிருக்கான் பாரு!' என்று சொல்லித் தன் தலைமுடியை விலக்கிக் காண்பித்தார் லட்சுமி. அவள் கணவன் அவளுக்கு அளித்ததே இந்த விழுப்புண்கள் தான்!

''எஞ்சாமி, நாலு வூட்டுப் பாத்திரத்தக் கழுவி நான் எங் கொயந்தைங்க வயித்தக் கழுவுறேன். பாழாப் போற மனுஷன் ரிக்ஷா ஓட்டிட்டு வந்து காசு இல்லாத நேரத்தில ரத்தம் கொட்ற மாதிரி அடிக்கிறாரு.

கலாட்டாத் தாங்காம இத்தோட நாலு வீடுமாத்திட்டோம். கடைசியிலசைதாப்பேட்டையில வந்து குந்திகிறோம். இன்னா ஆம்பிளைங்கய்யா.... ஆத்திரம் வந்தா இப்படியா அடிக்கிறது. ஒரு பொம்பளைக்கு ஆத்திரம் வந்தா எப்படி இருக்கும்? (இதைச் சொல்லும்போது அவர் கையில் துடைப்பான் இருந்தது!)

இந்த மனுஷனுக்கு வாக்கப்பட்டு நான் என்னத்தக் கண்டேன்..... என்று அழ ஆரம்பித்தார்.

தொடர்ந்து, 'ஒரு தபா... சாராயங் குடிச்சிட்டு வந்து துட்டு குடுன்னாரு. எங்கிட்ட இல்லேன்னேன். அசிங்கமா.... வாய்க்கு வந்த மாதிரி பேசினாரு. அப்புறமா வீட்ல இருந்த சிம்னி விளக்கைத் தூக்கி எம் மேல.... எறிஞ்சி.... அந்தப் பீங்கான் குத்தி.... அதுவும் பத்தாம ஒரு மிதி மிதிச்சிட்டுப் போயிட்டாரு.

இந்தப் பாவி மனுஷன் என்னிக்கு எம் புள்ளைங்களைக் காப்பாத்தப் போறான்... ஏதோ இதுகப் படிச்சு, அதுகளையாவது அது காப்பாத்திக்கட்டுமேன்னு உசிரக் கையிலப் பிடிச்சிக்கிட்டு ஒழைக்கிறேன்....


'ஏதோ நாலு வீட்டைப் பெருக்கி அந்த வீட்டுப் பாத்திரத்தக் கழுவி.... இதுகள வளத்துக்கிட்டு வர்றேன். சாமின்னு ஒண்ணு இருந்தா எங்களக் காப்பாத்தட்டும்'

என்று கூறித் தனது முந்தானையால் கண்களில் வடிந்த கண்ணீரைத் துடைத்தார் லட்சுமி.

பேட்டி: **பாலா**

2,00,00,000

கோடிக்கு மேற்பட்ட வாசகர்களின் விருப்பம்



ஆங்கிலத்தில் பேசிப் பழகிடவே
சிறந்த ஒரு கோர்ஸ்
ரேபிடெக்ஸ் இங்கிலீஷ் ஸ்பீக்கிங் கோர்ஸ்

ஸேல்ஸ்மென், வியாபாரி
மானேஜர், குமாஸ்தா
ஒர்க்கிங் கர்ல், இல்லத்தரசி
யாவருமே முன்னேற
எது நல்ல கோர்ஸ் ?
ரேபிடெக்ஸ் இங்கிலீஷ் ஸ்பீக்கிங் கோர்ஸ்



It's really a good book to learn spoken English

—Kapil Dev

கான்வென்டில் படித்த மாணவர் போல தடதட வென்று சரளமாக ஆங்கிலத்தில் பேசக் கற்பிக்கும் புத்தகம். பாரதமெங்கும் பல்வேறு மாநில மக்கள் விரும்பி வரவேற்கும் அருமையான புத்தகம்.

11 மொழிகளில் வெளி
யிடப்பட்டது.

பெரிய
அளவில் 400 க்கும்
அதிகமான பக்கங்கள்.
விலை: ரூ. 24/-
தபால் செலவு
ரூ.5/—

AVAILABLE AT:
Leading bookshops, Higginbotham's Railway Book Stalls or ask by V. P. P. from

PUSTAK MAHAL
Khari Baoli, Delhi-110006.
10-B, Netaji Subhash Marg, N.Delhi-110002.

வளரும் வயதில் குழந்தைகளுக்குத் தேவை காம்ப்ளான்



காம்ப்ளான் ஒன்றில்தான் அவர்களுக்கு அன்றுடம் தேவைப்படும் 23 ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன.

சாதாரணமாக 15 அல்லது 16 வயதிற்குள் குழந்தைகளின் வளர்ச்சி பெரும்பாலும் முழுமையடைந்து விடுகிறது.

அவர்களுடைய வளர்ச்சிக்கு நேரடியாக உதவுவது புரதம் என்ற சத்துதான். ஆகவே உங்கள் குழந்தைகளுக்கு தேவை காம்ப்ளான்—இப்போது, காம்ப்ளான் சிறந்த புரதம் கொண்டுள்ளது—பால் புரதம் (20%) அது 22 மூலதார சத்துணவுகளும் கொண்டதாகும்.

காம்ப்ளான் கிடைக்கிறது இனிய சுவைகளில்.



23

மூலதார சத்துணவுகள் திட்டமிட்ட விகிதங்களில்

புரதம்	ரிபோ
கொழுப்பு	ஃப்ளேவின்
கார்போ	நிகோடி
ஹைட்ரேட்	னமைடு
கால்ஷியம்	கால்ஷியம்
பாஸ்பரஸ்	பென்டோதெனேட்
சோடியம்	கோலின்
குளோரைடு	பைரிடாக்ஸின் (பி6)
(லீ வடிவில்)	வைட்டமின் (பி12)
பொட்டாஷியம்	ஃபாலிக் அமிலம்
இரும்புச்சத்து	வைட்டமின் ஸி
அயோடின்	வைட்டமின் டி
வைட்டமின் 'ஏ'	வைட்டமின் ஈ
வைட்டமின் 'பி1'	வைட்டமின் கே

பால் சேர்த்திடத் தேவையில்லை.



காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூர்ண உணவு

B84. GLC. 120 Tm



காயம் பட்டால் உடனே கவனியுங்கள்!

சிறுவர் சிறுமியர் விளையாடும் போது கீழே விழுந்து முழங்கையிலோ அல்லது முழங் காலிலோ காயம் ஏற்படுவது அன்றாடம் நிகழும் ஒன்று. அல்லது பிளேடில் பென்சில் சீவும் போது கையை வெட்டிக் கொள்வதும் உண்டு. பெற்றோரிடம் சொன்னால், அடி, உதை, இட்டு கிடைக்குமே என்ற பயத்தில் பல குழந்தைகள் காயம் பட்டதைப் பற்றிப் பெற்றோரிடம் சொல்வதில்லை. தற்செய லாகப் பெற்றோர்கள் அதைக் கவனித்தா லொழிய தெரிவதற்குச் சந்தர்ப்பமேயில்லை.

குழந்தைகள் பள்ளியிலிருந்து வீட்டுக்கு வந்தவுடன் அல்லது விளையாடிவிட்டு வந்த வுடன், தாய்மார்கள், காயம் ஏதாவது ஏற்பட் டிருக்கிறதா என்று கவனிக்க வேண்டும். ஒருவேளை, காயம் ஏதாவது ஏற்பட்டிருந் தால் உடனே டாக்டரிடம் அழைத்துப் போய் ஊசி போடச் செய்ய வேண்டும். மிகச் சிறிய காயமாகஇருந்தாலும், அலட்சியமாகஇல்லா மல் உடனடியாக அதைச் சுத்தம் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் டெட்டனஸ் என்ற வியாதி உடனே தொற்றிக் கொள்ளும் அபாயம்இருக்கிறது. அபாயம்எப்படிஏற்படு கிறது என்று கேட்கிறீர்களா?

சேகர், பள்ளி மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கும்போது, விழுந்து காயம் பட்டுக்கொண்டான். மணல், அழுக்கு போன் றவை காயத்திற்குள்ளே போய்விட்டது. காயத்திலிருந்து அதிகமானஇரத்தமும்வெளி யாகவில்லை. சேகர், காயத்தில் ஒரு கர்ச் சீப்பைக் கட்டிக் கொண்டு விளையாட்டு வகுப்பு முடிந்தவுடன், வகுப்பிற்குப் போய் விட்டான். அன்று மாலை, காயத்தைக் கண்ட அவன் தாய், சோப்புப் போட்டுக் காயத்தைக் கழுவிச் சுத்தம் செய்தாலும், காயத்திற்குள் ளிருந்த அழுக்கு, மணல் துகள் போன்ற வற்றை முழுவதும் நீக்க முடியவில்லை.

மறுநாள், சேகரை, டாக்டரிடம் அழைத்துக்கொண்டு போனபோது, டாக்டர் காயத்தைக்கழுவி, ஆண்டி செப்டிக் ஆயிண்ட் மெண்ட் தடவிவிட்டு, ஒரு ஊசியும் போட் டார். இந்நிகழ்ச்சியை, சேகர் வீட்டில் அநேக மாக எல்லோரும் மறந்து நான்கு நாட்கள் ஆயின. நான்காம் நாள் மாலை சேகர் தன் வாயைத் திறக்க முடியாமல் அவதிப்பட் டான். நேரம் செல்லச் செல்ல, தொல்லை அதிகமாகியது. ஆகாரத்தைச் சரியாக மெல்ல முடியவில்லை. அவன் பேசுவது யாருக்கும் புரியவில்லை.

இதைப் பார்த்த சேகரின் அண்டை வீட் டினர், ஒருசமயம், சேகருக்கு டெட்டனஸ் என்ற வியாதி ஏற்பட்டிருக்கலாம் என்றும், வாய் திறக்க, பேச முடியாமல் போவது டெட்டனஸ் வியாதியின் அறிகுறி என்றும் கூறினர். மறுபடியும் சேகரை டாக்டரிடம் கொண்டு போனார்கள். சேகரினால் எழுந்து உட்கார முடியவில்லை. உடம்பெல்லாம் முறுக்கிக் கொண்டுவிட்ட ஒரு உணர்வு. வாய் திறக்க முடியாமையும் மற்ற அறிகுறி களும் சேகரை, டெட்டனஸ் நோய்பிடித்திருப் பதை உணர்த்தின. மறுநாள் சேகரின் நிலைமை மிக மோசமாகியது. வலிப்பு வந்தது போல், உடம்பிலுள்ள தசைகளெல்லாம் முறுக் கேறிக் கொண்டு, மூச்சுவிட முடியாமல், இரும முடியாமல், விழுங்க முடியாமல், திண் டாடினான். சரியாக மூச்சு விடுவதற்காகத் தொண்டையில் துவாரம் செய்து, மூச்சுக் குழாயில் ஒரு குழாயை விட்டுப் பிறகு, பல சக்தி வாய்ந்த மருந்துகளையும் கொடுத்தனர். பலனில்லை. நேரம் செல்லச் செல்ல, சேகரின் உடல் முறுக்கிக் கொள்வது மிக அதிகமாகியது. அடுத்த 24 மணி நேரத் திற்குள் சேகர் இறந்து விட்டான்.

டெட்டனஸ் என்பது என்ன?

டெட்டனஸ் என்ற சொல் டெட்டனாஸ் (இறுக்கம் என்று பொருள்) என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து வந்ததாகும். பண்டைய கிரீஸ் தேசத்திலும், இந்தியாவிலும் இந்நோய் பற்றி அறியப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. இந்நோய், காற்று, முதுகின்மேல் பக்கத்தி லிருக்கும் நரம்புகளையும், கழுத்தின் பின்பக்க

நரம்புகளையும், அதிகமாக உலரச் செய்து விடுவதால் ஏற்படுவதாகும். என்று விவரித்திருக்கிறார். டெட்டனஸ், கிளாஸ்ட்ரீடியம் டெட்டேனி என்ற பாக்டீரியாவால் ஏற்படுகிறது. இந்தப் பாக்டீரியா, உடலில் லேசான காயம் ஏற்பட்டிருக்கும் இடத்தின் மூலமாகவோ, துருப்பிடித்த அல்லது சுத்தமில்லாத கத்தி வெட்டினால் ஏற்படும் காயத்தின் மூலமாகவோ, தீப்புண் காயத்தின் மூலமாகவோ உடம்புக்குள் செல்கிறது.

டெட்டனஸ் உண்டாக்கும் பாக்டீரியாக்கள் உலகெங்கிலும் பரவியுள்ளன. மண்ணிலும் அழுக்கிலும், தூசியிலும், குறிப்பாக பிராணிகளின் கழிவுப் பொருள்களிலும் இப்பாக்டீரியாக்கள் உள்ளன. ஆகவே, நம் ஒவ்வொருவருக்கும் டெட்டனஸ் தொற்றும் அபாயம் இருக்கிறது. வெறும் கண்ணால் பார்க்க முடியாத அளவிற்கு நுண்ணியது இந்த பாக்டீரியா. நம்மைச் சுற்றிலும் கோடிக்கணக்கில் காணப்படுகிறது. இது யாரை வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் தாக்கலாம். வயது வரம்பு கிடையாது.

புண் அல்லது காயத்தின்மூலமாகஇப்பாக்டீரியா உடலுக்குள் சென்று, நரம்பு செல்களில் ஒரு சௌகரியமான இடத்தைத் தேர்ந்தெடுத்து, மிகக் கடுமையான விஷத்தைச் சுரக்கிறது. ஒரு கிராம் விஷத்தில் பத்து மில்லியனில் ஒரு பங்கு ஒரு நபரைக் கொல்லக்கூடிய அளவுக்கு விஷத்தன்மையுடையது. இப்பாக்டீரியா, இரத்தத்தில் கலந்து ஒரு சில மணி நேரங்களில், உடம்பில் நரம்புகள் முடியும் இடத்திற்குச் சென்று இங்கிருந்து நரம்புகளைத் தாக்கி, முதுகுத் தண்டு வழியாக மூளையைத் தாக்குகிறது. தசைகளை இயக்கும் நரம்பு செல்கள்தாம் டெட்டனஸ் பாக்டீரியாவின் இலக்கு.

இந்த பாக்டீரியா, நாம் சுவாசிக்கும் போது வாய், மூக்கு வழியாக உடலுக்குள் சென்றால் நம்மைப் பாதிப்பதில்லை. ஆனால் நமது உடலில் எப்பகுதியில் காயம் பட்டாலும் அக்காயத்தின் வழியே உள்ளே சென்று பயங்கர விளைவுகளை ஏற்படுத்துகிறது. செருப்பில்லாமல் நடக்கும் போது, துருப்பிடித்த ஆணி, கண்ணாடிச் சில் முதலியன காலில் குத்தும் அபாயம் உண்டு. தீப்புண்கள், சரியாக பாண்டேஜ் செய்யப்படாத எலும்பு முறிவு ஆகியவை மூலமாகவும் இப்பாக்டீரியா உடலுக்குள் செல்லலாம்.

இவ்வியாதியின் அறிகுறிகள்

காயம் பட்ட ஐந்தாவது தினத்திலிருந்து பத்து தினங்களுக்குள்ளும், சில சமயம்

க்ளூகோன்-டி ஸூப்பர்ஹீரோ.





களைப்பூட்டும் வெய்யில் நாளிலே உங்கள் குழந்தைக்குத் தேவை க்ளூகோன்-டி: க்ளூகோஸ், விட்டமின்-டி, கால்ஸியம் ஃபாஸ்ஃபேட்டுகள் அடங்கிய உடனடி சக்திபானம்.

பழரசம், தேநீர், காபி அல்லது தண்ணீரிலே கலந்து அருந்த, குடும்பத்தினர் அனைவர்க்குமே புத்துணர்ச்சி தரும் பானமாக அமைகிறது. 100, 200, 500 கிராம் பேக்கெட்டுகளில் கிடைக்கிறது. க்ளாக்ஸோ வழங்கும் க்ளூகோன்-டி.

க்ளூகோன்-டி ®

ஸூப்பர்ஹீரோ மிகவிரும்பும் சக்திபானம்.

GLL-2389

நான்கு, ஐந்து வாரங்களுக்குப் பிறகும் இந்த அபாயம் ஏற்படலாம்.

1. முதலில் காயம் பட்ட இடத்தில் ஊசி குத்துவது போல் வலி ஏற்படும். 2. வாயைத் திறக்கமுடியாது. 3. நோயாளிக்கு சிடுசிடுப்பு, நிலை கொள்ளாமை வரும். 4. மிக அதிகமாக வியர்க்கத் துவங்கும். உடல் டெம்ப்பரேச்சர் 100 டிகிரிக்கு மேலேயே இருக்கும். 5. தசைகள் எல்லாம் முறுக்கிக் கொண்டு விடும். 6. நோயாளி தம் உடலை வில்லைப் போல் வளைத்துக் கொண்டே இருப்பார். நோயாளியின் தலையும், கால்விரல்களும்தாம் படுக்கையைத் தொட்டுக் கொண்டிருக்கும். தலைக்கும் காலுக்கும் நடுவிலுள்ள பகுதி அப்படியே வளைந்து மேலே எழும்பிக் கொண்டேயிருக்கும். 7. பிறகு வலிப்பு ஏற்படும்.

இந்த வலிப்பு ஏற்படும் வரையில், கொடுக்கப்படும் சிகிச்சை ஓரளவு பலனளிக்கும். வலிப்பு வர ஆரம்பித்துவிட்டால், டாக்டர்கள் செய்யக் கூடியது, வலி தெரியாமல் இருக்க மயக்க மருந்து கொடுத்துத் தூங்க வைப்பதுதான். அன்றுடம் சுமார் 50 லிருந்து 100 முறை வலிப்பு வரலாம். நோய் தீவிரமாக ஆகிவிட்டால் தினசரி, பல நூற்றுக்கணக்கான முறை வலிப்பு ஏற்படலாம். வலிப்பு காரணமாக, முகத்தின் தசைகள் இழுத்துக் கொண்டு வாய் கோணலாகி, புருவங்கள் மேலே உயர்ந்து, பற்கள் மேல் வரிசையும், கீழ் வரிசையும் ஒன்றோடொன்று கிட்டித்துக் கொண்டுவிடும். வலிப்பு, அதிகமாகி, மார்பின் தசைகள் சரிவர இயங்க முடியாமல், மூச்சுத் திணறல் ஏற்பட்டு, நோயாளி இறந்து விடுவதுமுண்டு.

ஆச்சரியகரமாக, மிகச் சிறிய, சாதாரண காயங்களின் மூலமாகவே, டெட்டனஸ் பாக்டீரியா உடலுக்குள் நுழைகிறது. காயம் சிறியதுதானே, ஜாஸ்தி ஒன்றும் காயம்படவில்லை என்று அலட்சியமாக இருந்து விடுவதாலோ என்னவோ, சிறிய, சாதாரணக் காயங்களின் மூலமே டெட்டனஸ் பாக்டீரியா உடலுக்குள் நுழைகிறது.

நோய் தடுக்கும் விதம்

டெட்டனஸ் நோயைத் தடுக்க முடியும். இதற்கென்று டெட்டனஸ் டாக்சாய்டு (டி.டி.) என்ற தடுப்பு ஊசி இருக்கிறது. குழந்தைகளுக்குட்ரிப்பிள் ஆண்டிஜென் என்று மூன்று விதமான ஊசிகள் போடுகிறார்களே. அதில் இந்த டெட்டனஸ் டாக்சாய்டு ஊசியும் ஒன்று.

ஒருமுறை கொடுக்கப்பட்ட இஞ்செக்ஷன், குழந்தைக்குச் சுமார் ஐந்து வருடத்திற்குப் பாதுகாப்பளிக்கிறது. பிறகு குழந்தை பள்ளிக்குச் செல்லும்போது பூஸ்டர் டோஸ் இஞ்செக்ஷன் கொடுக்கப்பட வேண்டும். முதலில் டி. டி. இஞ்செக்ஷன் கொடுக்கப்பட்டுச் சில காலம் ஆன பிறகு, உடலில் டெட்டனஸ் எதிர்ப்புச் சக்தி இருந்தாலும் அச்சக்திகள் (Antibodies) குறுகுறுப்பான நிலையில் இருக்க மாட்டா. அவைகளை மறுபடியும் குறுகுறுப்பாக்குவதற்குக் கொடுக்கப்படுவதுதான் இந்த பூஸ்டர் டோஸ் இஞ்செக்ஷன். முதலில் டி.டி. இஞ்செக்ஷன் கொடுக்கப்பட்டிருந்தால் மட்டுமே, இந்த பூஸ்டர் டோஸ் வேலை செய்யும்.

கட்டுரையின் ஆரம்பத்தில் விவரிக்கப்பட்ட சேகர் பற்றிய நிகழ்ச்சியை மறுபடியும் படியுங்கள். டாக்டர், ஒரு ஆயிண்ட்மெண்டு தடவிவிட்டு இஞ்செக்ஷன் கொடுத்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குழந்தைப் பருவத்தில் சேகருக்கு அடிக்கடி சில்லறை உபாதைகள் இருந்தமையால் டெட்டனஸ் டாக்சாயிடு இஞ்செக்ஷன் கொடுப்பதை ஒத்திப் போட்டுப் பிறகு மறந்தும் விட்டனர். சேகருக்குக் குழந்தைப் பருவத்திலே டெட்டனஸ் டாக்சாயிடு இஞ்செக்ஷன் கொடுக்கப்பட்டிருக்கும் என்று நினைத்துக் கொண்டு அதுபற்றித் தாயிடம் கேட்டு அறிந்து கொள்ளாமலே, டாக்டர் பூஸ்டர் டோஸ் இஞ்செக்ஷன் மாத்திரம் கொடுத்திருக்கிறார். முதலிலேயே டெட்டனஸ் டாக்சாயிடு இஞ்செக்ஷன் கொடுக்கப்படாததால், பூஸ்டர் டோஸ் தன் வேலையைச் செய்யவில்லை. சேகருக்குக் குழந்தைப் பருவத்தில் டி. டி. இஞ்செக்ஷன் கொடுக்கப்படவில்லை என்றவிவரம் டாக்டருக்குத் தெரிந்திருந்தால், வேறு விதமான, எதிர்ப்புச் சக்தி தயார் நிலையிலுள்ளதான தடுப்பு ஊசியைப் போட்டிருப்பார்.

டெட்டனஸ் தொற்றிக் கொள்ளும் நோயல்ல. ஆனால், சாதாரண நோயாளிகளுக்குக் கட்டு கட்டும் இடத்தில், டெட்டனஸ் நோயாளிகளின் காயங்களைக் கட்டுவது அபாயமானது. அந்த இடத்தில் டெட்டனஸ் கிருமிகள் தொற்றிக் கொண்டு, அடுத்து சாதாரண நோயாளி அந்த இடத்திற்குக் கொண்டு வரப்படும்போது, அவரைப் பீடிக்

மிக்ஸியில் உளுந்து அரைப்பதானால், 'சில்' லென்ற தண்ணீர் (ஐஸ் வாட்டர்) கொண்டு அரைத்தால் உளுந்தும் எப்பொழுதும் காண்பதைவிட அதிகமாகக் காணுகிறது. மிக்ஸியும் சூடாவதில்லை. அதேபோல் ஊற வைத்த அரிசியையும் ஐஸ் தண்ணீர் விட்டு அரைத்தால் மிக்ஸியை அடிக்கடி அணைத்துவிட்டு அரைக்க வேண்டாம்.

— சௌமினி சுந்தர்

கும் அபாயமுண்டு.

டெட்டனஸ் மோனடோரம் என்ற டெட்டனஸ் பாக்டீரியா குழந்தைகள் பிறந்தவுடன் அவைகளைத் தாக்குகின்றன. குழந்தைகள் பிறந்து சில நிமிடங்கள் ஆனவுடன் இந்நோயால் தாக்கப்பட்டு இறந்து விடுகின்றன. இது எப்படி ஏற்படுகிறது? ஆஸ்பத்திரியில் பிரசவம் ஏற்படாமல், வீடுகளில் வைத்து நடக்கும் போது, குழந்தையின் தொப்புள் கொடியைச் சாதாரண கத்தியாலோ, பிளேடினாலோ அறுத்து விடுகிறார்கள். இதனால் டெட்டனஸ் அபாயம் நேரிடுகிறது. தொப்புள் கொடியை அறுத்தவுடன் அந்த இடத்தில் சாணியையோ அல்லது சாம்பலையோ வைக்கிறார்கள். பிரசவம் நிகழும் இடம் சுத்தமாக இல்லாவிட்டால் தாயின் பிறப்புறுப்பு வழியாக, டெட்டனஸ் பாக்டீரியா நுழையும் அபாயம் உண்டு. இந்தியாவில் டெட்டனஸ் நோயினால் ஆண்டுக்கு சுமார் ஒரு இலட்சம் குழந்தைகள் இறக்கின்றன என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

சில சமயம், குழந்தைகள் காதிலிருந்து சீழ் வடிவதுண்டு. பெரியவர்களுக்குக் காதில் மெழுகு அடைத்துக் கொண்டு விடுவதுண்டு. இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும், மெல்லிய ஒயர், தீக்குச்சி, துடைப்பக் குச்சி போன்ற சாதனங்களைக் காதில் விட்டுக் குடைகின்றனர். 'இது மிகவும் அபாயகரமானது. இச்சாதனங்களில் பாக்டீரியா இருந்து டெட்டனஸ் உண்டாகலாம்.

தாய் கர்ப்பமாக இருக்கும் போது கொடுக்கப்படும் டி. டி. இஞ்செக்ஷன், குழந்தை பிறந்து சில மாதங்கள் வரை, குழந்தையை இந்நோயிலிருந்து பாதுகாக்கிறது என்பது அறியப்பட்டுள்ளது. எனவே அண்மைக் காலத்தில் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் கர்ப்பிணிகளுக்கு இந்த டி. டி. இஞ்செக்ஷன் கொடுக்கும் ஒரு புரோகிராமை ஆரம்பித்துள்ளது.

காயம் பட்டவுடன், காயம் பட்ட இடத்தை உடனே நன்றாகச் சுத்தம் செய்ய வேண்டும். நன்றாகச் சுத்தம் செய்யப்படும் போது காயத்திற்குள் காற்றோட்டம் ஏற்பட்டு, ஆக்சிஜன் நுழைந்து டெட்டனஸ் பாக்டீரியா உள்ளே நுழையாதவாறு பாதுகாக்கிறது. இங்கு இரண்டு விஷயங்களை மனத்தில் கொள்ள வேண்டும். 1. காயம் ஏற்பட்டு எட்டு மணி நேரத்திற்குப் பிறகு காயம் சுத்தப் படுத்தப்படுமானாலும், 2. காயம் சரியாகச் சுத்தப்படுத்தப்படாமலிருந்தாலும், டெட்டனஸ் பாக்டீரியா தாக்கும்.

தாய்மார்களே, உங்கள் குழந்தைக்கு டிப்தீரியா டெட்டனஸ் (DPT) வாக்சினைக் கொண்ட இஞ்செக்ஷன் மூன்று கொடுக்கச் செய்யுங்கள். டாக்டரைக் கலந்தாலோசித்து, அவ்வப்போது பூஸ்டர் டோஸ் இஞ்செக்ஷனையும் கொடுக்கச் செய்யுங்கள்.

உடம்பில் எங்காவது, வெட்டுக்காயம், இக்காயம் ஏற்பட்டால் அதை நன்றாகச் சுத்தம் செய்ய வேண்டும். ஒரு வேளை, துருப்பிடித்த ஆணியால் காயம் ஏற்பட்டிருந்தால், நீங்கள் டி. டி. இஞ்செக்ஷன் எடுத்துக் கொள்ளாதவராக இருந்தால் இதுபற்றி டாக்டரிடம் கூறி, மூன்று கோர்ஸ் டி. டி. வாக்சினையும் ஏ.டி.எஸ். (Anti-Infants Serum) ஊசியையும் போடச் செய்யுங்கள்.

டெட்டனஸ் இஞ்செக்ஷனை எடுத்துக் கொள்ளாத ஒரு பெண், கர்ப்பமாகும் போது, முதலாவது, இரண்டாவது ஊசியை, முறையே, நான்காம், ஐந்தாம் மாதமும், மூன்றாவது ஊசியை பிரசவத்திற்கு முன்பும் எடுத்துக் கொள்ள வேண்டும். கர்ப்பத்திற்கு முன்பே டெட்டனஸ் இஞ்செக்ஷன் எடுத்துக் கொண்டிருந்தால், கர்ப்பமாகி மூன்று மாதத்திற்குப் பிறகு, பூஸ்டர் டோஸ் இஞ்செக்ஷன் எடுத்துக் கொள்ள வேண்டும்.

செருப்பில்லாமல் நடக்காதீர்கள். வீட்டிலுள்ள துருப்பிடித்த இரும்பு சாமான்கள், ஆணி, கத்தரிக்கோல், பிளேடு, கத்தி, அரிவாள்மனை போன்றவைகளை எறிந்து விடுங்கள்.

ஒருவிஷயம் — செருப்பின் மூலமாகவே டெட்டனஸ் பாக்டீரியா ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அதிவேகமாகப் பரவுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இவ்விஷயம் தெரிந்தோ, தெரியாமலோ, பெரியவர்கள், நாம் வெளியே போகும் போது போட்டுக் கொண்டு போகும் செருப்புக்களை வாசல் புறத்திலேயே கழற்றி விட்டுவிட்டு உள்ளே வர வேண்டும் என்பதில் கண்டிப்பாக இருக்கிறார்களோ என்னவோ?

— ராஜி

ஒரு துண்டு தேங்காயைத் தயிரில் போட்டு வைத்தால் தயிர் வெகுநேரம் வரை புளித்துக்கெடாமல் இருக்கும்.

— எஸ். ஜெயஸ்ரீ

உங்கள் வைரத் தோடுகள் அழுது வடிகிறதா? கவலை வேண்டாம். அவற்றை ஒரு சுத்தமான மஸ்லின் வெள்ளைத் துணியில் முடிந்து, பிரஷர் குக்கரின் மூடியின் மேல் வெயிட் வால்வ் வைக்கும் இடத்தில் பிடித்துக் கொண்டு, நீராவி சில நிமிடங்கள் அவற்றில் படும்படி பார்த்துக் கொள்ளுங்கள். பிறகென்ன? கண்ணைப் பறிக்கும் தனிதான்!

— திருமதி தேவஜோதன்

சகோதரி



நற்காலத்தில் நகர்ப்புறங்களில் விதவைப் பெண்களின் மீது அத்தனை கட்டுப்பாடு இருப்பது இல்லை. ஆனால் போன நூற்றாண்டில் எத்தனை கொடுமைகள் அவர்களுக்கு இழைக்கப்பட்டிருந்தன.

பிறந்தேன், வளர்ந்தேன், இறந்தேன் என புழு பூச்சியைப் போல வாழ்ந்தவர்களிலே புதுமையாகமலர்ந்தவர் சகோதரிசுப்புலட்சுமி அம்மாள். எட்டு வயதில் மணமுடித்துப் பதினொரு வயதில் விதவையானார். வாழ்வு தனக்கு இழைத்துவிட்ட கொடுமையைப் பற்றிக் கூட அறியாத வயது. பெற்றோர்கள் பரந்த மனப்பான்மை கொண்டவர்களாதலால் படிக்கவைத்தனர். சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதல் கைம்பெண் பட்டதாரி ஆனார்.

பிறகு ஒரு பள்ளியில் ஆசிரியை ஆனார். ஆனால் மனம் மட்டும் எரிந்து கொண்டிருந்தது. "எனக்கு இத்தகைய குடும்பச் சூழ்நிலை இருந்ததால் கல்வி என்னும் ஒளி பெற்றேன். எத்தனை கைம்பெண்கள் இருட்டறையில் மங்கிக் கொண்டிருக்கிறார்கள்! இவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமே!

அந்த உந்துதலின் விளைவாக வேலை போக மீதியிருந்த நேரத்தில் நிதி சேர்க்கத் தொடங்கினார். இவருடைய முயற்சியில் உருவானவை தான் வித்யா மந்திர், தி. நகர் சாரதா வித்யாலயா மாடல் ஹைஸ்கூல், ஆர். கே. எம். சாரதா ஹையர் செகண்டரி ஸ்கூல் முதலியன.


கைம்பெண்களுக்கான விடுதியை ஆரம்பித்து வைத்தார். ஸ்ரீ சாரதா பெண்கள் யூனியனும் இவருடைய முயற்சியிலிருந்து பிறந்ததே.

வாழ்நாளெல்லாம் தன்னையொத்த பெண்களுக்காகவே நினைந்து பாடுபட்ட அந்த அம்மையாரின் நூற்றாண்டு விழா கொண்டாடும் நேரமிது. பல மாதர் சங்கங்கள் சிஸ்டர் சுப்புலட்சுமியின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றன.

— கிரிஜா ராகவன்



• விசாலாட்சி



• ராதா



• எஸ். விஜயலட்சுமி



• சகுந்தலா



• பாமா கிருஷ்ணன்

இம்மாத இல்லத்தரசி

முதல் பரிசு

வெள்ளி அம்மன் முகம்

முருங்கை இட்லி

தேவையான பொருட்கள்:

முருங்கைக் காயின் சதைப் பகுதி — முக்கால் டம்ளர்,
பிரெட் துண்டுகள் — 1 டம்ளர்,
சேமியா — ½ டம்ளர்
புளித்த தயிர் — 2 டம்ளர்,
கடுகு — முக்கால் ஸ்பூன்,
உளுத்தம் பருப்பு — 1 டீஸ்பூன்
பச்சை மிளகாய் — 5,
இஞ்சி — ஒரு சிறு துண்டு,
சாம்பார் வெங்காயம் — 50 கிராம்,
வெந்தயமும், மஞ்சளுமாக வறுத்து அரைத்த பொடி — 1 டீஸ்பூன்,
கொத்துமல்லித் தழை (நறுக்கியது) — 2 டேபிள்ஸ்பூன்,
சமையல் சோடா — 1 சிட்டிகை,
உப்பு — சுவைக்கேற்ப,
சமையல் எண்ணெய் — 2 டேபிள் ஸ்பூன்.

செய்முறை:

முருங்கைக் காயைச் சாம்பாருக்கு நறுக்குவது போல் நறுக்கி வேக வைத்து அதன் சதைப் பகுதியைச் சுரண்டி எடுத்து மசிக்கவும். வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு, உளுத்தம் பருப்பு, ப. மிளகாய், இஞ்சி, வெங்காயம் ஆகியவற்றைத் தாளித்துக் கொண்டு சேமியாவைச் சேர்த்துப் பொன்னிறமாக வறுத்து எடுக்கவும்.

இதை ஒரு பெரிய பாத்திரத்தில் போட்டுக் கொண்டு அதோடு முருங்கைக்காய் விழுது, கொத்துமல்லி, தயிர், பிரெட் துண்டுகள், உப்பு, வெந்தய — மஞ்சள் பொடி, சமையல் சோடா சேர்த்து நன்கு கலக்கவும். இட்லித் தட்டுகளில் எண்ணெய் தடவி இந்த மாவை விட்டு ஆவியில் வேக விட்டு எடுக்கவும். மிகவும் வாசனையாகவும், சுவையாகவும் இருக்கும்.

இந்த இட்லியைத் தேங்காய்ச் சட்னியோடு சேர்த்துச் சாப்பிட மிகவும் சுவையாக இருக்கும். விருப்பமுள்ளவர்கள் முந்திரிப் பருப்பை வறுத்து மாவில் சேர்த்துக் கொள்ளலாம்.

— விசாலாட்சி, சேலம்.

இரண்டாம் பரிசு

வெள்ளி ஜோதிகள்

முருங்கைக் கீரை கட்லெட்

தேவையான பொருட்கள்:


முருங்கைக் கீரை — 2 கோப்பை,
சிறுகீரை — 1 கோப்பை (அ) சிறிய கட்டு,
புதினா — 1 சின்ன கட்டு,
உளுத்தம் பருப்பு — ¼ கிலோ,

சுண்டல் கடலை — 2 டேபிள் ஸ்பூன் (இரண்டு பருப்புக்களையும் 4 மணி நேரம் ஊற வைக்க வேண்டும்)
பச்சை மிளகாய் — தேவைக்கேற்ப
இஞ்சி அரைத்தது — 1 டீஸ்பூன்,
பட்டை லவங்கம், ஏலக்காய் — 2, 2, 2,
பிரிஞ்சி இலை — 2,
ரொட்டித் தூள் — 1 கோப்பை,
பெருங்காயம் — சிறிதளவு
கொத்துமல்லித் தழை — சிறிய கட்டு, (பொடிப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.)
நெய் (அ) ரீபைண்டு ஆயில் — பொரிக்கத் தேவையான அளவு.




செய்முறை:

முதலில் மூன்று கீரையில் உள்ள தண்டுகளை எல்லாம் நீக்கிவிட்டுச் சிறிது சிறிதாக நறுக்கி வேக வைத்துக் கொள்ளவும். உளுத்தம் பருப்பைப் பாதியாக வேக வைத்து எடுத்துக் கொள்ளவும். கடலையை நன்றாக வேக வைத்துக் கொள்ளவும். பிறகு வேக வைத்த கடலையையும் உளுந்தையும் நன்றாக விழுது போல அரைத்துக் கொள்ளவும். அரைத்து வைத்துள்ள விழுதுடன் கீரை, பச்சை மிளகாய், பட்டை, லவங்கம், ஏலக்காய் அரைத்து அதனையும் கலக்க வேண்டும். பிறகு தேவையான உப்பு, பெருங்காயம், நறுக்கிய கொத்துமல்லித் தழை ஆகியவற்றையும் சேர்த்து நன்றாகப் பிசைந்து கொள்ள வேண்டும்.



பிசைந்த மாவை கட்லெட் வடிவத்தில் செய்து கொண்டு ரொட்டிப் பெட்டியில் புரட்டி எடுக்க வேண்டும். பிறகு வாணலியில் எண்ணெய் (அ) நெய் வைத்து காய்ந்தவுடன் பிரிஞ்சி இலையைப் போட்டுவிட்டு பிறகு எடுத்து விட வேண்டும். பிறகு கட்லெட் வடிவத்தில் செய்துள்ள துண்டுகளை எண்ணெயில் போட்டுப் பொரித்து எடுக்க வேண்டும்.

— ராதா, சென்னை — 111.



மூன்றாம் பரிசு

வெள்ளி குங்குமச் சிமிழ்

முருங்கைக்காய் ஊறுகாய்

தேவையான பொருட்கள்:

முருங்கைக்காய் — 20,
எலுமிச்சங்காய் — 10,
மாங்காய் — 2,
உப்பு — 100 கிராம்,
பச்சை மிளகாய் — 10,
நல்லெண்ணெய் — ¼ லிட்டர்,
வெந்தயம் — 2 ஸ்பூன்,
மஞ்சள் பொடி — 2 ஸ்பூன்,
பெருங்காயப் பொடி — 2 ஸ்பூன்,
கடுகு — 2 ஸ்பூன்.

செய்முறை:

முருங்கைக் காய்களை சுமார் இரண்டு அங்குல நீளத்திற்குத் துண்டங்களாக நறுக்கிக் கொள்ளவும். துண்டங்களை தண்ணீரில் நன்ருக அலம்பி வடிகட்டவும். பின் ஒரு பாத்திரத்தில் போட்டு உப்புடன் குலுக்கவும். ஒருநாள் முழுக்க துண்டங்கள் உப்பிலேயே இருக்க வேண்டும். மறுநாள் உப்பு தண்ணீர் விட்டுக் கொள்ளும். உப்புத் தண்ணீருடன் கூடிய முருங்கைக்காய்த் துண்டங்களை ஒரு தட்டில் போட்டு நல்ல வெயிலில் காய வைத்து எடுக்க வேண்டும். எல்லா உப்புத் தண்ணீரும் வற்றுவதற்குச் சுமார் இரண்டு மூன்று நாட்கள் ஆகும்.

மிளகாய் வற்றலை வாணலியில் சிறிது எண்ணெய் விட்டுச் சற்று வதக்கிக் கொள்ளவும். ஆறியபின் மிக்ஸியில் நன்ருகப் பொடித்துக் கொள்ளவும். இப்பொடியை வெயிலில் காய வைத்து எடுத்த முருங்கைக்காய்த் துண்டங்களுடன் சேர்க்கவும். மஞ்சள் பொடி, பெருங்காயப் பொடியையும் அதில் போடவும். வெந்தயத்தை எண்ணெய் இல்லாமல் வாணலியில் நன்ருகச் சிவக்க வறுத்துப் பொடி செய்து போடவும். மாங்காய்களைச் சிறு துண்டங்களாக்கிப் போடவும் பச்சை மிளகாயை காம்பு நீக்கி வாயைக் கீறிப் போடவும். பிறகு ¼ லிட்டர் எண்ணெயை நன்ருகக் காய்ச்சி அதில் கடுகை தாளித்துப் போட்டு விடவும். ஈரமில்லாத கரண்டியால் நன்ருகக் கிளறவும். எலுமிச்சங்காய்களைச் சாறு பிழிந்து சேர்க்கவும். மேலும் எல்லா வற்றையும் சேர்த்து நன்ருகக் கிளறி ஈரமில்லாத பாட்டிலில் அல்லது ஜாடியில் எடுத்து வைக்கவும்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட ஊறுகாய் இரண்டு மாதமானுலும் கெடவே கெடாது. முருங்கைக்காய் ஊறுகாயைத் தோலை நீக்கி விட்டு சாப்பிடுவதற்குள் என்னவோ கொஞ்சம் சிரமம்தான். ஆனுல் வாய்க்குத்தான் என்ன அவ்வளவு ருசி!

— எஸ். விஜயலட்சுமி, திருச்சி – 18.

ஆறுதல் பரிசு

எக் பீட்டர்

முருங்கை புளி மசியல்

தேவையான பொருட்கள்:

மிகவும் முற்ருமல் இருக்கும் முருங்கைக் காய் — 4.
பழைய புளி — சிறிய எலுமிச்சை அளவு.
வெல்லம் — சுண்டைக்காய் அளவு.
உப்பு — தேவையான அளவு.
மஞ்சள் தூள் — சிறிதளவு.
பச்சை மிளகாய் — 1.
வற்றல் மிளகாய் — 1.
கடுகு — ¼ டீஸ்பூன்.
பெருங்காயம் — சிறிய துண்டு.
எண்ணெய் — 2 தேக்கரண்டி.

செய்முறை:

முருங்கைக்காய்களை, நறுக்கித் துண்டங்களாகச் செய்து, அரை வேக்காட்டில் வேக வைத்துக் கொள்ளவும். காயின் உள் பகுதியை எடுத்துக் கொண்டு தோலை

இம்மாத இல்லத்தரசி போட்டிக்கு நடுவர்கள்:

அரிமா மகளிர் சங்கம், விழுப்புரம்.


* டாக்டர் திருமதி எஸ். அமர்ஜோதி, திருமதி மைதிலி பத்மநாபன், திருமதி லலிதா ராஜாராமன், திருமதி லலிதா பிரபாகரன், குமாரி சித்திரா, திருமதி மங்களா சுப்பையா.





விளையாடும்போது குழந்தைக்கு வியர்ப்பது இயற்கை. ஆனால் அதன் விளைவாக சக்தி இழந்து களைப்புற்றால் படிப்பது எப்படி? இக்களைப்பு நீங்க, அவனுக்கு அளிப்பீர் எலெக்ட்ரோஸ். இது விரைவில் சுறுசுறுப்பூட்டுகிறது.

வியர்வையினால் அவன் இழந்த அத்தியாவசியமான உப்புக்களை (body salts) மீட்டுத்தரும் க்ளுக்கோஸ் அடங்கிய ருசிமிக்க பானமாகும் எலெக்ட்ரோஸ். ஆரஞ்ஜ் சுவையுள்ளது.



க்ளாக்ஸோ வழங்கும்
புதிய படைப்பு— எலெக்ட்ரோஸ்

CLARION/B/GX/11.183 TML

எறிந்து விடவும். மத்தினால் நன்றாக இதை மசித்துக் கொள்ளவும். வாணலியில் எண்ணெயை விட்டு, கடுகு, மிளகாய், பெருங்காயம் போட்டுக் கடுகு வெடித்ததும் பச்சை மிளகாய்த் துண்டங்கள், விழுது போட்டு நன்றாகக் கிளறவும்.

புளியை கெட்டியாகக் கரைத்து வாணலியில் ஊற்றவும். இத்துடன் மஞ்சள் பொடி, உப்பு, வெல்லம் சேர்த்து நன்றாகக் கொதித்தவுடன் கறிவேப்பிலை போட்டு இறக்கி விடவும். இந்த மசியலை சாதத்தில் கலந்து சாப்பிட வெகு ருசியாக இருக்கும். இட்டிலி, தோசை, முதலியவற்றுடன் கூடத் தொட்டுக் கொண்டு சாப்பிடலாம்.

— ஆர். சகுந்தலா, சென்னை — 79.

ஆறுதல் பரிசு

எக் பீட்டர்

முருங்கைக்காய் தயிர்ப் பச்சடி

தேவையான பொருட்கள்:

முருங்கைக்காய் — 5
சிறிய வெங்காயம் — 100 கிராம்,
தேங்காய்த் துருவல் — 1 கப்,
கட்டித் தயிர் — 1 கப்,
பச்சை மிளகாய் — 4,
இஞ்சி — ஒரு சிறு துண்டு,
சீரகம் — ஒரு தேக்கரண்டி,
எண்ணெய் — 3 மேசைக் கரண்டி,
உளுத்தம்பருப்பு — ஒரு மேசைக் கரண்டி,
கடுகு — ½ தேக்கரண்டி,
கறிவேப்பிலை — சில கொத்துகள்,
உப்பு — தேவையான அளவு.

செய்முறை:

முருங்கைக் காய்களை நெடுக்காக வெட்டி, அதன் வெண்மையான சதைப் பகுதியை காரட் துருவியில் துருவி எடுத்துக் கொள்ளவும். சிறிய வெங்காயத்தைத் தோல் நீக்கி நீளவாக்கில் பொடிப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். தேங்காய்த் துருவல், பச்சை மிளகாய், இஞ்சி, சீரகம் இவற்றை விழுதாக அரைத்துக் கொள்ளவும். வாணலியை அடுப்பில் வைத்து எண்ணெய் விட்டு அது காய்ந்ததும் உளுத்தம்பருப்பு, கடுகு, கறிவேப்பிலை இவற்றைத் தாளித்து முருங்கைக் காய் துருவல், வெங்காயம் இவற்றை வாணலியில் இட்டுக் கிளறி எண்ணெயில் வேக வைக்கவும். துருவல் நன்றாக வெந்தவுடன் அரைத்து வைத்திருக்கும் விழுதைச் சேர்த்து, தேவையான அளவு உப்பும் சிறிது நீரும் சேர்த்துக் கொதிக்க விடவும். கொதித்தவுடன் வாணலியை அடுப்பிலிருந்து இறக்கி, சிறிது ஆறிய பின் தயிரைச் சேர்த்துக் கிளறவும். இதுவே முருங்கைக்காய் தயிர்ப் பச்சடி.

— பாமா கிருஷ்ணன், தக்கலை.



பல் மருத்துவர்
டாக்டர்
அமரநாத
னுடன் பேட்டி

பல்லைப் பற்றிக் கொஞ்சம்...

(சென்ற இதழ் தொடர்ச்சி)

எனக்குத் தெரிந்தஒரு பெண்மணிக்குப் பல்வலி குறைவதற்காகக் கொடுக்கப் பட்ட ஊசி மருந்தால் முகம் முழுவதும் வீங்கி அந்த வீக்கம் நிலை யாக நின்று விட்டது. இதற்கு என்ன காரணம்?

டா: முதலாவதாகப் பல்வலி நீங்கக் கொடுத்த மருந்து காரணமாக ஒவ்வாமை ஏற்பட்டு முகம் வீங்கலாம். ஆனால் இந்த வீக்கம் இரண்டு, மூன்று நாட்களில் வடிந்துவிடும். சிலசமயம் ஊசி மருந்து, செல்ல வேண்டிய நரம்பிற்குச் செல்லாமல் இடைவெளியில் தங்கிவிடும். இந்நிலையில் வீக்கம் வடியாது. இரண்டு மூன்று மாதங்களாக வீக்கம் இருப்பினும் மருத்துவரை நாடினால் சிகிச்சை மூலம் பழைய முகத்தைப் பெற முடியும்.

ஈறுகளில் ரத்தம், சீழ் கசியக் காரண மென்ன? கர்ப்பிணிப் பெண்களின் ஈறுகளில் இரத்தம் கசிவது ஏன்?

டா: உணவு உண்டான பின் எப்போதும் தவறாமல் பல்லை பிரஷ்ஷினால் துலக்க வேண்டும். அவ்வாறு செய்யாத போது வாயில் எப்போதுமே இருக்கும் பாக்டீரி யாக்கள் பற்களுக்கிடையேயுள்ள உணவுத் துணுக்குகளுடன் வினை புரிந்து அவற்றை அமிலமாக மாற்றுகின்றன. இதனால் ஈறு களில் அழற்சி (infection) ஏற்பட்டு எரிச் சல் தோன்றும். ஆரம்ப நிலையில் லேசான இரத்தக் கசிவும், வலியும் தோன்றும். கவனிக்காவிட்டால் ஈறு முழுவதும் சிவந்து, தடித்து ஜுரம் ஏற்படும். மிக முற்றிய நிலையில் சீழ் வெளிப்படும். தாடைக்குக் கீழ காது ஓரங்களில் நெறி கட்டி ஜுரம் வரும். வாய் துர்நாற்றம் வீசும். இதுவே பயோரியாவாக மாறிப் பற்கள் விழவும்வாய்ப்புஏற்படும். எனவே ஈறுகளில் லேசான வலியும், ரத்தக் கசிவும் ஏற்பட்டதுமே மருத்துவரை நாட வேண் டும். கர்ப்பிணிகளுக்குக் கருவுற்ற சமயம் சில ஹார்மோன்கள் சுரக்கும். இவை ஈறுகளை அடைவதால் அவற்றின் எதிர்ப்பு சக்தி குறைந்து இலேசான இன்ஃபெக் ஷன் ஏற்படும். இதற்கு லோகலைஸ்டு டிரீட்மெண்ட் கொடுத்தால் போதும்.

பல்லின் மஞ்சள் நிறம் மாற என்ன வழி? மருந்து டானிக் இவற்றாலும், வாழைத் தண்டு, கத்தரிக்காயைப் பச்சையாகக் கடிப்பதாலும் ஏற்படும் கறையை நீக்க முடியுமா?

டா: சிலருக்கு இயற்கையிலேயே பற்கள் சிறிது மஞ்சளாக இருக்கும். இதை வெண் மையாக மாற்ற முடியாது. மருந்து, இரும்பு சத்துள்ள டானிக், அதிவீரியமுள்ள ஆன்டிபயாடிக்ஸ் இவற்றால் ஏற்படும் கறை மாறாது. கத்தரிக்காய், வாழைத் தண் டால் ஏற்பட்ட கறையைச் சுரண்டி நீக்கி விடலாம்.

பற்களில் படிந்துள்ள காறையைய் நீக்க வேண்டுமா? நீக்காவிட்டால் தொல்லை உண்டா?

டா: இது ஒரு முக்கியமான கேள்வி. என் னிடம் சிகிச்சைக்கு வரும் பலரும் தங்க ளுக்குத் திருமணம் நிச்சயம் ஆகியிருப்ப தாகக் கூறி, பல் காறையை நீக்கி, வாய் துர்நாற்றம் வீசாமலிருக்க வழி கூறுங்கள் என்கிறார்கள். பல்லைப் பொறுத்தவரை அதை அடிக்கடிச் சுத்தம் செய்ய வேண்

டும். ஒருவித காறை மஞ்சள் நிறத்தில் பல் முழுவதையுமே கவசம் போல மூடியிருக்கும். டார்டார் என்னும் காறை பற்களின் கீழ் ஓரங்களில் கெட்டியாகப் படிந்திருக்கும். இவைகளை அவ்வப்போது நீக்கிச் சுத்தம் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் இவை ஈறுகளை பலவீனப் படுத்தும். ஈறுகளில் அழற்சியும், வாயில் துர்நாற்றமும் ஏற்படும்.

பல் செட் பொருத்திக் கொள்வதால் ஈறுகளில், அண்ணத்தில் புண் ஏற்பட்டு அவதிப்படுகிறார்களே, என்ன சிகிச்சை? பல் செட்டால் நாக்கில் கான்சர் ஏற்படும் ஆபத்து உண்டா?

டா: பல் செட்டின் கூரான பகுதிகள் வாயின் உட்புறப் பகுதிகளைக் குத்துவதால் புண் ஏற்படலாம். அல்லது தாடை எலும்பின் அமைப்பு குறுகி, நீண்டு இருப்பின் டெஞ்சர் பேஸ் அப்பகுதியை அழுத்துவதாலும் ஈறுகளில் புண் ஏற்படலாம். இவை எதுவுமில்லாமல் வெறும் வலி மட்டும் கூட ஏற்படலாம். இத்தகைய சமயங்களில் மருத்துவரை நாட வேண்டும். அவர் வாயில் எப்பகுதியில் புண் என்பதைக் கண்டு அதற்குரிய பல் செட்டின் பகுதியின் கூரான பாகத்தை மழுங்கச் செய்து பொருத்துவார். புண் ஆறும் வரை அதற்கான சிகிச்சையை மேற்கொள்வதுடன் பல் செட்டையும் பொருத்திக் கொள்ளக் கூடாது. வலியைப் பொறுத்துக் கொள்வதோ, வலி நிவாரணி மருந்துகளை உட்கொண்டு வலியைக் குறைப்பதோ, புண்ணை அலட்சியம் செய்வதோ தவறு. இதனால் அது நீண்டகால உறுத்தலாகி பின் புற்றுநோயாக மாறும் ஆபத்தும் உண்டு.

பல் விழுந்து எத்தனை வருடங்களுக்குள் பல் செட் கட்ட வேண்டும்?

டா: ஒருவர் நாற்பது வயதில் ஐந்து பற்களைப் பிடுங்கிக் கொள்வதாகவும், ஐம்பது வயதில் எல்லாப் பற்களையும் பிடுங்கிக் கொள்வதாகவும் வைத்துக்கொள்வோம். இப்போது அவர் பல் செட் கட்டிக் கொள்ள விரும்பலாம். ஆனால் நாற்பது வயதில் பல் பிடுங்கப்பட்ட ஈறுகள் தேய்ந்து இருக்கும். ஐம்பது வயதில் பல் நீக்கப்பட்ட ஈறு தேயாமல் இருக்கும். இந்நிலையில் கட்டப்படும் பல் செட் உறுதியாக நிற்கும் என்று சொல்ல முடியாது. இதனைத் தவிர்க்க அவ்வப்போது பற்கள் விழுந்தாலோ, பிடுங்கப்பட்டாலோ அந்தந்த இடங்களில் ஓரிரு பொய்ப் பற்களைக் கட்டிக் கொண்டுவிட வேண்டும். பிறகு எல்லாப் பற்களையும் பிடுங்கிய பின் பல்செட் கட்டிக் கொண்டால் அது உறுதியாக இருக்கும். எல்லாப் பற்களும் விழுந்த பிறகு ஐந்து வருடங்களுக்குள் பல் செட் கட்டிக் கொள்வது பலன் தரும்.

பல் செட்டைச் சுத்தமாக வைப்பது எப்படி?

டா: மற்ற பற்களைப் போலவே பல் செட்டையும் பற்பசை; பிரஷ் கொண்டு துலக்கலாம். இரவு படுக்கும் முன் பல் செட்டை ஒரு கிண்ணத்தில் நீர் விட்டு அதில் போட்டு வைத்துக் காலையில் பிரஷ், பேஸ்ட் உபயோகித்துத் துலக்கலாம். அல்லது இரவு வெறும் பிரஷ்ஷால் துலக்கி, ஒரு கிண்ணத்தில் நீர் விட்டு, ஒரு ஸ்பூன் டெஞ்சர் க்ளீனிங் பவுடர் சேர்த்து அதில் பல் செட்டைப் போட்டு வைக்கலாம். காலையில் நல்ல நீரில் கழுவி பொருத்திக் கொள்ளலாம். அணியும்முன் ஈறுகளை விரலால் மஸாஜ் செய்வது போல் நீவி விடுவது அவசியம்.

பற்களுக்கு ஏற்படும் நோய்களையும் பற்கள் நோயுறுவதால் அதன் மூலம் உடலுக்கு ஏற்படும் நோய்களையும் விளக்குங்கள், டாக்டர்?

டா: முதலில் பற்களுக்கு ஏற்படும் நோய்கள்: ரூட் ஆப்ஸிஸ் என்னும் பல்லின் வேரடியில் தோன்றும் கட்டி. இது முற்றிய நிலையில் சீழ் பிடித்து முகத்தில் தாடைப் பகுதியில் துளை ஏற்பட்டு சீழ் வெளியே கசியத் தொடங்கிவிடும்.
2. ரேம்பேண்ட் கேரீஸ் என்னும் பல் வியாதி குழந்தைகளுக்கே ஏற்படும். இது ஏற்பட்ட மூன்று மாதங்களுக்குள் எல்லாப் பால் பற்களும் சொத்தையாகிவிடும். பால் பண்டம் உண்டவுடன் பற்களை நீர் விட்டுக் கொப்பளித்துச் சுத்தம் செய்ய வேண்டும். அபூர்வமாகச் சிலருக்கே இந்நோய் வருகிறது. இவை தவிர,
3. ஆஸ்டியோமாலிடிஸ் எனப்படும் எலும்பு அரிக்கும் நோய். 4. ஈறுகளிலும், பல் வேர்களிலும் ஏற்படும் நீர்க்கொப்புளம், 5. பயோரியா இவைகளும் பற்களுக்கு

கல்கத்தாவில் பஸ்களில் பயணம் செய்யும் பொழுது மீதி சில்லறை இல்லாவிட்டால் கூப்பன் கொடுக்கப்படுகிறது. அதை வேறு எந்த பஸ்ஸிலும் வேண்டுமானாலும் பிறகு உபயோகிக்கலாம்!

— மஞ்சுதேவன்.

கவலையின்றி விளையாடு பாப்பா.



வளரும் குழந்தைகளுக்கு கீழே விழுவதோ சின்னச்சின்ன வெட்டுக்களோ. காயமோ் மிக மிக சகஜம்.

இலாஸ்டோப்ளாஸ்ட். இதன் உபயோகத்திற்காகவே. குழந்தைகள் தொற்று நோய் பரவாமல் பாதுகாக்கவும் செய்யும்.

இலாஸ்டோப்ளாஸ்ட் காயத்தை பாதுகாக்கிறது. அதிலுள்ள விசேஷ மருந்து காயத்தை குணப்படுத்துகிறது.

இலாஸ்டோப்ளாஸ்ட். உங்கள் குழந்தை சுதந்திரமாக ஓடி விளையாடட்டும். கவலையின்றி விளையாடட்டும்.

ஜே.எல். மாரிசன் சன் &
ஜோன்ஸ் (இ) லிட்.
க்ரிஸ்டல், 79,
டா. அன்னி பெசன்ட்
ரோடு, வொர்லி,
பம்பாய்-400 018.

Elastoplast®

மருந்து கலந்த பிரதம
சிகிச்சை பிளாஸ்திரி



Sista's-JLM-225/86 TAM A


"என் சமையல் திறன் வளர
உதவியது கோபி"
GOPI
Kitchen Machine
"சமையலறையில் எனக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்கிறது கோபி. ஏன் தெரியுமா?
கோபி மெஷினுடன் நவீன தொழில் நுட்பத்தையும், எந்தவிதக் கூடுதல் செலவின்றி, ஒன்றல்ல மூன்று ஜாடிகளும் கிடைக்கின்றது.
ஆகவே ப்ளெண்டிங், ட்ரை க்ரைண்டிங், வெட் க்ரைண்டிங், அல்லது எது வேண்டுமானாலும் கோபியில் மட்டுமே நொடிகளில் செய்ய முடியும். கூர்மையான பிளேடுகளைக் கையாளுதல் போன்ற தொல்லை எதுவும் இல்லை.
ஒவ்வொரு ஜாடியையும் தனித் தனியாக உபயோகிக்கலாம். அவற்றை தனித் தனியாக வாங்க வேண்டிய அவசியமில்லை. அதனால் எவ்வளவு பணம் மிச்சப்படுகிறது தெரியுமா!
கோபி மெஷின் மிகவும் சிறந்தது. உங்களுக்கு ஆயுள் முழுவதும் இலவசச் சேவையும் கிடைக்கின்றது.
ஒரு பெண்ணுக்கு இதைவிட வேறென்ன வேண்டும்? கோபி இருக்கும்போது நான் சமையல் கலை வல்லுனராகவே உணர்கிறேன்"
கோபியை இப்பொழுது உங்களுக்கு 'தெர்மாகோல்' பேக்கிங்குடன் அளிக்கின்றோம். தெர்மாக்கோல்பேக்கிங்கை 1) ஹாட்கேஸ் 2) ஐஸ் பாக்ஸ் 3) பிக்னிக் கேஸ் ஆக உபயோகிக்கலாம்.
• வேண்டுமானால் வாங்கக் கூடிய சேகரிப்பு பாத்திரம்
வாழ்நாள் முழுவதும் இலவச சேவை!
அரிய சிறப்பு இணைப்புகள்
மென் வடிப்பு சாதனம்
உலர் அரவை
மாமிசம் கொத்தி
சீவல் மற்றும் பொடித்தல் சாதனம்
சாறுபிழி சாதனம்
கர்நாடகா, ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டிற்கு விநியோகஸ்தர்கள்.
திரிப்தா மார்கெட்டிங் பி. லிட்.,
139, பாரதி சாலை (பைக்ராப்ட்ஸ் ரோடு)
சென்னை. போன்: 88599.
பெங்களூர் போன்: 563322 ஹைதராபாத் போன்: 231224
மாவு பிசை சாதனம்

ஏற்படும் சில நோய்கள்.

அடுத்து பற்களால் உடலுக்கு ஏற்படும் நோய்கள்:

இவை இரு வகைகளில் ஏற்படுகிறது. முதல் வகையில் கிருமிகள், சேதமுற்ற பற்களிலிருந்து உணவோடு சேர்ந்து உணவுப் பாதையை அடையும் வழியில் தொண்டை, நுரையீரல், வயிறு போன்ற பாகங்களைத் தாக்கலாம். தொண்டையில் டான்ஸில்ஸில் அழற்சி ஏற்படும். ஜீரணமின்மை, பேதி இவைகளும் ஏற்படும். இரண்டாவது வகையில் கிருமிகள் ரத்தத்தில் கலந்து ரத்தம் செல்லும் பகுதிகளிலெல்லாம் நோயை ஏற்படுத்தும். மூட்டுக்களில் ருமடாயிக் கம்ப்ளெயிண்ட்ஸ் தோன்றவும் இதயத்தை அடையும் போது ஸப் அக்யூட் என்னும் நோய் ஏற்படவும் வகை ஏற்படும்.

ஆரோக்கியமான பற்களைப் பெற எத்தகைய உணவை உண்ணலாம்? பற்களைப் பாதுகாக்கும் முறை என்ன?

டா: வைட்டமின்கள் ஏ, சி, டி மற்றும் கால்சியம், தாது உப்புக்கள் அடங்கிய பண்டங்களை உண்ண வேண்டும். பழங்கள், காய்கறிகள், முட்டை, பால், மீன் மற்றும் இறைச்சியில் பற்களை உறுதிப்படுத்தும் பொருட்கள் உள்ளன. உணவை நன்றாக மென்று உண்ண வேண்டும். சாப்பிட்ட பின் ஒரு துண்டு ஆப்பிள் அல்லது கேரட் பற்களைத் தூய்மையாக்கும். அடுத்து எந்த உணவையோ, பானத்தையோ உண்டபின் வாயைக் கொப்பளிப்பது அவசியம். காலையிலும், இரவிலும் தரமான பேஸ்ட், பிரஷ்ஷைப் பயன்படுத்திப் பற்களைத் துலக்க வேண்டும்.

பற்களைத் தேய்க்காதீர்கள். துலக்குங்கள். கீழ் வரிசைப் பற்களை மேல் நோக்கியும், மேல் வரிசைப் பற்களைக் கீழ் நோக்கியும் துலக்கவும். சிறு குழந்தைகளுக்கு இனிப்புகளை வாங்கிக் கொடுத்துப் பழக்காதீர்கள். பல் வலி வந்தால்தான் மருத்துவரை நாட வேண்டும்! என்றில்லாமல் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை பல் வைத்தியரிடம் பல் பற்றிய விவரங்களைக் கேட்டு அறிதல் நலம். பல் சொத்தை, ஈறு உபாதை, பல் வலி இவைகளை ஆரம்ப நிலையிலேயே மருத்துவ உதவியுடன் நீக்கி விட்டால் இயற்கையான பல்லுடன் நீண்ட காலம் வாழலாம். வருமுன் காப்பதே நலம்.

பேட்டி:

தாம்பரம் லக்ஷ்மிசங்கர்.

பாதாம் கொட்டை ஓடு பற்பொடி

உரித்துவிற்கப்படும் பாதாம் பருப்பை வாங்குவது கூடுமானவரை தவிர்க்கப் பட வேண்டும். அப்படியே உரித்த பருப்பையே வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் **அவைகளில் எண்ணெய் மினுமினுப்பு இருக்கிறதா என்று** சோதிக்க வேண்டும். எண்ணெயை நீக்கிய பாதாம் பருப்புக்களை நல்ல, அதாவது எண்ணெய் நீக்காத பருப்புக்களோடு கலந்து விற்பனை செய்கிறார்கள். ஆகவே ஓட்டோடு இருக்கும் பாதாமையே நாம் வாங்கி உடைத்து பருப்பை உபயோகிக்கலாம்.

இவ்வாறு பருப்பு எடுத்த பிறகு அந்த ஓடுகளை எறிந்து விட **வேண்டாம்**. ஒரு கைப்பிடி அளவுக்குச் சேர்ந்தவுடன், அவைகளைச் சுட்டுக் கரியாக்கவும். **கெரசின் ஊற்றிச் சுட வேண்டாம்.** குமுட்டி அடுப்பு உபயோகிப்பவர்கள், விறகு அடுப்பு உபயோகிப்பவர்கள், அதிலிருந்து ஒரு கட்டித் தணலை பாதாம் ஓடுக் குவியலின் நடுவில் வைத்து விசிறினால் எரிந்து கரியாகும். ஹாட் பிளேட் இருந்தால் அதன் மீது பாதாம் ஓடுகளைப் பரப்பி ஸ்விட்ச் ஆன் செய்து சிறிது நேரத்திற்குப் பிறகு ஆஃப் செய்தால் ஓடுகள் சுட்டுக் கரியாகும். அல்லது கேஸ் அடுப்பு இருந்தால் வாணலியை நன்றாகச் சூடாக்கி ஓடுகளைப் போட்டு வறுத்தாலும் சுட்டுக் கரியாகும்.

கரியான பிறகு அந்தக் குவியலை சுமார் மூன்று நாட்கள் வெயிலில் வைத்து எடுக்கவும். (வெயிலில் வைக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனாலும் வைத்தால் பற்பொடியினுடைய ஆற்றல் அதிகமாகும்.)

பிறகு அதை அம்மியில் வைத்து ஓரளவு பொடி செய்யவும். இப்போது, தேவையான உப்பு, சிறிது பச்சைக் கற்பூரமும், சேர்த்து மறுபடி பொடி செய்து சுத்தமான சீசாவில் எடுத்து வைத்துத் தினமும் இப்பொடியால் பல் துலக்கினால் வாய் நல்ல மணமாக இருக்கும். பற்களும் பளிரென்று ஆகும்.


— ராஜி.

புதிய மேம்படுத்தப்பட்ட கேர்ஃப்ரீ

கூடுதலான பாதுகாப்பு உணர்வுக்கு

இப்போது ஒப்பற்ற நீல நிற பிளாஸ்டி–ஷீல்டு அதிகரிக்கப்பட்டுள்ளது

அடுக்கின் அடியிலும் பக்கங்களிலும் சுற்றியுள்ள நீல நிற பிளாஸ்டி-ஷீல்டு இப்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. கறை ஏற்படாமல் தடுத்து கசிவு ஏற்படாத முழுமையான பாதுகாப்பு தருகிறது.



முழுமையான சுக உணர்வு. முழுமையான பாதுகாப்பு உணர்வு ஆகியவற்றைவிட வேறு ஒன்றும் அவ்வளவு முக்கியம் அல்ல.

கேர்ஃப்ரீ சானிடரி நாப்கின் ஒப்பற்ற மென்மையான ஒன்டாராப் கொண்டது இது ஈரத்தை உள் அடுக்கிற்குள் உறிஞ்சிக் கொண்டு உலர்வான சுகமான உணர்வைத் தருகிறது உங்களுக்கு—எப்பொழுதுமே. சரிப்படுத்தக்கூடிய டேப் முனைகள், நாப்கினை கச்சிதமாகவும், பாதுகாப்பு வசதியோடும் உங்களுக்கு பொருந்த வைக்கிறது.

கேர்ஃப்ரீ சுகம் மற்றும் கேர்ஃப்ரீ பாதுகாப்பு உணர்வைப் பெற்றிடுங்கள் இன்றே. உணர்ந்திடுங்கள் வேறுபாட்டுச் சிறப்பை.

Carefree®

சானிடரி நாப்கின்



முழுமையான சுகம், முழுமையான பாதுகாப்பு

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

10 உள்ள பேக்கிலும் சிக்கனமான 20 மற்றும் 30 உள்ள பேக்கிலும் கூடக் கிடைக்கின்றன. கேர்ஃப்ரீ ஸ்லெண்டர் மாது 10 உள்ள பேக்கில் கிடைக்கிறது

OBM/6306/R-4/TAM

டாக்டர் வெறுக்ஞர்

விமலா ரகுநாதன்

அவர் டாக்டர் வீடு என்றாலே கிலி பிடித்து ஓடி ஒளியும்போது, எனக்குச் சிரிப்பு அடக்க முடியாமல் வரும்.

எனக்கோ டாக்டர் வீடுகளும் மருந்துகளும் இன்ஜெக்ஷனும் சர்வ சாதாரணம். எந்தெந்த குறைபாடுகளுக்கு, எந்தெந்த மருந்துகள், அதன் 'முன்பின்' விளைவுகள் எல்லாம் அத்துப்படி. கல்யாணம் ஆனவுடன் சீருடன் வந்து இறங்கிய என் அன்றாட மருந்துப் பெட்டியைக் கண்டு அவர் நடுங்கிய நடுக்கம் இருக்கிறதே...

போதாக்குறைக்கு என் அண்ணன் ஒரு டாக்டர் வேறு...

''மருந்துக்கும் டாக்டருக்கும் ஏன் இப்படி பயப்படுகிறீர்கள்?''

''பயமா.... யாருக்கு...? எனக்கா... நோ... நோ... அதெல்லாம் இல்லை... ஒரு 'பிரிகாஷன்' தான்... உனக்குத் தெரியுமா... நான் இதுவரை... ஏன் என் தாத்தாவும் கூட ஒரு 'இன்ஜெக்ஷன்' கூடக் குத்திக் கொண்டதில்லை...'' அவர் இப்படி ஒரு தைரியத்துடன் பேசினாலும், அண்ணாவுக்கு முன்னாடி வருவதையே தவிர்த்தார். அதில் அண்ணாவுக்கு மிகவும் வருத்தம்.

''ஏன் மாப்பிள்ளை என் கூட பேசவே வருவதில்லை? ரொம்ப ஆசையுடன் வந்தேனே... ம்... ரொம்ப பயந்த சுபாவமோ... வேண்டுமானால் ஒரு 'சைக்கியாட்ரிஸ்டிடம் போகலாமா...?'' இது அவர் காதிலே விழுந்திருக்க வேண்டும். அண்ணா ஊருக்குப் போகும் வரை ஆளே காணவில்லை...

''நேற்றெல்லாம் ரொம்ப இருமலாக இருந்ததே... டாக்டரிடம்...''

அவர் கால்கள் ஜில்லிட்டு தரையோடு ஒட்டிக் கொண்டதை கவனித்து,

''போக வேண்டாமென்று, மிளகு கஷாயம் போட்டு வைத்திருக்கிறேன்...'' என்று மெதுவாகச் சொன்னதும், அவர் ஒரு வாய்க்கு நான்காகக் குடித்து முடித்தார்.

காலம் இப்படியே போய்விடுமா... தெர்மாமீட்டரை கேஸில் எப்படிப் போட வேண்டுமென்று கூடத் தெரியாத அவருக்கு சோதனையான ஒரு கட்டம் வந்தது. அவருக்கு வந்த சோதனை எனக்கும் வந்த மாதிரிதானே!

''சென்னையில் ஒரு மாதம் 'ட்ரெயினிங் காம்ப்பில்' போட்டிருக்கிறார்கள் அனு... ஜாலியாக ஹோட்டலில் இருந்துவிட்டு வரலாம்... நீயும் வா...''

நான் முறைத்தேன்.

''ஹோட்டலிலா... கடல் போன்ற வீடு இருக்கிறது. அப்பாவும் அம்மாவும் என்ன நினைத்துக் கொள்வார்கள்? அண்ணாவும் தான் என்ன நினைப்பான் உங்களைப் பற்றி...?''

நான் பேச்சுக்கு இரண்டு மூன்றாக மாத்திரைகளை விழுங்குவதை, ஒரு அச்சத்துடன் ஒதுங்கி வேடிக்கைப் பார்த்தவர், ''உங்கள் வீட்டிலா...? ஒருநாள் வேண்டுமானால் போய்ப் பார்த்துவிட்டு வரலாம்... அங்கே போய் எப்படி டேரா போடுவது...?'' என்று சொன்னாலும், உண்மை காரணம் எனக்கா தெரியாது...?

ஒரு வழியாகச் சமாதானப்படுத்தி, பல பிராமிஸ்கள் செய்து, எங்கள் வீட்டில் போய் இறங்கினோம்.

அண்ணாவின் நர்சிங் ஹோம் வேறு வீட்டு காம்பவுண்டுக்குள்ளேயே... வரும்போதே அவர் சொல்லி வைத்திருந்தார், 'நர்சிங் ஹோம்' வாடை கூடப் படாத அறையாகத் தனக்கு வேண்டுமென்று.

''வாங்கோ மாப்பிள்ளை...'' என்று அண்ணா உரிமையுடன் தோளைத்தட்டி அருகில் அமர்த்திக் கொண்டதும், அண்ணாவின் தோளில் ஆடும் ஸ்டெதாஸ் கோப்பையே அவர் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு ஒன்றும் சொல்லத் தோன்றாமல் உள்ளே சென்றேன்.

அடுத்த நாள் முதல் அவர் அட்டவணையே மாறிவிட்டது. அண்ணா எழுந்து கொள்வதற்கு முன்னமேயே 'ஜாகிங்' என்ற பெயரில் வெளியே சென்றுவிடுவார். அண்ணா காலை 'ரவுண்ட்'டுக்குப் போகும் சமயம் திரும்பி வந்து குளித்து சாப்பிட்டுவிட்டு ('ஒரே டெட்டால் வாசனை...' என்ற முணுமுணுப்பு வேறு...) அலுவலகம் சென்றால் மீண்டும்

> சாதாரணமாக எலுமிச்சம்பழ சர்ப்பத்தில் எவ்வளவுதான் சர்க்கரை போட்டாலும், அதன் பிறவிக் குணமாகிய துவர்ப்பு, தலைகாட்டத்தான் செய்கிறது. ஆனால், அதில் ஒரு சிட்டிகை டேபிள் சால்ட்டைக் கலந்து தயார் பண்ணிப் பருகும் பொழுது, இத்துவர்ப்பு மாயமாக மறைந்திருக்கும். மாறாக சுவை கூடியிருக்கும்.
>
> — திருமதி தேவனாதன்

அண்ணாவின் 'கன்சல்டிங்' சமயம்தான் வீடு திரும்புவார்.

என் மாமியாரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது அன்று. கடைசி நாத்தனாரின் குழந்தைக்கு ஆண்டு நிறைவு. அவரால் போக முடியாது. நானாவது போக வேண்டாமா?

அம்மாவிடம் ஆயிரம் முறை எச்சரித்துச் சொல்லிவிட்டு அவரிடமும் அடுத்த நாளே வந்து விடுவதாய்க் கூறிவிட்டு ரயிலேறினேன்.

திரும்பி வந்ததும் எனக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது.

"ஏன் அனு... மாப்பிள்ளையும் அவசரமாக ஊருக்குப் போய்விட்டாரே... நீ போன அன்று பெட்டி படுக்கையுடன் போனவர் தான்..."

எனக்குப் பகீரென்றது.

'பெட்டி படுக்கையுடனா...? எங்கே போய் விட்டார்...?' என்று தலைசுற்றலை மறைத்துக் கொண்டு,

"ஆமாம் அம்மா... ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். முதலில் சாதம் போடு.." என்று பேச்சை மாற்றிக் கவலையுடன் உள்ளே போனேன்.

அறைக்குள் சென்று உடைமாற்றி, ஏதாவது கடிதம் எழுதி வைத்திருப்பாரோ என்ற சந்தேகத்தில் தேடிய போது டெலிபோன் ஒலித்தது...

"யாரது அனுவா...?" கிசுகிசுத்தார் 'போனில்.'


எரிச்சலை அடக்கிக் கொண்டேன்.

"எங்கேயிருந்து பேசுகிறீர்கள்...?"

"உஷ்...கத்தாதே...பக்கத்துத்தெருநர்மதா ஹோட்டலிலிருந்து... உன் அண்ணா ஹாஸ்பிடலுக்குப் போயாச்சா... சரி, நானே வந்து விடுகிறேன்..."

விஷயம் ஒன்றுமில்லை. டேபிளில் சாப்பிடும் போது, இவர் பழம் வெட்டப் போய், கத்தி லேசாகப் பட்டவுடன், அண்ணா 'இன்ஜெக்ஷன் சிரிஞ்சுடன்' வந்திருக்கிறான். இவர் அன்றே ஓட்டம் பிடித்திருக்கிறார்...

நான் யாருக்கு என்ன 'சாக்கு போக்கு' சொல்வது என்று புரியாமல் விழித்தபடி உட்கார்ந்துவிட்டேன்.



பிளேக் பவர்ஹவுஸ் பேட்டரி



உங்கள் விலைமிகுந்த ஆடியோ சாதனங்கள் மற்றும் டார்ச்சுகள்
நீடித்து உழைக்க இந்த பேட்டரியை நீங்கள் நம்பலாம்

நிப்போ சூப்பர். ஜப்பானின் நேஷனல் கம்பெனியின் தொழில் நுணுக்க கூட்டுறவுடன் தயாரிக்கப்படுபவை டு-இன்-ஒன், டேப்ரிக்கார்டர்கள் மற்றும் மோட்டாரினால் இயங்கும் விளையாட்டுச் சாதனங்கள் ஆகியவற்றுக்காகவே விசேஷமாகத் தயாரிக்கப்படுபவை. ஹெவி-டியூடி உபயோகங்களுக்காக இந்த பேட்டரி ஒன்றே ISI யின் 9128 முத்திரையைப் பெற்றுள்ளது என்பதில் ஆச்சரியமில்லை.

National **நிப்போ**

IS: 9128
ISI

சூப்பர்

everest/86/INL/240 A/TAM

பூ அலங்காரம் செய்பவர்களுக்கு



அழகாக ஜோடனை செய்யப்பட்ட மலர்க் கொத்து ஒரு சாதாரண அறைக்கு உயிரளிக்கிறது. கண்ணுக்குக் குளுமையாகவும், அறைக்கே ஒரு புதுத்தன்மையை ஏற்படுத்துவதாகவும் இருக்கிறது.

அழகான மலர்கள் பல வெகு சீக்கிரத்தில் வாடிவிடும். பூவை வெட்டியதிலிருந்தே கொஞ்சம் கொஞ்சமாக அது உறுதி இழந்து, பின்பு துவண்டு வாடி, உதிர்ந்து விடுகிறது. சில விதிமுறைகளைப் பின்பற்றுவதனால், கத்தரித்த பூவின் **(Cut flowers)** வாழ் நாட்களைக் கொஞ்சம் அதிகரிக்க முடியும்.

செடியிலிருந்து வெட்டப்பட்ட பூவின் வாழ்நாள் அது செடியில் இருந்த நிலைக்கும், வெட்டியபின் இருக்கும் நிலைக்கும் உள்ள வேறுபாடுகளினால் நிர்ணயிக்கப்படுகிறது. மேலும் எந்த நேரத்தில், பூவின் எந்த வளர்ச்சி நிலையில் பறிக்கப்பட்டது என்பதும் முக்கியம். ரோஜாவைப் போல சில பூக்கள், சாயங்கால வேளைகளில் மொட்டாக இருக்கும் பொழுதே வெட்டப்பட்டால், பூ ஜாடியில், நிறைய நாட்கள் வாடாமல் இருக்கும்.

ஜாடியில் உள்ள பூக்களால், நீரை அதிகமாக உறிந்து கொள்ள முடியாது. பூவில் ஏற்கெனவே உள்ள போஷாக்கு சத்தும் குறைந்து கொண்டே வரும். அதனால் ஏற்றுக் கொள்ளப்படும் சிறிது நீரில் அதற்குத் தேவையான சத்து இருக்க வேண்டும். நீரை உறிந்து கொள்ள முடியாமல் ஏற்படும் தடையை அகற்ற வேண்டும். **'Distilled Water'** அல்லது நீரைக் கொதிக்க வைத்து ஆறிய நீரில் பூவை வைப்பது நல்லது. இதில் **Oxygen** குறைவு. இது **Stem**, நீரை உறிந்து கொள்ளச் சாதகமாக இருக்கிறது. நுண் கிருமிகள் உற்பத்தியைக் குறைக்கிறது. நீரில் **asortic acid** அல்லது சர்க்கரை சேர்ப்பது பூ இதழ்களிலிருந்தும், இலைகளிலிருந்தும் நீர் ஆவியாக வெளியேறுவதைத் தாமதப்படுத்துகிறது. அதனால் பூ வாடுவதை, அதன் இதழ்கள் உதிருவதைத் தள்ளிப் போடுகிறது. சர்க்கரை, Stem நீரை உறிந்து கொள்ளவும் உதவுகிறது.

பூவைப் பாதுகாக்கச் சில preservatives மேலை நாடுகளில் கிடைக்கின்றன. இவை அனேகமாக கிருமி நாசினியும், சர்க்கரையும், அமிலமுமே.

பலவிதமான வடிவத்தில், அளவில் பூ ஜாடிகள் உள்ளன. வைக்கப்படும் பூக்களின் தன்மை, அளவுக்குத் தகுந்த, பொருத்தமானதைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

செம்பு ஜாடியில் வைக்கப்படும் பூக்கள் அதிக நாட்கள் வாடாமல் இருக்கும்.

1. தோட்டத்திலிருந்து பூவை வெட்டுவதானால் அதிகாலையில், பூவில் இன்னமும் பனித்துளி இருக்கையிலேயே, வெட்டி உடனே ஒரு வாளியில் ஜலத்தில் வைக்கவும். வெயில் வேளையில் கத்தரிக்கக் கூடாது.

2. பூ சிறிது மொட்டாக இருக்கும் பொழுதே, முழுவதும் மலராத நிலையிலேயே கத்தரிக்க வேண்டும். அதற்காகக் காய் அரும்பாகவும் இருக்கக் கூடாது. **Gladioli** போன்ற தொடர்ப் பூக்களை முதல் பூ மலரும் நிலையில் வெட்டவும்.

3. தண்டின் அடிப்பாகத்திலிருந்து **(base of the stem)** ஒரு அங்குலம் விட்டு வெட்டவும். அடியில் உள்ள சில இலைகளை அகற்றிய பின் ஜலத்தில் ஒரு மணி நேரமாவது ஊற வைக்கவும். வெட்டிய அதிர்ச்சியிலிருந்து மீளவும், தேவையான நீரை உறிஞ்சிக் கொள்ளவும் இது அவசியம்.

4. பூ ஜாடியையும், **Pin-holder** ஐயும் நன்றாக அலம்பவும். பின் ஹோல்டர் இல்லாமல் வெறும் ஜாடியில் ஜோடிப்பதானால், அடைப்புக்கு பூவின் தண்டை உபயோகப்படுத்தாதீர்கள். வெறும் தண்டு மிகவும் சீக்கிரம் அழுகிப் போய்விடும். கம்பி, குச்சி, போன்றவற்றை வைக்கலாம்.

5. பூவை ஜாடியில் ஜோடனை செய்யுமுன் தண்டின் அடிப் பாகத்தில் சாய்வாக



(Slanting) வெட்டவும். கட்டையான தண்டுகளை (woody) லேசாகப் பிளந்துவிட்டபின் அல்லது சதைத்துவிட்டபின் தண்ணீர் வைக்க வேண்டும். இது அதிகப்படியான நீரை உறிஞ்சிக் கொள்ள உதவும்.

6. பால் வடியும் தண்டானால், சில விநாடிகள் வெந்நீரில் வெட்டிய நுனியை அமிழ்த்த வேண்டும், அல்லது அடுப்புச் சூட்டில் காட்ட வேண்டும். இது பால் வடிவதை நிறுத்தும். பால் எல்லாம் வடிந்துவிட்டால், பூ சில மணி நேரத்தில் வாடிவிடும் (Poinsetta, poppies).

7. Dahlia flower சீக்கிரம் வாடக் கூடியது. கைபொறுக்கும் சூடான நீரில் வைத்து சூடு ஆறும் வரை வைத்திருந்தால் புத்துணர்ச்சி பெறும். அதுபோல் நல்ல குளிர்ந்த நீரில் ஒரு மணி நேரம் வைத்திருந்தாலும் புதுமை பெறும்.

8. சுத்தமான தண்ணீரை உபயோகிக்கவும். தண்ணீரில் அமிழும் இடத்தில் தண்டிலுள்ள இலைகள் எல்லாவற்றையும் அகற்றி விடவும். தண்ணீரில் ஒரு ஆஸ்பிரின் மாத்திரையைப் போடுவது அதைச் சுத்தமாக்குவதுடன், கிருமிகள் வளர்வதையும் தாமதமாக்குகிறது. செம்புக் காசும் நீரைச் சுத்தமாக்கும்.

9. ஜாடியில் ஒரு அங்குல உயரத்திற்கு ஜலம் இருந்தால் போதுமானது. கிழங்கு வகைகளிலிருந்து வளரும் பூக்கள் எல்லாவற்றிற்குமே கொஞ்சமாகத் தண்ணீர் போதும். தண்டு சின்னதாக இருந்தாலும் நீளமானதாக இருந்தாலும், அதற்காகத் தண்ணீர் அளவை மாற்ற வேண்டியதில்லை.

10. தினமும் தண்ணீரை மாற்றி, தண்டின் அடிப்பாகத்தில் சிறிது வெட்டி, மறுபடி arrange செய்வது, பூக்களை வெகு நாட்களுக்கு வாடாமல் வைத்திருக்கும். ஜவந்தி, violet போன்ற பூக்களின் மேலே சிறிது நீர் தெளித்தால் (பகல் வேளையில் ஒன்றிரண்டு முறை) பூ fresh ஆக இருக்கும்.

11. ஜாடியில் வெட்டி வைத்த பூ என்றாலும், அதற்கும் சத்துணவு தேவை. ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 டேபிள் ஸ்பூன் விகிதம் சர்க்கரை கலந்து உபயோகிக்கலாம். Roses, aster, cosmos, marigold, sweet peas, tuberose போன்றவற்றிற்கு இது உகந்தது. சர்க்கரை கலந்த நீரை தினம் மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

12. Preservative வீட்டிலேயே தயார் செய்து வைத்துக் கொள்ளலாம்.

28 கிராம் hydrazine sulphate — ஐ ஒரு லிட்டர் தண்ணீரில் கரைத்து வைத்துக் கொள்ளவும்.

ஒரு லிட்டர் தண்ணீரில் இதை 2 டீஸ்பூன் விட்டு, இத்துடன் 2 கிராம் manganese sulphate டும் ஒரு டேபிள்ஸ்பூன் சர்க்கரையும் கலந்து பூ வைக்கும் ஜாடியில் உபயோகிக்கலாம்.

13. Gladioli, Lities போன்ற பூக்களுக்கு ஒரு லிட்டர் தண்ணீரில் 5 டேபிள் ஸ்பூன் (Vinegar) விநீகர் கலந்து உபயோகிக்கலாம்.

Chrysanthemum க்கு தண்ணீரில் இரண்டு சொட்டு clove oil ம், Rose, Tuberose, poinsettia வுக்கு ஒரு லிட்டர் நீரில் ஒரு டேபிள் ஸ்பூன் உப்பும் நல்லது. மற்ற பூக்களுக்கு உப்பு நல்லதல்ல.

— ஜெயா வி. ராமன்

4

துன்பம் நேர்கையில்

வித்யா சுப்ரமணியம்

"உன் பேர் முரளி. பி.எஸ்ஸி கெமிஸ்ட்ரி கிராஜுவேட். பஸ்ட் கிளாஸ்ல பாஸ் பண்ணணும்னுதான் பாடுபட்டே. சமயத்துல என்னை நெனச்சுண்டதால அதைக் கோட்டை விட்டுட்டு செகண்ட் கிளாஸ் வாங்கினே. ஒரு நிமிடம் நிறுத்தி விட்டு அவனைப் பார்த்தாள்.

அவன் சிரித்தான்.

"அம்மாவுக்கு ஒரே பிள்ளையாய் பொறந்திருந்தா சௌர்கயம். ஆனா நீ ரெண்டாவது பிள்ளை. பி.எஸ்ஸி கெமிஸ்ட்ரி படிச்ச நீ அதுக்குத் துளிக்கூட சம்பந்தமில்லாமல் ஒரு பெரியபப்ளிக்லிமிடெட் கம்பெனிலசீனியர் ஸ்டெனோவா ஆயிரத்துக்கிட்ட சம்பளம் வாங்கற.டிபார்ட்மெண்ட் எக்ஸாம் பாஸ் பண்ணிட்டதா கேள்வி. இன்னும் கொஞ்ச நாள்ல செக்ஷன் ஆபீஸராகவோ, பிராஞ்ச் மானேஜராகவோ பிரமோஷன் ஆயிடும்.

இதையெல்லாம் விட இன்னொண்ணு என்ன தெரியுமா? உன் குவாலிஃபிகேஷன், ஸ்டேட்டஸ், வாங்கற சம்பளம் இதெல்லாம் இருக்கற இன்னொருத்தன் இருந்தா இப்படி எங்கம்மாக்கு அடிக்கடி முறுக்குக்கும், வேலைக்கும் ஆர்டர் எடுத்துண்டு வந்து அலைய மாட்டான். ஆனா நீ அலையற. அதுக்குக் காரணம் நீ நல்லவன், கௌரவம் பார்க்காதவன்கறது இல்லை. நீ ஆர்டர் எடுத்துண்டு வர ஈஸ்வரி மாமிக்கு ஒரு பொண்ணு இருக்கா, அதான். ஆம் ஐ கரெக்ட்?" மூச்சு விடாமல் அவனைப் பற்றி ஒரு சரித்திரமே கூறிவிட்டு நிறுத்தினவள் அவனைப் பார்த்தாள்.

முரளி பெரிதாகச் சிரித்தான்.

"பரவாயில்லை சித்ரா. நீ என்னைப் பத்தி நிறையவே தெரிஞ்சுண்டு, நிறையவே நினைச்சிருக்க. தேங்க்யூ. கடசீல சொன்ன பாரு, ஒரு பொண்ணுக்காக வரேன்னு. அந்தப் பொண்ணுக்கும் என்னைப் பிடிச்சிருக்கான்னு வெளிப்படையா தெரிஞ்சா சந்தோஷமா போய்டுவேன்" சொல்லிவிட்டு கூர்ந்து நோக்கினான் அவளையே. அவள் கண் சிரித்தது.

முதன் முறையாக அந்தக் கண்களை சந்திக்க முடியாமல் தலை குனிந்தாள் சித்ரா.

இத்தனை நாளாக அடி மனசில் அவ்வப்போது எட்டிப் பார்த்த ஆசை இப்போது முரளி வெளிப்படையாக பேசி வரவழைத்த தைரியத்தில் கொழுந்து விட்டெரியவே வெட்கம் தாங்க முடியாமல் அவனுக்குக் காப்பி கொண்டு வரும் சாக்கில் எழுந்து உள்ளே போனாள்.

அவள் ஒன்றும் பேசாமல் உள்ளே போனதில் எதையும் புரிந்து கொள்ள முடியாமல் தவித்தான் முரளி.

பத்து நிமிடம் பத்து யுகமாக நகர்ந்த பின் சித்ரா காப்பியுடன் வெளியே வந்தாள்.

காப்பியை அவனிடம் கொடுத்தாள்.

"எதுவுமே சொல்லாம இருந்தா எப்படி சித்ரா? நீ பதில் சொன்னாத்தான் நான் இந்தக் காப்பியைக் குடிப்பேன்."

"என்ன முரளி இது. நீ ஒரு சுத்த இது. பி.எஸ்ஸி படிச்சிருக்கியே தவிர எதையும் புரிஞ்சிக்க மாட்டேங்கறயே."

"இப்ப நான் எதை புரிஞ்சுக்கலை?"

"பின்ன என்னவாம்? யாருமே இல்லாத வீட்டுல, தனியா இருக்கற ஒரு சின்னப் பொண்ணுகிட்ட வந்து என்னைப் பிடிச்சிருக்கான்னு கேட்கற. நியாயமா நான் என்ன செய்திருக்கணும் தெரியுமா? பளார்னு அறைஞ்சு கழுத்தைப் பிடிச்சு வெளில தள்ளி கதவை சார்த்தி இருக்கணும். ஆனா நான் அப்படி செய்யாம காப்பி குடுத்து உபசாரம்பண்றேன்னா அதுக்குஎன்ன அர்த்தமாம்?" கொஞ்சலாகக் கேட்டுவிட்டுச் சிரித்தாள்.

"அட..... ஆமாம்! நான் ஒரு சரியான ட்யூப் லைட் சித்ரா. இருந்தாலும் நீ ரொம்ப அழுத்தம். வாயைத் திறந்து உன்னைப் பிடிச்சிருக்குன்னு சொன்னா தேஞ்சாப் போய்டுவே?"

சந்தோஷம் தாங்காமல் அவள் தந்த காப்பியை ஒரே மூச்சில் குடித்துவிட்டு, "அப்போ நான் வரேன் சித்ரா. இனிமே இங்க் இருந்தா டேஞ்சர். அப்புறம் பார்க்கலாம்" நிறைவாகச்சிரித்துவிட்டுப்புறப்பட்டவனை கண்கொள்ளாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் சித்ரா.

* * * * *

உமா இண்டர்காமில் குருமூர்த்தியின் நம்பரை அழுத்தி அவருடன் தொடர்பு கொண்டாள். "சார் அந்த கடப்பா பில்லுக்கு பேமெண்ட் வந்துடுத்தா.- மோகன் நேத்திக்குச் சாயங்காலமே வந்திருக்கணுமே."

"அதுதான் உமா. அதைப் பத்திப் பேசத்தான் நானே அங்க வரணும்னு நெனச்சேன்." அவர் குரலில் பதட்டம் இருந்தது.

"சரி வாங்க" இண்டர்காமை வைத்தாள்.

சிறிது நேரத்தில் குருமூர்த்தி அவள் அறைக்கு வந்தார்.



''நாலு நாளைக்கு முந்தியே போன மோகன் அந்த ஆபீஸுக்குப் போய் சம்பந்தப்பட்ட ஆபீஸர்கிட்ட நம்ப செக் விஷயமா பேசி யிருக்கான். ஆனா உடனடியா பில் பாஸ் பண்ணி செக் தரதுக்கு அந்த ஆபீஸர் ஏதோ கமிஷன் கேட்டிருக்கான். மோகனுக்குக் கோபம் வந்திருக்கு.

'இதோ பாருங்க சார். டெண்டர் புரொ டியூஸ் பண்ணி எங்க ரேட் லோயஸ்ட்டா இருந்து, அதற்குப் பிறகுதான் எங்களுக்கு ஆர்டர் வந்திருக்கு. நாங்க சரக்கு அனுப்பி யிருக்கோம். இது கவர்ன்மெண்ட்டுக்கும் எங்களுக்கும் உள்ள ஒப்பந்தம். ஒப்பந்த பிர காரம் சரக்கு அனுப்பின பதினைந்து நாளில் பணம் கொடுக்கப்படும் என்பது ஓர்க் ஆர்டரிலேயே தெளிவா இருக்கு. அதற்குப் பிறகு நீ யார் நடுவில் கொடுக்க மாட்டேன் என்று சொல்ல? உனக்கு என்ன அதிகாரம் இருக்கு? மேலிடத்துல உன்னைப் பத்திச் சொன்னா உன் வேலைக்கே ஆபத்து வரும் தெரியுமா?''

என்று மிரட்டலாகப் பேசவே கடைசி யில் அந்த ஆள் ஆத்திரத்துடன் வேறு ஒன்றும் செய்ய முடியாமல் செக் போட்டுக் கொடுத்திருக்கிறான். செக் கையில் வந்த பிறகு மோகன் எனக்கு இந்த விஷயத்தை எல்லாம் டெலிபோன் பண்ணிச் சொன்னான். தான் உடனே கிளம்பி வருவ தாகவும் சொன்னான். ஆனால் இன்று அதி காலை எனக்கு வீட்டுக்குக் கடப்பாலேருந்து டிரங்க்கால் வந்தது. மோகனை யாரோ நாலைந்து பேர் அடித்துப் போட்டுவிட்டுப் போயிருப்பதாக. இப்போ மோகன் ஹாஸ் பிடல்ல இருக்கானாம்.''

இஸ் இட்! உமா அந்த விஷயத்தைக் கேட்டு அதிர்ந்து போய்விட்டாள். நியா யத்தைக் கேட்டுப் போராடினதற்கா மோகனுக்கு இந்தத் தண்டனை என்று ஆத் திரப்பட்டது அவள் மனது.

உடனடியாக நாராயணனிடம் கடப்பா விற்கு ஒரு வேன் ஏற்பாடு செய்யச் சொன்னாள்.

வேனில் போகும்போது உமா சிந்தனை வசமாகவே இருந்தாள். ஆபீஸில் ஒவ்வொரு வர் ஒன்றுக்கு இரண்டாக பொய்க் கணக்குக் காட்டி, பணம் பெற்றுக் கொள்ளும்போது மோகனின், நேர்மைக்காகப் போராடும் தன்மை அவளுக்கு ரொம்பப் பிடித்தது. அவன் மேல் ஒரு தனி மதிப்பை உண்டு பண்ணியது. அவன் நினைத்தால் பேரம் பேசி கொஞ்சமாகக் கமிஷன் கொடுத்து விட்டு ஒன்றுக்கு இரண்டாக்கி ஆபீஸில் வாங்கிக் கொள்ளலாம். அவன் அப்படிச் செய்யவில்லை. உமாவே எத்தனையோ பேரின் பொய்க் கணக்குகளை ஆதாரத்துடன் நிரு பித்து அவர்களைக் குற்றவாளியாக்கிக் கண்ட படி பேசியிருக்கிறாள்.

அவளைப் பொறுத்தவரை உண்மை, நேர்மை நியாயம் இதெல்லாம் அவள் கடை பிடிக்கும் சிறந்த குணங்கள். அவை மற்றவர் களிடம் இல்லை என்பது எந்தவிதத்திலாவது தெரிய வரும்போது அவளை அறியாமலேயே ஒரு புலியாக மாறி அவர்களை வார்த்தை களால் குதறி விடுகிறாள். அதனால் அந்த ஆபீஸில் தில்லு முல்லு செய்வது என்பது எல்லாருக்கும் சிம்ம சொப்பனம்தான்.

அதே நேரத்தில் ஊழியர்களின் நலன்களை யும் அக்கறையுடன் பரிசீலிப்பாள். லாபத் தில் நியாயமான போனஸை மேலிடத் திலிருந்து சண்டை போட்டாவது வாங்கிக் கொடுப்பாள். தவிர அவர்களுக்கு, திறமைக் கேற்ற அதிகபட்ச இன்ஸெண்டிவ், இலவச மருத்துவ வசதி இப்படி எத்தனையோ செய் திருக்கிறாள்.

அவளுடைய இந்த நல்ல பாரபட்சமற்ற தன்மைதான் அவளின் கண்டிப்புக்களைக் கூட மறந்து அவள் மேல் நல்ல அபிப்ராயத்தை எல்லாரிடமும் ஏற்படுத்தியிருந்தது.

இப்படிப்பட்ட உமா கம்பெனி வேலை யாக சென்று நியாயத்திற்குப் போராடி, ஜெயித்த பின் அடிபட்டுக் கிடக்கும் மோக னுக்காகத் துடித்ததில் வியப்பேதும் இல்லை.

ஆஸ்பத்திரியில் மோகன் தலையெங்கும் பலத்த கட்டுடன் இருந்தான்., உடம்பிலும் அங்கங்கு பிளாஸ்திரிகள். அடிபட்டு ரத்தம் செலுத்திய பிறகு ஒரே ஒரு முறை நினைவு வந்தபோதுதான் விஷயத்தைச் சொல்லி குருமூர்த்தியின் போன் நம்பரைக் கொடுத் திருக்கிறான்.

உமா டாக்டரைப் போய்ப் பார்த்தாள். அவர் அவளிடம் ஒரு பெட்டியைக் கொடுத்து திறந்து பார்க்கச் சொன்னார். அது மோகனின் பெட்டிதான்.

உமா பெட்டியைத் திறந்து பார்த்தாள். மேலாக அந்த செக்! உமாவுக்கு அழுகை வந்தது. தவிர ஒரு கேஸட்! இது என்ன என்று புரியாமல் டாக்டரைப் பார்த்தாள்.

'தலைச் சுற்றல்' அநேக காரணங்களால் ஏற்படுகிறது. அவற்றுள் ஒன்று மலச் சிக்கல். மலச்சிக்கல் உடையவர்களின் அருகே சென்றால், வாய் நாற்றம் நம்மைத் துரத்தியடிக்கும். இதைக் குணப்படுத்த எந்த மருத்துவரையும் நாட வேண்டாம் என்கிறார் சித்தர். ஆனால் மணத்தக்காளிக் கீரையைத் தேங்காய் சேர்த்துக் கூட்டோ, பொரியலோ செய்து தொடர்ந்து சாப் பிட்டு வந்தால், குடற்புண், வாய்ப் புண்கள் ஆறிப் போவதுடன் மலம் இளகி மலச்சிக்கலைத் தவிர்க்கும் என்கிறார் அவர்.

— திருமதி தேவநாதன்

வளரும் குழந்தைகளுக்கு சுவையான
துணையாக விளங்கும் பால் பிஸ்கட்



சத்துமிகுந்த,சுவையான பிஸ்கட். பிரிட்டானியா

''இன்று காலையில் ஒருமுறை அவருக்கு நினைவு வந்தபோது உங்களுக்கு டிரங்க்கால் பண்ணிச் சொல்லிவிட்டதாகச் சொன்னேன். நீங்கள் எப்படியும் வருவீர்கள் என்று நம்பினார் போலிருக்கிறது. ஆனால் அந்த நேரத்தில் தான் மறுபடியும் மயக்கமாகி விடுவோமோ என்ற பயத்தில் உடனே ஒரு டேப் ரெக்கார்டர் கொண்டு வரச் சொல்லி உங்களிடம் தான் கூற வேண்டியவற்றை இதில் பதிவு செய்து என்னிடம் கொடுத்து ஒப்படைக்கச் சொன்னார். அதற்குப் பிறகு அவருக்கு நினைவு தப்பி விட்டது. இன்னும் திரும்பவில்லை'' என்றார்.

உமா அந்த கேஸட்டை டேப் ரெக்கார்டரில் பொருத்தி ஓடவிட்டாள். ஒரு நிமிட இடைவெளிக்குப் பிறகு ரொம்பக் கஷ்டப்பட்ட குரலில் மோகன் பேசினான்.

''மேடம், நீங்கள் கண்டிப்பாக வருவதாக டாக்டர் சொன்னார். நீங்கள் வரும் நேரத்தில் எனக்கு நினைவிருக்குமோ அல்லது இறந்திருப்பேனோ தெரியாது. அதனால்தான் நினைவு இருக்கும்போதே என் எண்ணங்களை உங்களிடம் இதன் மூலம் பகிர்ந்து கொள்கிறேன்.

என் பெட்டியின் அடியில் ஒரு பர்ஸில் ஒரு பெண்ணின் புகைப்படம் இருக்கிறது. அந்தப் பெண் என் காதலி. வருங்கால மனைவி. நிச்சயம்கூட போன மாதம்தான் ஆனது. நான் பிழைப்பேன் என்று எனக்குத் தோன்றவில்லை. பிழைத்தால் கடவுளுக்கு நன்றி. இல்லையென்றால் அந்தப் பெண் வாழ்க்கை நாசமாகிவிடலாம். நிச்சயம் செய்த மாப்பிள்ளை இறந்ததால் அவளுக்குத் துக்கிரி என்ற பெயர் ஏற்பட்டுவிடக்கூடும். அப்படி எதுவும் நேராமல் அவளுக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும் பொறுப்பு உங்களுடையது.

உங்கள் மீது அளவு கடந்த நம்பிக்கை, மதிப்பு வைத்திருப்பதால்தான் என் இறுதி ஆசையை உங்களிடம் கூறி நிறைவேற்றச் சொல்லுகிறேன். எனக்காகச் செய்வீர்களா? சாகும் நேரத்திலும் அவளை என் மனைவியாகவே நினைக்கிறேன். எனவே சட்டப்படி எனக்குச் சேர வேண்டிய பணத்தில் பாதியை அவளிடம் கொடுக்கவும் ஏற்பாடு செய்யுங்கள். அவளுக்கு நல்வாழ்வு கொடுப்பவர்கள் யாராக இருந்தாலும் அவருக்கு என் நன்றி.

ஐந்து நிமிட ஓட்டத்தில் அந்த டேப் ரெக்கார்டர் மோகனின் எண்ணங்களை தெளிவாக தெரியப்படுத்திவிட்டு பிறகு ஒன்றுமில்லாமல் மௌனமாக ஓடியது.

உமா அதை நிறுத்தினாள். அவள் கன்னங்களில் கண்ணீர்க் கோடுகள்.

டாக்டரிடம் எப்படியாவது கொஞ்சம் நிலைமையை சிறிது தேற்றிவிட்டால் மெட்ராஸ் அழைத்துப் போய்விடுவதாகக் கூறிக் கெஞ்சினாள்.

டாக்டர் அதற்கு, ''அடி பலமாக இருக்கிறது. தவிர இது போலீஸ் கேஸ். சட்டப்படி அவர்களிடம் கொடுக்க வேண்டிய வாக்குமூலங்கள் எல்லாம் கொடுத்துவிட்டால் தான் டாக்டர் சர்டிஃபிகேட் தந்து உடனே அனுப்பி வைப்பதாகக் கூறினார்.

குருமூர்த்தியும் அவளும் அது விஷயமாக பல அதிகாரிகளைப் பார்த்தனர். ஏகப்பட்ட பணம் தண்ணீராகச் செலவழிந்தது. அனுமதியும் கிடைத்தது.

அன்றைக்கு மாலையே தகுந்த முதலுதவிகளுடன் ஒரு தனி ஆம்புலன்ஸில் மோகனைப் படுக்க வைத்து ஒரு டாக்டர் துணையுடன் அதிக அதிர்வில்லாமல் அந்த ஆம்புலன்ஸ் புறப்பட, குருமூர்த்தியைத் தாங்கள் வந்த வேனிலேயே கொஞ்சம் சீக்கிரமாகச் சென்று மெட்ராஸில் ஆஸ்பத்திரியில் சேர்க்க ஏற்பாடுகளைச் செய்யச் சொல்லிவிட்டு உமா மோகன் இருந்த ஆம்புலன்ஸிலேயே ஏறிக் கொண்டாள். அப்போதுகூட அவனைஎப்படியும்பிழைக்கவைத்துவிடலாம் என்றுதான் நினைத்தாள் உமா

(தொடரும்)

பாகற்காய் ஊறுகாய்



என்ன முகம் சுளிக்கிறீர்களா? கசக்குமே என்று நினைத்து. இதோ இப்படிச் செய்யுங்கள் கசப்பே இராது. பூச்சி புழு இல்லாத நல்ல பாகற்காய்களை வாங்கிச் சுத்தம் செய்து, பொடியாக நறுக்குங்கள். முற்றின விதைகளை அகற்றி விடுங்கள். தேவையான உப்பு போட்டு, இஞ்சி, பச்சை மிளகாய் நறுக்கிப் போடுங்கள். ¼ கிலோவிற்கு, ஆறு எலுமிச்சம் பழம் சாறு பிழிந்து விடுங்கள். இரண்டு, மூன்று நாளில் ஊறி விடும். தினம் குலுக்கி விடுங்கள். ஊறுகாய்ப் போல் தொட்டுக் கொள்ளலாம். கசப்பே இராது. குழந்தைகளும் சாப்பிடுவர். மேலும் இந்த முறையால் சத்தும் கெடாமல் இருக்கிறது. வயிற்றில் பூச்சி வராது. டயாபடீஸ் நோய் உள்ள பெரியவர்களுக்கும் நல்லது. மாகாணி கிழங்கு ஊறுகாய் இருந்தால் சிறிது கலந்து வைக்கவும். நீண்ட நாள் கெடாது. உடம்புக்கு நல்லது.

— இந்திராணி

பழைய சைக்கிள்

கமலா நடராஜன்

வேலுத் தாத்தாவுக்கு ஆசை ரொம்ப!

அந்த ஆசை காசிலோ, பணத்திலோ அல்ல. பேத்தி மீனுவிடம்தான்.

மீனுவுக்கு மூன்று வயதுதான் இருக்கும். அவருடைய ஒரே மகன் முத்துசாமியின் மகள். வயதைத் தாண்டிய துறுதுறுப்பு. கண்கள் காந்தமாக மற்றவரைக் கவர்ந்துவிடும். கோணல் சிரிப்பு மனதைக் கொள்ளை கொண்டு விடும்.

வருஷத்தில் இரண்டு மூன்று தடவை முத்துசாமி இங்கே வருவார். இரண்டொரு தினங்கள் தங்கிவிட்டுப் போவார். அவர்கள் பத்து நாளைக்கு இருந்து விட்டுப் பிறகு பட்டணம் புறப்படுவார்கள். அப்படி அவர்கள் தங்கிச் செல்வதற்கும் வேலுத் தாத்தாவின் பிடிவாதம்தான் காரணம்.

தாத்தாவின் மருமகளுக்குக் கிராமம் பிடிக்காது. கிராமத்தைவிட மாமியாரைப் பிடிக்காது!

ஆனாலும் எப்படியோ தன் மகனிடம் கெஞ்சிக் கூத்தாடி அவர்களைத் தன்னோடு தங்கச் செய்துவிடுவார் வேலுத் தாத்தா.

அவரை நான் தாத்தா என்று அழைப்பதைத் தவிர தனிப்பட்ட முறையில் எனக்கு அவர் உறவு இல்லை. இன்னும் சொல்லப் போனால் இந்த ஊரிலேயே எனக்கு உறவு யாரும் கிடையாது. எல்லாம் செத்துப் போன என் அம்மாவோடு போய்விட்டது. 'ராமசாமி' 'ராமு' என்பதெல்லாம் போய் இப்போது தாத்தா உள்பட அத்தனை பேருக்கும் நான் 'அடே பயலே' தான்!

எங்கள் கிராமத்திற்கும் டவுனுக்கும் ஏறக்குறைய இரண்டு கிலோ மீட்டர் தூரம் இங்கே உள்ளவர்கள் மளிகைச் சாமான் முதல் கறிகாய் வரை அங்குதான் போய் வாங்க வேண்டும். யாருக்காவது ஏதாவது உடம்பு சரி இல்லை என்றாலும் டவுனுக்குத்தான் ஓட வேண்டும். இப்படிக் காரியங்களை எல்லாம் பெரும்பாலான குடும்பங்கள் என்னை வைத்துத்தான் இங்கே இப்போது நடத்திக் கொண்டிருக்கிறது.

ஆனால் வேலுத் தாத்தா மட்டும் விதிவிலக்கு அவருக்கு உண்மையிலேயே என்னிடத்தில் ஒரு தனிப் பிரியம். ஒரு பிள்ளைக்குச் சமமாகக் கூட நடத்துகிறார் என்று சொல்லலாம். வீட்டில் ஒரு சின்னப் பண்டம் செய்தாலும் சரி, அதில் எனக்காக ஒரு பங்கை எடுத்து வைத்திருந்து எந்நேரம் ஆனாலும் கொடுத்துவிட்டுத்தான் படுப்பார்.

எழுபத்திரண்டு வயதிலும் வேலுத் தாத்தா பத்து காசு பொடி வாங்குவதற்காக தினம் என்னோடு இரண்டு கிலோ மீட்டர் நடக்கிறார்.

"ஏன் தாத்தா நானே வாங்கியாந்துடறேனே. இவ்வளவு சாமான்கள் வாங்கிவர்ற இடத்தில் இது என்ன பெரிய மூட்டை?"

தாத்தா சிரிப்பார்.

"இல்லேடா பயலே. உனக்கும் ஒரு பேச்சுத் துணையாய் இருக்கும். எனக்கும் தினம் கொஞ்சம் காலாற நடந்தாப் போல இருக்கும்."

அடுத்தத் தெரு போவதற்குக் கூட சைக்கிள் தேவைப்படும் மனிதர்களிடையே தாத்தா எனக்கு வித்தியாசமாகத் தெரிவார்.

இன்னொரு விதத்திலும் அவர் என் கூட வருவது எனக்கு உற்சாகமாய் இருக்கும்.

மனிதர் அந்த நாள் கதைகளைச் சொல்லத் தொடங்கிவிட்டால் வெயில் தெரியாது. நடை தோன்றாது!

நடுநடுவே கொஞ்சம் குடும்ப சமாச்சாரங்களும் வரும். அப்போது பேத்தியைப் பற்றிய அனுதாபமும் மருமகள் பற்றிய குறையும் நிறைய இருக்கும். மருமகள் மகா சோம்பேறியாம். தவிர, பெரிய இடத்துப் பெண் என்கிற திமிரும் அதிகமாம். முத்துசாமிக்கு மகளை கவனிக்கவே நேரம் கிடையாது. அவன் பிஸினஸ் மேன். அலைச்சல் அதிகம். வீட்டோடு கிடக்கும் இவள் அல்லவா குழந்தையின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டும்? ஆனால் அவளுக்கு சினிமா டிராமா என்று பொழுது போக்கவே நேரம் போதவில்லை. அத்துடன் வீட்டிலும் வீடியோ, டீ. வி. என்று ஊரைக் கூட்டி வம்புப் பேச்சு வேறு. வயசு நாலு ஆகப் போகிறது மீனுவுக்கு. இன்னும் இங்கிலீஷிலோ தமிழிலோ ஒரு எழுத்துத் தெரியவில்லை. எப்படித்தான் அவளை உருப்படியாக வளர்க்கப் போகிறார்களோ' — என்று சொல்லிக் கொண்டே வருவார்.

தாத்தாவின் கவலை எனக்கு அதிகப்படியாய்த்தான் தோன்றும். பெற்றவளுக்கா தெரியாது பிள்ளையை வளர்க்க. சொன்னால் வருத்தப்பட்டுக் கொள்வார் நமக்கு ஏன்

வம்பு?

போன வாரம்—

"என்ன தாத்தா?"

"மீனுவை இங்கேயே நாம் கொண்டு வந்து படிக்க வைத்தால் என்ன?"

சின்ன வயசுதான் எனக்கு. மிஞ்சிப் போனால் பதினைந்துக்குள்தான். ஜாதகமா கணக்கா என்ன இருக்கிறது. இருந்தாலும் எனக்கு அவர் யோசனை சரியாகப் படவில்லை.

முதலில் மீனு அம்மா அப்பாவைப் பிரிந்து இருக்க வேண்டும். இரண்டாவது தாத்தாவின் பொருளாதார நிலை. என்னதான் அவர்கள் உதவி இருந்தாலும் கூட ஒவ்வொன்றுக்கும் அவர்களையே எதிர்பார்த்திருக்க முடியுமா? ஆசை நெஞ்சு நிறைய இருக்கலாம். செயல்படுத்தக் காசு அல்லவா பிரதானம். இவருக்கே பென்ஷன் பணத்தில் காலம் நகருகிறது.

மீனு படிப்பதென்றால் பக்கத்து டவுனில் உள்ள நர்சரி ஸ்கூலுக்குத்தான் அனுப்ப வேண்டும். ஸ்கூல் ஃபீஸ், வண்டி வாடகை, புத்தகம், நோட்டு என்று தொட்டதற்கெல்லாம் காசு அறுந்துவிடும். இவருக்கு ஏன் இந்த வீண் ஆசை.

"என்னடா பயலே, என்ன சொல்றே?"

"அதில்லை தாத்தா. மீனு சின்னக்குழந்தை. பெத்தவங்களைப் பிரிஞ்சு உங்ககிட்டே இருப்பாளான்னு...?" முதல் சந்தேகத்தை வைத்தே அவரை முறியடிக்க நினைத்தேன்.

அவர் அதை லட்சியமே பண்ணவில்லை.

"அட முட்டாளே. பெத்தவங்களைக் காட்டிலும் அவளுக்குப் பிரியமே என்னிடம் தான். இங்கே வந்தா தாத்தா தாத்தான்னு எத்தனை பிரியமா ஒட்டிக்கறா? பார்த்திருப்பியே?"

மற்ற சந்தேகங்களை நான் கேட்கவில்லை. அது தாத்தாவுக்கு அவருடைய சூழ்நிலையின் பலவீனத்தைச் சுட்டிக்காட்டுவது போல் ஆகிவிடும் என்று பேச்சை வேறு எதிலோ திசை திருப்பிச் சமாளித்து முடித்தேன்.

ஆனால் இன்று அவரும் நானும் டவுனுக்குப் போய்க் கொண்டிருந்த போது—

"நாளைக்கு நான் பட்டணம் போறேண்டா பயலே."

"என்ன விசேஷம் தாத்தா?"



''முத்துசாமி வரச் சொல்லி லெட்டர் போட்டிருக்கான். காரணம் போனால்தான் தெரியும்.''

எனக்கு ஆச்சரியமாய் இருந்தது.

தாத்தாவின் பட்டணப்பிரவேசம் அபூர்வமாகத்தான் நிகழும். எப்போதாவது அதுவும் தொடர்ந்தாற்போல் பேத்தியைப் பார்த்துப் பல மாதங்கள் ஆகிவிட்டால் ஒரு தடவை போவார். நாலே நாளில் திரும்பி விடுவார். வந்த பிறகு அவர் சொல்லாமலே புரிந்து கொள்ளலாம். போன இடத்தில் அவருக்கு மரியாதை போதவில்லை என்று.

ஆனால் அழைப்பு என்று வந்து அவர் புறப்படுவது இதுவே முதல் தடவை.

என்னவாய் இருந்தால் என்ன? வழக்கம்போல் நாலு நாட்கள்தான். வந்தால் தெரிந்து விடுகிறது.

அதேபோல்தான் தாத்தா வந்தார்.

ஆனால் என்னையும் பாட்டியையும் திகைக்கச் செய்துவிட்ட ஓர் ஆச்சரியம், மீனாவும் அவரோடு வந்திருந்ததுதான்!

''மாமா, நா இனிமே தாத்தாவோடுதான் இருப்பேன். இங்கேயேதான் படிப்பேன்''— அவள் உற்சாகமாய்க் கூவ —

என் பார்வையைப் புரிந்து கொண்ட தாத்தா சொன்னார். ''என்னடா பயலே மலைக்கறே? மீனா சொல்றது உண்மைதான். அவ என் கூடத்தான் இருக்கப் போறா. அவ அப்பன் பர்மிஷன் கொடுத்தாச்சு. அம்மாவும் ஒத்துக்கிட்டுத்தான் அனுப்பி இருக்கா.''

மீனா தாத்தாவோடு ஐக்கியமாகிவிட்டாள். சாப்பாடு, குளியல், தூக்கம் எல்லாமே அவர் கூடத்தான். அப்பா அம்மாவைப் பார்க்க வேண்டும் என்கிற எண்ணமே ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அந்த அளவுக்குப் பாசத்திற்கு ஏங்கிய ஒரு ஜீவனாய் அவள் வளர்ந்திருக்க வேண்டும்!

மீனா நன்றாகவே படிக்கிறாள்.

மூன்று மாத காலத்திற்குள் படிப்பில் சராசரி முன்னேற்றத்தைத் தாண்டியவளாகவே தெரிகிறாள்.

வேலுத் தாத்தா ஜென்மமே சாபல்யம் பெற்றவர் போல் காணப்பட்டார். ஒரு சுற்றுப் பெருத்து விட்டவர் போல் கூடத் தெரிந்தார்.

''சொன்னயேடா பயலே. பார்த்தாயா? எங்க மீனாவை இப்படி வளர வேண்டிய குழந்தையைச் சரியாக வளர்க்க அங்கே ஆளில்லே!''

எப்படி வளர்த்தார்களோ, மாதா மாதம் ஒழுங்காகத் தாத்தா பெயருக்கு மணியார்டரையாவது அனுப்பிக் கொண்டிருந்தார்கள். இல்லாவிட்டால் சந்தி சிரித்துப் போகும் இவர் பாடு.

தாத்தாவையும் சும்மா சொல்லக்கூடாது. சத்திய சந்தர்தான். சுத்தமாக அவ்வப்போது கணக்கெழுதி விடுவார். தன் கைக் காசையும் சமயத்தில் செலவழிப்பாரே தவிர அவளுக்கென்று வரும் பணத்தில் ஒரு காசும் தொட மாட்டார்.

விளையாட்டாக ஒரு வருஷம் ஆகப் போகிறது.

இந்த ஒரு வருஷத்தில் முத்துசாமியும் அவர் மனைவியும் இரண்டு தடவைதான் பெண்ணைப் பார்க்க வந்து போனார்கள். மீனா வகுப்பில் மூன்றாவது ரேங்கில் இருந்தாள்.

''சீக்கிரம் முதல் ரேங்க் வந்துடணும். டியூஷன் வேணாலும் நர்சரி ஸ்கூல் மிஸ் ஒருத்தியையே ஏற்பாடு பண்ணிடுங்க'' முத்துசாமி சொல்லிவிட்டுப் போயிருந்தார்.


அந்த ஒரு வார்த்தை போதாதா தாத்தாவுக்கு. அடுத்த நாளே டவுனுக்குப் போய் அப்படி ஒருவரை ஏற்பாடு செய்தோம்.

ஒரு சிரமம்.

டியூஷன் முடியும் வரை ஸ்கூல் வண்டி காத்திருக்க முடியாது. எனவே தினமும் சாயங்காலம் நான்தான் போய் மீனாவை அழைத்து வருவேன். அதற்கென்றே தனியாக ஒரு பழைய சைக்கிளும் வாங்கிக் கொடுத்து விட்டார் தாத்தா.

திடீரென்று தாத்தாவிடம் நானூறு ரூபாய்க்கு ஏது வழி?

பாட்டியைப் பார்த்த பிறகுதான் புரிந்தது. அவள் கழுத்தில் தனியே கிடந்த ஒரே ஒரு செயினும் அடகுக் கடைக்குப் போய் விட்ட விஷயம்.



இஞ்சி லேகியம்

'எட்டு பெற்ற பின்னும் கட்டுக் குலையாத தேகமா?' என்று ஆச்சரியப்பட்டுப் போவது என் அக்காவின் பெண்ணைப் பார்த்துத்தான். அதன் காரணத்தை அவளிடமே கூச்சமின்றிக் கேட்டுவிட்டேன். ஆனால் அவளுக்கோ ஏகப்பட்ட பெருமை. உடனேயே இஞ்சி லேகியத்தின் 'பயோடேட்டா'' வையே தயாரித்து, எனக்குக் கொடுத்துவிட்டாள்.

இஞ்சி லேகியத்தின் முக்கிய குணம் நரம்பு மண்டலத்தை கோட்டையாக வைத்திருப்பது தான். எனவே நரம்பு மண்டலம் உறுதியாக இருப்பின் பல் விழாது. பார்வை கெடாது. வார்த்தை குழறாது. என்றும், எப்பொழுதும் ஆரோக்கியம்தான். இஞ்சி லேகியத்திற்குத் தேவையான பொருட்கள்:

இஞ்சி(சதைப்பிடிப்புள்ளது)—350 கிராம்
மிளகு, திப்பிலி. சுக்கு தலா — 50 கிராம்,
கிராம்பு. சீரகம், ஏலம், கோஷ்டம், வால் மிளகு, சாதிக்காய்
ஜாதி பத்திரி வகைக்கு தலா — 25 கிராம்,
பசும்பால் — ½ லிட்டர்,
கற்கண்டு — 750 கிராம்,
தேன் — 100 கிராம்.

செய்முறை:

இஞ்சியை அலம்பி, தோல் சீவி, சிறிய துண்டுகள் ஆக்குங்கள். சிறிது நெய்யை, வாணலியில் இட்டு, பொன்னிறமாக வறுத்தெடுங்கள்., பின் தூளாக்கிக் கொள்ளுங்கள்.

• மற்ற சாமான்களை, எண்ணெய் விடாமல் லேசாக வறுத்து, பொடி செய்து கொள்ளுங்கள்.

கற்கண்டைப் பொடி செய்து, காய்ச்சிய பாலில் போட்டு, கிளறுங்கள். பாகு பதத்தில் வந்ததும், இஞ்சிப்பொடி, கடைச்சரக்குப் பொடிகளைப் போட்டு லேகியப் பதம் வரும் வரை கிளறிக் கொண்டே இருங்கள். பின் தேனையும் அதில் போட்டு, சிறிது நேரம் கிளறி, இறக்கி வையுங்கள்.

சுத்தம் செய்யப்பட்ட வாயகன்ற ஜாடியில் மேற்படி லேகியத்தைப் போட்டு, இறுக்கமாக மூடியால் மூடி விடுங்கள். பின், தினமும் ஒருவேளை, நெல்லிக்காய் அளவிற்கு இதை விழுங்கி, பசும்பால் அருந்த வேண்டும். உங்கள் உடல் எஃகாக, வனப்புடன் டால் அடிக்கும். கை உதறாது. வார்த்தை குழறாது. பிறகு ஜே! ஜே! இஞ்சி லேகியத்திற்கு ஜே!

— திருமதி தேவனாதன்.

ஆண்டுத் தேர்வுக்கு இன்னும் சில தினங்களே இருந்தன.

கொஞ்ச நாட்களாக மீனா சற்றுச் சோர்வாகத் தெரிந்தாள். அடிக்கடி உடல்நிலை பாதிக்கப்பட்டாள். பாட்டியின் கை வைத்தியங்கள் பலன் தரவில்லை.

பாவம் குழந்தை வரவர மெலிந்து கொண்டே இருக்க —

தாத்தா துடித்துப் போய் விட்டார்.

ஆறு மாதத்திற்கு மேல் இருக்கும். மீனாவின் அம்மாவோ அப்பாவோ இங்கு வந்து பார்த்து விட்டுப் போய். இந்த நிலையில் பட்டணத்திற்கு எழுதி அவர்கள் வேறு பதறிக் கொண்டு ஓடி வந்தால்...

எனவே அந்த உத்தேசத்தைத் தற்காலிகமாகத் தள்ளி வைத்துவிட்டு டவுனில் குழந்தைகளுக்கென்றே தனியாக இருக்கும் டாக்டரிடம் மீனாவைக் கூட்டிச் சென்று காட்டினோம்.

எக்ஸ்ரே முதல் எல்லாவித டெஸ்ட்களும் முடித்த டாக்டர், கடைசியில் 'கவலைப்பட எதுவும் இல்லை' என்று சொன்ன பிறகு தான் தாத்தாவுக்கும் எனக்கும் உயிரே வந்தது.

எனினும் அவள் உடல்நிலை விரைவில் தேற வேண்டுமே?

தொடர்ந்து மருந்து, மாத்திரை, ஊசிகள்.

''ஏன் தாத்தா இதற்கு மேலும் பணத்துக்கு என்ன பண்றது?

பதில் பேசாமல் பாட்டியின் வளைகளையும் கழற்றி வந்து கொடுத்து விட்டார் தாத்தா.

''வச்சு வாங்கிட்டு வா.''

எப்படியோ மீனா பரீட்சைகளைச் சிறப்பாகவே செய்து முடித்தாள்.

''என்ன இருந்தாலும் சின்னக் குழந்தை தாத்தா. வெளியில் சொல்லத் தோணலைன்னாலும் உள்ளூர ஏக்கம் இருக்கத்தான் செய்யும். அதனாலேயே உடம்புக்கு வந்திருந்தால் கூட ஆச்சரியப்படறதுக்கில்லை. ஊருக்கு லெட்டர் எழுதி உடனே அவங்களை வரவழைங்க.

வேணுத் தாத்தாவுக்கே மனசு வந்து எழுதி விட்டார்.

அடுத்த நான்கு நாட்களில் முத்துசாமியும் அவள் மனைவியும் வந்து சேர்ந்தார்கள்.


நான் நினைத்தபடி இல்லாவிட்டாலும் அதில் பாதி அளவு உண்மை இருந்தது.

மீனா அவர்களைக் கண்டதும், ''டாடி, மம்மி'' என்று ஓடிப் பிடித்துக் கட்டிக் கொண்டபோது அவள் முகத்தில் ஒரு தனி பிரகாசம், தெளிவு.

இந்தத் தடவை முத்துசாமியும் அவர் மனைவியும் ஒரே நாள்தான் தங்கினார்கள். என்ன காரணமோ அடுத்த நாள் காலையிலேயே புறப்பட்டு விட்டனர்.

வழக்கம் போல் நான் போய் பழைய பட்டாமணியார் வீட்டு மாட்டு வண்டியை இரவல் கேட்டு ஓட்டி வந்தேன்.


கோத்ரெஜ் படைத்துள்ள சுகபோகத்தின் சிகரம் : மார்வல் லக்ஷரி சோப்
Godrej Marvel
செழுமையான
கிரீம்போன்ற நுரை
மற்றும் மனம் மயக்கும் நறுமணம்
விலை (75 கிராம்) : ரூ. 4.50 (வரிகள் தனி)
GS 4079 TAM



daCunha/GCM/123/85/TM

''ஆறும் தேதி ஸ்கூல் திறக்கிறதாம். முதல் தேதியே கொண்டு வந்து விட்டுடுங்க'' — தாத்தாவின் கண்களில் பேத்தியைப் பிரியும் ஏக்கம்.

''நான் வந்துடுவேன் தாத்தா. எனக்கு இங்கதான் பிடிக்கும். பாட்டி, இந்த மாமா, எங்க மிஸ் எல்லாரையும் பார்க்கணும். இங்க தான் படிக்கணும்'' — என்று மீனு கூறிய போது —

தாத்தாவின் கண்களில் பெருமிதம்.

வண்டியைக் கொஞ்ச தூரம் ஓட்டியிருப் பேன்.. உள்ளே பேச்சு தொடங்கியது.

''மீனுவைப் பார்த்தீங்களா?''

''ஏன், என்ன அவளுக்கு?''

''என்ன அவளுக்கா? உங்க கண்ணுக்குக் கண்ணாடிதான் மாத்தி ஆகணும். ஆள் அரை உடம்பா இல்லே?''

''அதுதான் அடிக்கடி உடம்புக்கு வந்து சிரமப்பட்டாளாமே?''

''உங்க அப்பாவைப் பார்த்தீங்களா?''

''என்ன சொல்றே நீ?''

''நல்ல தெளிவுன்னு சொல்றேன். மாசா, மாசம் நாம அனுப்பிச்ச மணியார்டர் பணத்தில்தான் இவர்களின் குடும்ப வண்டியே நகர்ந்திருக்கு. இல்லேன்னு ஒரு திரு காணிக் காம்புக்குக் கூட கதியத்துப் போன வீட்டில் சோத்துக்கு வேறு வழி!''

எனக்கு அங்கேயே வண்டியை நிறுத்தி விட்டு இறங்கிப் போய் விடலாமா என்று தோன்றிற்று.

''சே, அப்பாவை அப்படி எல்லாம் சொல்லாதே'' — முத்துசாமி பதில் சொன்னாரே தவிர, அவர் பேச்சிலும் முழு நம்பிக்கை தொனிக்கவில்லை.

''அது என்னவோ, மீனு இங்கே படிச்சது போதும். இனிமே நாம அனுப்பவும் வேணாம். அவளைத் துரும்பாக்கி 'இது'கள் பெருக்க வும் வேணாம்!''

முத்துசாமி வாய் திறக்கவில்லை.

மீனுவுக்கு மற்றது புரிந்ததோ என்னவோ, ''இனிமே இவளை அனுப்ப வேண்டாம்'' — என்று தன் அம்மா சொன்னதைக் கேட்டு அழ ஆரம்பித்தவள் பஸ் நகர்ந்தும் ஓய வில்லை.

''ஏண்டா பயலே சைக்கிளை விக்க ணும்கறே?'' — தாத்தா ஒன்றும் புரியாமல் கேட்க —

''இல்ல தாத்தா, பழைய சைக்கிள் என்ன தான் கண்டிஷனா உழைச்சாலும் அதுக்கு மதிப்பு இருக்கிறதில்லே. இன்னும் ஏதாவது செலவு வைக்குமோன்னுதான் பிறத்தியார் பயப்படறாங்க. அதனாலதான் சொல்றேன். இருக்கிற மதிப்பும் போறதுக்குள்ளே இதை வித்துடறது நல்லது.''

அன்றைக்கே ஒரு ஆளை அழைத்து வந்து நானூறு ரூபாயைத் தாத்தாவிடம் கொடுத்து சைக்கிளைப் பேரம் பேசி முடித்தேன்.

''சரிடா பயலே. லீவு முடிஞ்சு மீனு வந்தா?''

சட்டென்று என் கண்கள் பனித்து விட் டன.

''முதலில் பாட்டியின் நகையை மீட்டு டுங்கோ'' — ஏதோ கேள்விக்கு என்னவோ பதிலை நான் சொல்லிவிட்டு நழுவ —

தாத்தா மேலும் புரியாமல் விழித்தார்.

புரியட்டும், மெள்ளப் புரியட்டும். வயதான காலத்தில் திடீர் அதிர்ச்சி எதுவும் கூடாது.

மூச்சுப் பிடிப்பு

மிளகை ஒரு சிறிய கரண்டியில்
எடுத்துக் கொண்டு, அதில் பாதி சுக்கை
எடுத்து இரண்டையும் நன்கு அம்மியில்
வைத்து நைஸாக அரைக்கவும். ஒரு
சுத்தமான வாணலியில் இட்டு
அடுப்பில் வைத்துச் சுண்டக் காய்ச்சி
எடுக்கவும். அதை இறக்கும் போது
சிறிது கல்பூரம் போட்டுக் கரைக்கவும்.
இளஞ்சூடாக இருக்கும் பதத்தில் மூச்சுப்
பிடிப்பு உள்ள இடத்தில் பற்றுப் போட்
டுக் கொண்டால் இதமாகவும் சுகமாக
வும் இருக்கும். மூன்று முறை இவ்வாறு
விடாமல் பற்றுப் போட்டுக் கொண்
டால் மூச்சுப் பிடிப்பு நன்கு குணமா
கும்.

— லக்ஷ்மி தியாகராஜன்

மூச்சுத் திணறல் நிற்க...!

இஞ்சியைத் தோல் நீக்கி சிப்ஸ் போல் நறுக்கி, கழுவி, பின் இட்லிப் பானையில் வைத்து, இட்லி வேக வைப் பது போல், நீராவியில் வேக வைத்து எடுத்து ஒரு நல்ல துணியின் மேல் போட்டு நிழலில் காய வைத்து எடுத்து ஒரு பாட்டிலில் போட்டு, அவை மூழ்கும் அளவுக்கு நல்ல தேனை ஊற்றி வைத்துக் கொண்டு தேவையான போது சாப்பிட்டால் வயிறு உப்புசம் வரும் போது எழும் மூச்சுத் திணறல் நிற்கும்!

— ராஜேஸ்வரி



பெண்கள் நிர்வாகத் துறையில்...

பெண்களால் நிர்வாகத் துறையில் சரியாக செயல்பட முடியுமா? என்பது கேள்விக் குறிதான். பெண்கள் சட்டென்று எந்த முடிவும் எடுக்க முடியாமல் திணறக் கூடியவர்கள். எனவே நிர்வாகத் துறையில் பெண்களால் பிரகாசிக்க முடியவில்லை என்று ஒரு அமெரிக்க ஏடு கருத்து தெரிவித்துள்ளது.

இந்திரா காந்தி இந்த நாட்டின் பிரதமராக இருந்து பிரச்னைகளைச் சமாளிக்கவில்லையா? என்று கேட்கலாம். எல்லா பெண்களுக்குமே இந்திரா காந்தியின் மனோ பலம் வராது. அது மட்டுமல்ல இந்திராவின் பின்னால் ஆலோசனை சொல்ல எத்தனை ஆண்கள் இருந்தார்கள் தெரியுமா?

நிர்வாகத் துறையில் குறிப்பாக பொது மற்றும் தனியார் கம்பெனிகளில் சேர்மன் மற்றும் போர்ட் ஆப் டைரக்டர்களாக பெண்கள் இருப்பதில்லை. ஒரு சில கம்பெனிகளில் அதுவும் ஒரு சில பெண்கள் மட்டும்தான் முக்கிய பதவிகளில் இருக்கிறார்கள். அந்தப் பெண்கள்கூட மற்ற போர்ட் ஆப் டைரக்டர்களின் சொந்தக்காரர்களாகத்தான் இருப்பார்கள். மேனேஜ்மெண்ட் எத்திக்ஸ் என்று ஒன்று இருக்கிறது. பலதரப்பட்ட மனிதர்களுடன் பழகக் கூடிய தன்மை என்று கூடச் சொல்லலாம். கூச்ச சுபாவம் பெண்களுக்கு இயற்கையிலேயே அரும்பி இருப்பதால் அவர்களால் நிர்வாகத்தில் பணிச்சிட முடியாமல் போகிறது என்று லண்டனில் கூட ஒரு ஆய்வில் கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

நிர்வாகம் என்பது சின்ன வார்த்தை தான். ஆனால் அந்தப் பணி பெரியது மட்டுமல்ல. கரடு முரடானதும்கூட! சில ரகசியங்கள் நிர்வாகத் துறையினரால் காக்கப்பட வேண்டும். ரகசியத்துக்கும் பெண்களுக்கும் தான் மலைக்கும் மடுவிற்கும் உள்ள தூரம் ஆயிற்றே! ரகசியத்தைக் காக்க பெண்களால் முடியாத விஷயம். பெர்னாட்ஷா ஒருமுறை தமாஷாகக் குறிப்பிட்டார்.

"ஒரு விஷயம் வேகமாக பரவ வேண்டும் என்று நீங்கள், விரும்பினால் அந்த விஷயத்தை ரகசியம் என்று சொல்லி பெண்களிடம் சொல்லுங்கள். விஷயம் வேகமாகப் பரவும்."

நிர்வாகத் துறையில் இருக்கும் பெண்கள் ரகசியத்தைக் காப்பது என்றால் அதைத் தன் கணவர் குடும்பத்திடம் கூடச் சொல்லக் கூடாது! இது பெண்களால் முடியக் கூடிய காரியமா?

அயல்நாட்டு பத்திரிகையாளர் ஒரு பிரபல பெண் தொழில் அதிபரை பேட்டி கண்ட

போது அந்தப் பெண்மணி சொன்ன விஷயங்கள்:

"நிர்வாகச் சிக்கல்களோ அல்லது நிதி நிலைமை மோசமாகும்போதோ, அல்லது தொழிலாளர் பிரச்னைகள் வரும்போதோ கவனமாக சில முடிவுகளை எடுக்க வேண்டும். அப்படிப்பட்ட சமயங்களில் நான் தனிமையில் உட்காருவதைவிட என் கணவருடன் உட்கார்ந்து கொண்டுதான் விவாதிப்பேன்."

தொழிலாளர் பிரச்னை, லாக் அவுட், வேலை நிறுத்தம் என்று வரும்போது தாளுகவே கோஷங்கள் பிறக்கும். ஒரு பதட்டமான சூழ்நிலை கூட உருவாகலாம். கம்பெனியின் மேல் அதிகாரி என்ற நினைப்பில் அந்தச் சூழ்நிலையில் ஒரு ஆண் போவதைப் போன்று பெண் நிர்வாகிகளால் போக முடியாது. உடல் கூற்று ரீதியாகவும், பெண்களின் மன நிலை காரணமாகவும் பதட்டமான சூழ்நிலை கொண்ட இடங்களுக்குப் போவது நல்லதில்லைதான்.

Management is a continuous process என்பார்கள். அதாவது நிர்வாக மேம்பாடு என்பது



..பிரகாசிக்க முடியுமா?

நீண்ட கால ஒரு திட்டம். இந்த நீண்ட கால திட்டத்தில் அடிக்கடி கவனம் இருந்தால்தான் அதில் வெற்றி பெற முடியும். பெண்களால் நீண்ட காலத்திற்கு ஒரு திட்டத்தில் கவனம் செலுத்த முடியுமா? என்பதும் கேள்விக் குறிதான். குழந்தைப் பேறு, தாய்மை இவை பெண்களை நீண்ட கால விடுமுறைக்கு இட்டுச் செல்பவை. கம்பெனியிலோ அல்லது தொழிற்சாலையிலோ சில மாத காலத்திற்கு தொடர்பு விட்டுப் போனால் மறுபடியும் நிர்வாக பொறுப்புக்களை ஏற்க கொஞ்சம் சிரமம் இருக்கத்தானே செய்யும்.

இப்போதுதான் எல்லா மே கம்ப்யூட்டர் ஆகிவிட்டதே இதில் ஆண் என்ன? பெண் என்ன? என்று கேட்கத் தோன்றலாம். கம்ப்யூட்டர் மயமாக ஆகிவிட்டது உண்மைதான் ஆனாலும் மனித மூளை சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம். ஆண்கள் மூளையைப் போல் பெண்கள் மூளை சுறுசுறுப்பானது இல்லை. பௌதீகம், உடல் கூறு சம்பந்தமாக கூட இதற்கு ஆதாரமிருக்கிறது.

நிர்வாகத் துறையோடு சம்பந்தப்பட்ட நூறு ஆண்களிடம் கேட்டபோது சுமார் இருபது பேர்தான் பெண்கள் நிர்வாகத்துறைக்கு வருவதை ஆமோதித்தார்கள். மற்றவர்கள் எல்லோருமே இந்தக் கட்டுரையின் கருத்தை ஒட்டித்தான் பதில் அளித்தார்கள். பெண் வாசகிகளாகிய நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்?

தொகுப்பு:

கீழாம்பூர் சங்கரசுப்ரமணியன்

நீங்கள் மாதர் சங்க உறுப்பினரா? போட்டியில் பிரசுரிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரை

சங்கடத்துடன் ஒரு டூர்!

எங்கள் சைதாப்பேட்டை மாதர் சங்கத்தில் போன வருடம் குருவாயூர் சென்ற பொழுது, இரவு தங்க முன்னரே ஏற்பாடு செய்யாததால் ரொம்பக் கஷ்டப்பட்டோம். அந்த அனுபவத்தால் இந்த வருட மைசூர்ப் பிரயாணத்திற்கு ஏகப்பட்ட முன்னேற்பாடுகள்...

நாங்களும் பல நல்ல "டூரிஸ்ட்" பஸ் நிறுவனங்களுக்கு அலைந்து, கடைசியில் ஓர் அன்பர் மூலம் ஒரு பஸ் நிறுவனத்தில் பணம் செலுத்தி, அவர்களிடம் பல முறை சென்று நல்லதொரு பஸ்ஸினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டோம்.


ஏப்ரல் மாதம் 30 ந் தேதி மாலை ஐந்து மணியளவில் பஸ் வந்துவிடும் என்று எல்லோரிடமும் அறிவித்தோம். அனைவரும் திரளாக வந்துவிட்டனர். ஆனால் பஸ்ஸோ வரும் வழியாகத் தெரியவில்லை. பலமுறை 'போன்' மூலமும் நேராகவும் அவர்களிடம் விசாரித்தோம். ஒருவழியாக ஒன்பதரை மணியளவில் பஸ் வந்து சேர்ந்தது. எங்களுக்கோ ஓரே அதிர்ச்சி.

பஸ் பார்க்கவே நன்றாக இல்லை. சரி, சரி. நாம் ஏற்பாடு செய்தது. நாமே குறையைச் சொல்லக் கூடாது என்று எங்களுக்குள் தீர்மானித்து, எல்லோரையும் இருக்கையில் அமரச் செய்தோம். ஒருவர் முகமாவது சந்தோஷமாக இல்லை. எல்லோருக்கும் நாம் நல்லபடியாகத் திரும்பி வருவோமா? எனச் சந்தேகம் வேறு. பஸ் ஒருவழியாக எங்கள் சங்கத்தின் வாயிலில் வீற்றிருக்கும் பெருமாளை வலம் வந்து புறப்பட்டது. நாங்களும் 'ஆண்டவா! காப்பாத்தப்பா!' என மனமுருக வேண்டிக் கொண்டோம். உடனே நாங்கள் அனைவரும் எங்கள் இனிய குரலால் (நிஜமே) கடவுள் வணக்கம் பாடி, குழந்தைகளின் மழலை இன்பத்திலும் சந்தோஷம் அடைந்தோம். "துன்பத்திலும் இன்பம் காண்பதில்" நாங்கள் மிகவும் சமர்த்தர்கள்!

ஒருவழியாக பஸ்ஸும் பயணப்பட்டுச் சென்று கொண்டிருந்தது. தலைவி சாந்தா ராமானுஜம் நாங்கள் தினம் ஒரு விளையாட்டு நடத்தவும், பரிசுகள் வழங்கவும் ஏற்பாடு செய்திருந்தார். "மைக்" முதலியன ஏற்பாடு செய்து டிரைவர் வசம் கொடுத்திருந்தோம். பாட்டே சரியாக எடுக்காத வண்டியில் "மைக்" வேலை செய்யுமா? ஆனால், சும்மா சொல்லக் கூடாது. டிரைவர் மிகவும் கெட்டிக்காரர்.

"நீங்கள் கவலைப்படாதீர்கள். அடுத்த ஊரில் "மைக்"கை சரி செய்து தருகிறேன்" என்று ஆறுதல் கூறியே எங்களை வெற்றிகரமாகத் திரும்பக் கொண்டு வந்து சேர்த்து விட்டார். நம் குரல் முன் "மைக்" எந்த மூலை என்றே ஆறுதலுடன் எங்கள் விளையாட்டை ஆரம்பித்தோம். (அப்பொழுது கத்தியது ஒரு வாரத்திற்கு அனுபவித்தோம்).

"சிந்து பைரவி" என்றொரு புடைவையை சகாய விலைக்கு எங்கள் தலைவி வாங்கி வைத்திருந்தார். அதைக் குலுக்கல் முறையில் யார் பெயருக்கு வருகிறதோ அவருக்கே என அறிவித்தார். எல்லோருக்கும் ஒரே 'டென்ஷன்.'



நம் பெயர் வராதா? என்று, கடைசியில் ஒரு மூதாட்டிக்கு (செண்பகம் — வயது 66 இருக்கும்.) கிடைத்தது. எங்களுக்கெல்லாம் ஒரே ஆச்சரியம். ஆறு கெஜம் கட்டும் எங்களுக்குக் கிடைக்காமல், ஒன்பது கெஜம் அணியும் ஒரு மாதுக்குக் கிடைத்ததே, அடாடா... அவர்கள் அதை என்ன செய்வார்கள், நமக்குத் தந்து விடுவாரா எனப் பரிதாபமாக அவர் முகத்தைப் பார்த்தால்,

அவர்களோ, "என் வரப் போகும் மருமகளுக்கு இது அருமையாக இருக்கும்" என்று உள்ளே வைத்து விட்டார்கள்,

(என்ன அநியாயம்?) விட்டேனா நான்? உடனே போட்டேன் ஒரு வேண்டுகோளை! முதல் நாள் பரிசு பெற்றவர், மறுநாள் காலையில் பஸ்ஸில் இருக்கும் அனைவருக்கும் ஒரு காப்பி வாங்கித்தர வேண்டும் என்று. அந்த மாமி பாவம், சரியென்று ஏற்றுக் கொண்டு மறுநாள் முப்பது ரூபாய் செலவு செய்தார். (அப்பாடா ஒரே நிம்மதி போங்கள்.)

ஒரே சந்தோஷமாகப் பயணப்பட்டோம். வேலூர் தாண்டி, ஆம்பூரை அடையும் நேரத்தில் 'டமால்' என்றொரு சப்தம் கேட்டது. 'என்ன ஆச்சு?' என்று பார்த்தால் பஸ்ஸில் முக்கியப் பாகமான "ஜாயிண்ட்" கீழே தெறித்து விழுந்ததுதான் காரணம் என்று அறிந்தோம்.

டிரைவர் மிகவும் சாவதானமாக பஸ்ஸை நிறுத்திவிட்டு, "கவலைப்படாதீர்கள். இன்னும் ஒரு மணி நேரத்தில் சரியாகிவிடும்" என்று கூறிவிட்டு இறங்கிவிட்டார். போனவர் போனவர்தான், இப்போ, அப்போ என்று மறுநாள் பொழுதும் விடிந்து விட்டது.

விடியற்காலை — மணியோ ஐந்தரை இருக்கும். நாங்கள் பெரும்பாலும் பெண்கள் (ஒரு சிலர்தான் ஆண்கள்) காலைக் கடன்களை



முடிப்பது எவ்வாறு என யோசித்து சுற்று முற்றும் பார்த்தோம். அங்கே ஒரு தோட்டம் தெரிந்தது. சிறிய குளம் மாதிரியும் தெரிந்தது. பார்த்தேன்.

என் கணவர் துணையுடன் அந்த இடத்தை அணுகினோம். நாய்கள் குரைத்து வரவேற்றன. ஒரே பயமாக இருந்தது. துணிந்து சென்றோம். அந்த வீட்டின் பெரியவர் நாய்களை விரட்டிவிட்டு எங்களை அணுகினார். அவரிடம் எங்கள் நிலைமையைச் சொன்னோம். உடனே 'தண்ணீர் வேண்டிய அளவில் இருக்கிறது. வாருங்கள் என் 'பம்ப்செட்' போட்டுத் தாராளமாக நீர் வழங்கினார். நாங்கள் பல் தேய்த்து, முகம் அலம்பி, (குளிக்க ஆசைதான், ஆனால் வெட்டவெளியாக இருந்தது) பொட்டு வைத்துத் தயாரானோம். ஆனால் பஸ் தயாராகவில்லையே. போனவர்கள் போனவர்கள்தான். மதியம் ஒரு மணி வரையில் அவர்கள் இல்லத்தில் படுத்தும், பாடியும் பொழுதைப் போக்கினோம்.

ஒருவழியாக பஸ் தயாராகியது. நேரே ஆம்பூர் சென்றோம். அங்கு உணவை முடித்துக் கொண்டு எங்கள் பயணம் தொடர்ந்தது.



நாங்கள் முன்னர் ஏற்பாடு செய்தபடி, ''சிரவணபெளகுளா'' ஹாசன், ஹளபேடு முதலிய இடங்களுக்குச் செல்ல இயலவில்லை. அந்தப் புண்ணியம் பஸ் சொந்தக்காரரையே சாரும்.

அன்று இரவு முழுவதும் பயணம் செய்து (ஒரு சில இடங்களில் பஸ் நின்று, பின் சென்றது குறிப்பிடத்தக்கது) முதல் நாள் இரவு இரண்டே காலுக்கு பஸ் நின்றது போலவே, மறுநாளும் சரியாக இரண்டே காலுக்கு ''ஹாசன்'' என்ற இடத்தில் நின்றுவிட்டது. மறுபடியும் ஒரு மணி நேரம் சிறிய ரிப்பேர் செய்து, நாங்கள் அனைவரும் கீழே இறங்கி பஸ்ஸைத் தள்ளிய பின்னர் கிளம்பியது. நல்லபடியாக ''தர்மஸ்தலா'' என்ற இடத்தை நாங்கள் அடைந்தோம்.

முதல் நாளே யாரும் குளிக்கவில்லையாதலால் அனைவரும் நன்றாகக் குளித்த பின்னர் கோவிலுக்குச் சென்றோம். நன்றாக தரிசனம் செய்தபின்னர், அனைவரும் உணவு உண்டு, பின்னர் கடைகள் முதலியவற்றிற்கும் சென்று சுற்றி வரும்பொழுது அன்றலர்ந்த மலரினை ஆசையுடன் வாங்கித் தலையில் சூட்டிக் கொண்டு, பின்னர் பஸ்ஸிற்கு வந்து அடுத்த இடமான உடுப்பியை நோக்கிப் பஸ் கிளம்பியது.

கிருஷ்ணனின் குழந்தை அவதாரத்தை, ''உடுப்பி''யில் கண்டு களித்தோம். ஆஹா! என்ன அழகு! உலகையளந்த எம்பெருமான் உன்னதமாகக் காட்சியளித்தான். கடைகளில் எங்களுக்குத் தெரிந்த அரைகுறை கன்னடத்தில் ஒந்து, இரடு என்று பேரம் செய்தோமே பார்க்கலாம். நாங்கள் பேசியது புரிந்துதான் அவர்கள் பொருட்களைத் தந்தார்களா? இல்லை, இவர்கள் போனால் போதும் என்று நாங்கள் கேட்டதைத் தந்தார்களோ? நாங்களறியோம்!

அங்கிருந்து புறப்பட்டு, ''கொல்லூர்'' மூகாம்பிகையின் திவ்ய க்ஷேத்திரத்தை அடைந்தோம். நன்றாக, அமைதியாக அம்மனை வேண்டிக் கொண்டு, 'உலகைக் காக்கும் பராசக்தியே! எங்களையும் காப்பாற்றம்மா!' என உள்ளமுருக வேண்டிக் கொண்டு, அங்கிருந்து பயணப்பட்டு, ''உடுப்பி''யில் இரவு தங்கி, விடியற்காலையில் விஸ்வரூப தரிசனம் கண்டு, மகிழ்ந்தோம். பின்னர் ''சுப்ரமண்யா'' என்ற முருகனின் திவ்ய ஸ்தலத்திற்கு வந்தோம். இறைவனை அர்ச்சனை செய்து, தரிசித்து, சந்தோஷமடைந்தோம்.

அங்கிருந்து நேராக் ''மைசூர்'' வரும் வழியில் எங்கள் பேருந்து முந்திரித் தோட்டத்தைப் பார்த்தவுடன் நின்றுவிட்டது. எங்களுக்கு ஒரே குஷி. குழந்தைகளுடன் போட்டி போட்டு நாங்களும் பழங்களைப் பொறுக்கித் தின்றோம். மீண்டும் பலாப் பழத்தோட்டம் வந்தவுடன் பஸ் நின்றுவிட்டது. விடுவோமா? நாங்கள்? பாய்ந்து விட்டோம். அங்கிருந்த மக்களும் அன்புடன் பழங்களைக் குறைந்த விலைக்குத் தந்தனர். ஆசையுடன் வாங்கினோம். பஸ் அவ்வப்போது தகராறு செய்து நின்றதற்கு இப்படித்தான் சமாதானம் செய்து கொள்ள வேண்டும். வேறென்ன செய்வது?

''தர்மஸ்தலா''வில் இருந்து மைசூர் வரும் வழியில் இயற்கைக் காட்சிகள் மிகவும் நன்றாக, அழகாக, கண்ணுக்குக் குளுமையாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். பஸ்ஸில் பயணப்பட்டு முதலில் ''சாமுண்டீஸ்வரி'' கோவிலை அடைந்தோம். ஞாயிற்றுக்கிழமையாதலால் ஒரே கூட்டம். வரிசையில் போய் நின்றோம். நின்றோம், மணிக் கணக்கில் நின்றோம். வரிசையோ நகருவதாகத் தெரியவில்லை. நடுவில் பலர் நுழைந்து சென்றனர். எங்களுக்கோ என்ன செய்வது என்று புரியவில்லை. நாங்களே வரிசையை ஒழுங்குபடுத்தி ஆலயத்தை அடைந்து, அம்மனைத் தரிசித்தோம். நாங்கள் பட்ட கஷ்டங்கள் அம்மனைக் கண்டவுடன் மறந்தே விட்டது. பிரிய மனமில்லாமல் கீழிறங்கி வந்தோம். இறங்கும் வழியில் 'பெரிய நந்தியை'த் தரிசித்தோம்.

பின்னர் 'மிருகக் காட்சி சாலை'க்குச் சென்றோம். குழந்தைகளுக்கு ஒரே சந்தோஷம். ('கோவில் கோவிலாகப் போய் எங்களைச் சாமியாராக்கி விடாதீர்கள்' என்றனர்.) மிருகங்களைத் தொந்தரவு செய்யாதீர்கள் என்றவாசகத்தை அலட்சியம் செய்து, அவைகளைச் சீண்டி விளையாடி மகிழ்ந்தனர். இரண்டு மணி நேரம் சுற்றி ரசித்துவிட்டு, அடுத்த இடமான ராஜாவின் மாளிகையை அடைந்தோம். அதனையும் குழந்தைகள் மிகவும் ரசித்தனர். அதன் பின்னர் ''ஸ்ரீரங்கப்பட்டினம்'' என்ற இடத்தில் பள்ளிக் கொண்டிருக்கும் ''ரங்கநாதரை''த் தரிசித்தோம்.

சின்னக் குழந்தைகளுக்கு பவுடர் பஃப்பில் பௌடர் போடுவது ஆபத்தானது. அதுவும் ஏற்கெனவே குழந்தைக்கு சுவாசிக்க சிரமமாக இருக்கும் பொழுது, உயிருக்கே அபாயமானதும் கூட என்கிறார்கள் டாக்டர்கள்.

குழந்தை வளர்ப்பில் பௌடர் ஒன்றும் அப்படி அத்தியாவசியமான ஒரு பொருள் அல்ல. சில ஈரமான பிரதேசங்களில் ஈரப்பசையினால் புண்ணாகும் போல் இருந்தால் கிரீம் அல்லது லோஷன் உபயோகப்படுத்துவது சிறந்தது.

பௌடரை குழந்தை சுவாசித்தால் நுரையீரல் திசுக்களைப் புண்ணாக்க வல்லது.

— ஜெயா வி. ராமன்.



ஃபீஸ், ஹாஸ்டல் செலவு, துணிமணிகள், புத்தகங்கள்,
பயணச் செலவு... இன்னும் எத்தனை எத்தனையோ!

உங்கள் மகன் காலேஜில் சேரத் தயாராகும்போது, நீங்கள் தயாரா?

உங்கள் மகனுக்கு கல்லூரிப் படிப்பு அளிப்ப தென்பது உங்கள் பண வசதியை பாதிக்கக்கூடும். அதற்கு இன்று முதலே திட்டமிட வேண்டும்.

ஈஸிஃபீஸ்-வேறெந்த வங்கியும் அளிக்காத திட்டம்

உங்கள் குழந்தையின் வயதைப் பொருத்து (மகனோ மகளோ வயதில் சிறிதாக இருந்தால், சேமிக்க வேண்டிய தொகை சிறிது) மாதந்தோறும் ஒரு சிறிய தொகையை (ரூ. 55 போல் ஒரு சிறு தொகையை) சில ஆண்டுகளுக்கு (5 முதல் 10 ஆண்டுகள் வரை) கத்தோலிக் சிரியன் பாங்கில் சேமித்து வாருங்கள், அல்லது இதற்கு பதிலாக நீங்கள் மொத்த தொகையாகவும் முதலீடு செய்யலாம்.

உங்கள் குழந்தை பள்ளிப் படிப்பை முடித்ததும், வங்கி உங்களுக்கு பணம் தரத் தொடங்கும். மகனின் பிளஸ்-2 படிப்புக்கான நுழைவுக் கட்டணத்துக் காக ரூ. 1000/-மும், அதன் பின் மாதந்தோறும் ரூ. 200/- வீதமும் அளித்துவரும்.

மறுபடியும் உங்கள் மகன் கல்லூரிப் படிப்பு அல்லது தொழிற்கல்விக்கு சேரும் போது நுழைவுக் கட்டணமாக ரூ. 1500/- முதல் ரூ. 3000/- வரையிலும் பின்னர் படிப்பு முடியும் வரை மாதந்தோறும் ரூ. 200/- வீதமும் அளித்து வரும். அதுமட்டுமல்ல

விவரங்களுக்கு உங்கள் அருகி லிருக்கும் கிளையை அணுகுங்கள்

உங்கள் ஊரின் தொலைபேசி புத்தகத்தைக் கொண்டு கிளைகளின் விலாசத்தை அறியலாம். கேரளாவிலுள்ள ஏறக்குறைய 200 கிளைகளைத் தவிர்த்து, தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் கர்நாடகாவிலும் கிளைகள் உள்ளன.

'ஈஸிஃபீஸ்' அளிப்போர்

கத்தோலிக் சிரியன் பேங்க்

தி கத்தோலிக் சிரியன் பேங்க் லிமிடெட்

தலைமை அலுவலகம்:

செயின்ட் மேரீஸ் காலேஜ் ரோடு

த. பை. எண்: 502, திருச்சூர் 680 020


அங்கிருந்து கிளம்பி எங்கள் குழந்தைகள், பெரியவர்கள் யாவரும் ஆவலுடன் எதிர் பார்த்த ''பிருந்தாவனம்'' சென்றடைந்தோம். ஆனால் என்ன ஏமாற்றம். எங்கள் ராசியோ, இல்லை குழந்தைகளின் ராசியோ, தண்ணீரே சிறிதும் இல்லாமல், பிருந்தாவனம் அழகு குன்றி, சாதாரண 'பார்க்' போலவே காட்சியளித்தது. 'எல்லாம் நம்ப ராசி' என்றே நினைத்து ஏமாற்றத்துடன் பஸ்ஸிற்குத் திரும்பினோம்.

விரைவில் பெங்களூருக்குச் சென்று தூங்கவாவது செய்யலாம் என பஸ்ஸைத் துரிதப்படுத்தினோம். 'டயர்' வெடித்துவிட்டது. அதை சரி செய்ய இரண்டு மணி நேரம் ஆகிவிட்டது. எங்கள் பஸ்ஸிற்கோ இரவு இரண்டேகால் ஆகும்பொழுது கிறுக்குப் பிடித்து விடுமே. 'அதற்குள் பெங்களூர் சென்றுவிட அவசரப்பட்டோம். சிறிது தூரம்சென்றவுடன் வண்டியில் 'டீசல்' இல்லையென பஸ் நின்றுவிட்டது.(சரியாக இரண்டேகால் மணி தான்).

எப்படியோ பெங்களூரிலும் கஷ்டப்பட்டுக் கடைசியில் ஒருவழியாக சென்னைக்கு வந்து சேர்ந்தோம். எத்தனையோ முன்னேற்பாடுகள் செய்திருந்தும் இன்பமாகச் சென்றிருக்க வேண்டிய பயணம், சரியில்லாத பஸ்ஸாலும், ஆணவம் பிடித்த டிரைவராலும் கெட்டது. எனினும் எங்களுடைய ஒற்றுமையால் கிடைத்த சந்தோஷத்தை அனுபவித்தோம்.

லலிதா ராமசாமி

மாணவர்கள் இல்லாத பள்ளி விழா!





'இன்றைய வாழ்க்கையில் குழந்தைகளை நல்ல பண்பாளர்களாக ஆக்குவதில் தாய்க்குப் பொறுப்பதிகமா? தந்தைக்குப் பொறுப்பதிகமா?'

ஓர் இலக்கியக் கழகமோ, மகளிர் மன்றமோ இந்தப் பட்டிமன்றத்தை நடத்தவில்லை. தேசிய ஆங்கிலப் பள்ளி, தன் மாணவ மாணவியரின் பெற்றோரை அழைத்து நடத்தியது புதுமையான முயற்சி.

நல்ல பள்ளியில் குழந்தையைச் சேர்த்தாயிற்று. இனி அவர்கள் பாடு எனப் பெற்றோர்கள் இருந்துவிடக் கூடாது எனச் சொல்லிக் கொண்டிருக்கும் காலமிது. அவர்களை அழைத்துத் தங்கள் பள்ளியிலேயே ஒரு பட்டி மண்டபம் போலப் பேச விட்டு ஒரு நட்புணர்வை ஏற்படுத்தியிருப்பது நல்ல விஷயம்தான்.


இதிலே வேடிக்கை பெண்களெல்லாம் தந்தைதான் அதிகப் பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டும் என்றார்கள்; இல்லை இல்லை தாயாருக்குத்தான் அதிக வாய்ப்பு இருக்கிறது. நேரமிருக்கிறது என்று ஆண்கள் வாதிட்டார்கள்!

ஆனால் இருதரப்பாருமே பெற்றோர்கள் அறிவுரைகளைச் சொல்லாமல் தாங்களே முன்மாதிரியாக வாழ வேண்டும் என்பதை மட்டும் ஒத்துக் கொண்டார்கள். நியாயம் தானே!

ஜானகி ராஜகோபால் என்ற பெண்மணி, ''எல்லாரும் சின்னக் குழந்தைகளைப் பற்றிப் பேசுகிறீர்கள். டீன் ஏஜ் வந்தவுடனேயே தாயை ஒன்றும் தெரியாதவள் என்று நினைக்க ஆரம்பித்துவிடுகிறார்கள் குழந்தைகள். இந்தப் போக்கை ஊன்றுவது தந்தைதான். அவளையும் மதிக்குமாறு செய்து டீன் ஏஜின் சிக்கல்களையும் போக்குவதில் தந்தையின் பங்கு பெரிய பங்கு'' என்று ஒரு போடு போட்டார்!

இந்தப் பட்டி மண்டபத்துக்கு நடுவராக வந்திருந்தார் சிவசங்கரி.

மாணவர்களை அழைக்காமல் பெற்றோரை அழைத்து இந்த விழாவை நடத்தியிருக்கிறார் பள்ளி முதல்வர் திருமதி மோகனா சந்திரசேகர். காரணம் கேட்டபோது, ''எங்களுக்குள் ஒரு நெருக்கம் வர வேண்டும்; பெற்றோர்கள் தங்களுடைய எண்ணங்களை எல்லாம் மற்ற பெற்றோரின் முன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றுதான் இதை ஏற்பாடு செய்தேன். இதில் மாணவர்கள் தேவையில்லையே....'' என்றார்.



நான்



"அவளோட கால்ஷீட்ஸ் மார்ச் பத்தாம் தேதியோட முடிஞ்சுப் போச்சு. ஆனா இன்னும் கொஞ்சம், இன்னும் கொஞ்சம்னே முடிக்காம இருக்காங்க. என்ன பண்றது? நம்மையும் மீறி சில நிகழ்ச்சிகள் நடந்து போயிடுது. நடுவுல கமலஹாசனுக்குச் சின்ன ஆக்ஸிடெண்ட்.

நேத்து ராத்திரி அவ வரப்ப மணி ஒண்ணாயிட்டுது. அதான் பத்து மணி வரைக்கும் தூங்கட்டும்னு விட்டுட்டேன்..."

'இது இன்றைக்கு 'நம்பர் ஒன்' ஹீரோயினாக இருந்து கூடிய விரைவில் குடும்பத் தலைவியாக மாறப் போகும் ரேவதியின் அம்மா.

பாலச்சந்தரின் 'புன்னகை மன்னனை' விரைவில் முடித்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறார் ரேவதி. இரவும் பகலும் தொடர்ந்த ஷூட்டிங்கின் களைப்பே தெரியாமல் வந்து அமர்ந்தார் அந்த இளம் பெண். வழக்கமான திரையுலக அம்மாக்களைப் போலில்லாமல்,

"நீங்கள் பேசிக் கொண்டிருங்கள் நான் வருகிறேன்" என்று கிளம்பி விட்டார் அவருடைய தாயார்.

''நான் கொச்சின்ல பிறந்தேன். பாலக்காடு கொஞ்சம் தெரியும். மற்றபடி அப்பா மிலிட்டரியில ஆபீஸரா இருந்ததாலே வடக்குப் பகுதியில்தான் சதா இருந்தோம். அப்பா சென்னையில வாங்கிப் போட்ட வீட்டில் செட்டில் ஆகலாம்னு வந்தோம்.

நான் எஸ்.ஐ.ஈ.டி.யிலே+2 படிச்சுக்கிட்டு இருந்தேன். என்னை பாரதிராஜா பஸ் ஸ்டாண்ட்ல பார்த்திருக்கார். எனக்குத் தெரிஞ்சவர் மூலமா வீட்டு முகவரி கண்டு பிடிச்சு வந்து அம்மாகிட்டே கேட்டிருக்காங்க.

இதுலே ஆஷாவோட விருப்பம்தான் முக்கியம். அவளைக்கேளுங்கன்னு சொல்லிட்டாங்க. என்னையும், என் தங்கையையும் அந்த மாதிரி அவங்க சுதந்திரமா வளர்த்திருக்காங்க. நானே யோசிச்சு முடிவெடுத்தேன்.

''சரி, ஒரு படம் பண்ணலாம், அப்புறம் படிப்பைக் கண்டினியூ பண்ணலாம்னுதான் நினைச்சிருந்தேன். ஆனா, 'மண் வாசனை' நல்லா 'ஹிட்'டாச்சு. தொடர்ந்து படங்கள் வர ஆரம்பிச்சது...

இதுதான் நான் சினிமாவுக்கு வந்த கதை...'' மிக மெல்லிய குரலில் பேசி முடித்தார் ரேவதி.

ஆர்வம் இருந்ததில்லே. அதனால ஏதோ ஒன்றிரண்டு பார்த்திருக்கோம்...''

''அப்படி இருக்கறப்ப முதல் முதலா கேமரா முன்னாடி நின்னப்ப உங்களுக்கு எந்த மாதிரி 'உணர்வு' இருந்தது...?''

''நான்தான் சொன்னேனே, எனக்கு நடிப்பைப் பத்தி ஒண்ணுமே தெரியாதுன்னு. 'கேமிரா பயம்'னு ஒண்ணு இருக்குன்னு தெரிஞ்சாத்தானே பயப்படறதுக்கு... அப்படியே டைரக்டர் சொல்றபடி செஞ்சுடுவேன்.

கிளிசரின் போட்டப்ப, ஒரே எரிச்சலா இருந்தது. கண்ணை இறுக்கமாக மூடிக்குவேன். 'கண்ணை தொறம்மா, அப்பதான் கண்ணீர் வரும்'பாங்க. 'ஓஹோ, கிளிசரின் போட்டா கண்ணீர் வரும் போல இருக்கு' என்று தெரிஞ்சுக்கிட்டேன்''. மெல்லிய நாணத்தோடு சிரிக்கிறார் ரேவதி.

''சினிமா சம்பந்தமே இல்லாம இருந்து இந்த ஃபீல்டுலே நுழைஞ்சீங்க. ஆனா வந்த உடனேயே பாண்டியனோட உங்களை இணைச்சு பேசினாங்களே... அப்ப உங்களுக்கு எப்படி இருந்தது...?''

''மொதல்ல எனக்கு ரொம்ப அதிர்ச்சியாத்தான் இருந்தது. நெறைய நான் ரொம்ப மனச் வேதனையாக இருந்தது. அதுல இன்னொண்ணு. அவரோட தொடர்ந்து ஷூட்டிங்

முடிவு செய்தா செய்தது தான்!

''ஸோ... நீங்க சொன்ன கதையிலேர்ந்து நீங்க வளர்ந்த விதமே வேறேன்னு தெரியுது... ஆனா உங்க முதல் படத்தின் கேரக்டரோ ஒரு கிராமத்துப் பெண்ணுடையது. எப்படி சமாளிச்சீங்க...?''

''ஆமா, நான் முழுக்க நகரத்துப் பறவை.. எனக்கு கிராமத்துப் பெண்ணைப் பத்தி ஒண்ணுமே தெரியாது. டைரக்டர் என்ன சொன்னாரோ, அப்படியே செஞ்சு காட்டினேன். எனக்கு அதுக்கு மேலே ஒண்ணுமே தெரியாது. இப்ப இந்தக் கண்ணோட்டத்துல நீங்க அந்தப் படத்தைப் பாத்தீங்கன்னா புரிஞ்சுக்கலாம். நான் அவ்வளவு 'இன்னொசென்ட்டா' அதில நடிச்சு முடிச்சேன்...''

''அப்ப அதுக்கு முன்னால சினிமா படமே பார்த்ததில்லையா நீங்க...''

''அப்பாவுக்கு சினிமாவுல அவ்வளவு 'இன்ட்ரஸ்ட்' இல்லே. அம்மாவும் அப்படி ஆர்வமா பார்க்க மாட்டாங்க. அதனால சினிமாவப் பத்தி எங்களுக்கும் ஜாஸ்தி

வேற இருக்கும். எங்க ரெண்டு பேருக்கும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கவே கஷ்டமா இருந்தது.

சித்ரா லட்சுமணன்தான் எனக்கு ஆறுதல் சொன்னார். 'இந்த ஃபீல்டுலே இதெல்லாம் ரொம்ப. சகஜம்மா. இதையெல்லாம் அப்படியே 'கேர்' பண்ணாம இருந்துடணும்'பார். அப்புறம் கொஞ்ச நாட்களில் அந்த கிசுகிசுவெல்லாம் தானாகவே சரியாய்ப் போச்சு.''

''அப்போ வேற கிசுகிசுவெல்லாம் வளர ஆரம்பிச்சாச்சே...?'' என்று அந்த இளம் பெண்ணைக் கொஞ்சம் சீண்டாமல் இருக்க முடியவில்லை.

ஆனால் ரேவதி சிரிக்கிறார். ''அதெல்லாம் ஒண்ணும் இல்லே. சுரேஷ்மேனன் வீட்டில் அவர்களை விரும்பிக் கேட்டார்கள். அவரும் ஒரு விளம்பர ஏஜென்சி வைத்திருப்பவர். விளம்பரப் படங்கள் தயாரிப்பவர்தான். என்னுடைய பெற்றோருக்கும் 'சரி'யென்று படவே நானும் தலையாட்டிட்டேன்...''

மஞ்சுளா ரமேஷ்

"அது சரி, சாதாரணமாக டாப் ஹீரோயினாக இருப்பவர்கள் எல்லாம் சான்ஸ் போய் கொஞ்சம் வயதான பிறகே ஃபீல்டை விட்டு விலகுவார்கள். நீங்கள் நிறைய படங்களை வேண்டாம்னு, சொல்லிட்டீங்களமே?"

"ஆமாம்... பல அருமையான படங்கள் வரத்தான் வந்தது. ஆனா ஒன்ஸ் ஃபார் ஆல் முடிவு செய்த பிறகு அதுல மாற்றம் இருக்கக் கூடாதுங்கறது என்னோட நியதி. திருமணம் செய்துக்கறதுன்னு முடிவாயிட்ட பிறகு அதுக்கப்புறம் நடிகையா இருக்கக் கூடாதுங்கறதுதான் என்னோட எண்ணம்..."

"இப்போ இவ்வளவு பிஸியா இருக்கீங்க. காலையிலேயிருந்து சாயங்காலம் வரைக்கும் முழுக்க ஷூட்டிங்தான். ஆனா இதுலேருந்து முழுக்க முழுக்க வித்தியாசமானது ஒரு இல்லத்தரசியின் வாழ்க்கை. இதை இப்படியே மறந்துட்டு அதை உங்களால ஏத்துக்க முடியுமா?"

"இப்படித்தான் என்னை நெறைய பேர் பயமுறுத்தறாங்க..." என்று சிரிக்கிறார் ரேவதி.



"...ஆனா நான் பயப்படறதா இல்லே. அம்மா எப்படி இருக்காங்களோ அப்படிப்பட்ட வாழ்க்கைதானே என்னோடதும். நானும் ஒரு குடும்பத் தலைவியா இருக்கத்தான் ஆசைப்படறேன்..."

"இப்படி நெறையபேர் சொல்லிட்டாங்க..."

"இல்லே. நான் முடிவு செஞ்சேன்னா அதை மாற்றுவது இல்லே..."

"மூன்று வருஷம்தான் நடிச்சிருக்கீங்க. அதுக்குள்ளேயே ஒரு நல்ல பேரையும் புகழையும் சம்பாதிச்சுட்டீங்க. இந்த ஃபீல்





டைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க...?"

"இதுவும் ஒரு நல்ல புரொஃபஷன்தான். பெண்கள் பேங்க், ஆபீசுக்குப் போவது போல. ஆனா டாக்டருக்கும், வக்கீலுக்கும் நேரம் காலம் இல்லாமல் வேலை செய்ய வேண்டியிருப்பது போல இதற்கும் செய்ய வேண்டியிருக்கிறது. அவ்வளவுதான்..."

"ஆமா, இது ஒரு நல்ல வேலைன்னு நீங்களே ஒத்துக்கிட்டீங்க. பெண் டாக்டரோ, பெண் வக்கீலோ திருமணத்துக்கப்புறம் வேலையை விட்டுடறதில்லையே..."

"சில பேர் தங்களுடைய பிராக்டீஸை விட்டுடறாங்களே. நானும் முழுக்க குடும்பத்தில கவனம் செலுத்தணும்ங்கிறதுக்காக

விட்டுடறேன்னு வச்சுக்கங்களேன்...''

தோல்வியடையாமல் சிரிக்கிறார் ரேவதி.


''நீங்க பல படங்கள்ள நடிச்சிருக்கீங்க. ஒரு படத்துல கணவனையே கொலை செய்யற மாதிரி ரோல்ல நடிச்சிருக்கீங்க. அதெல்லாம் உங்களை எவ்வளவு தூரம் பாதிச்சுது...?''

''நீங்க சொல்றது 'பொண்ணு பிடிச்சிருக்கா?' சினிமாவை. அதுல்கணவனுடைய அட்டகாசங்களைத் தாங்காம தன்னையே எரிச்சிக்கிட்டு, கணவனையும்கட்டிப்பிடிச்சுக்கிட்டு அவனையும் அழிக்கற மனைவி.

உண்மையா சொல்றேனே, இப்படியெல்லாம் வாழ்க்கையில நடக்குமான்னு நான் ஆச்சரியம்தான் பட்டேன். நான் வளர்ந்தது எல்லாமே மிக வித்தியாசமான முறையிலதான். பல சமுதாயக் கொடுமைகளைப் பற்றி எனக்கு வந்த ரோல்கள் மூலமாதான் தெரிஞ்சுக்கிட்டேன்...''

''உங்களுக்கு முந்தி பல படங்கள்ள சமுதாயக் கொடுமைகளைப் பேசியிருக்காங்க...''

''ஆமா. அதை நான் சமீப காலமாதான் தெரிஞ்சுகிட்டேன். சினிமாவைப் பத்தி,





ஆக்டிங்கைப் பத்தித் தெரிஞ்சுக்கணும், அப்பத்தான் நம்முடைய நடிப்பை உயர்த்திக்கலாம்னு அப்புறமா நிறைய படங்களை வீடியோவில போட்டுப் பார்ப்பேன்.

அந்த மாதிரி படங்களைப் பார்க்கும் போது சாவித்திரியம்மாவோட ஃபேனாவே ஆயிட்டேன் நான். அப்பா, என்ன அழகு. என்ன நடிப்பு...! அவங்களோடது...!

''இப்பஅந்தமாதிரிஉங்களையார்ரொம்பக் கவர்ந்தவங்க...?''

''ஒவ்வொரு விதத்துல ஒவ்வொருத்தர் நல்லா பண்றாங்க... கமலஹாசன், ரஜினிகாந்த் எல்லாருமே ரொம்ப அருமையா அவங்கவங்க ஸ்டைல்லே பண்றாங்க...''

''சமீபத்தில கூட நீங்க ஒரு டான்ஸ் புரோக்ராம் கொடுத்தீங்க போலிருக்கு...''

''ஆமா, நான் ஏழரை வயதிலிருந்து பரத நாட்டியம் கத்துக்கறேன். இப்போ சினிமாவுல நடிக்கிற இந்த மூணு வருஷங்களா முழு கவனம் நாட்டியத்தின் பக்கம் திருப்ப முடியலை...''

''பரத நாட்டியத்தில வர்ற பாவங்கள் உங்களுக்கு நடிப்புக்கு உதவியா இருந்திருக்குமே...''

''இல்லை. பரத நாட்டியத்து பாவங்களை கொஞ்சம் மிகைப்படுத்திக் காட்டணும். ஏன்னா மேடையில ஆடறவரின் பாவங்கள் கீழே இருக்கிற ஆடியன்ஸ் அத்தனை பேருக்கும் தெரியப்படுத்தணும். ஆனா நடிப்பு அப்படி இல்லை. குளோஸப்புலே காட்டப்படறது. அப்ப நாம எப்படி ரியல் லைஃபுல ரியாக்ட் பண்ணுவோமோ அப்படியே செய்யணும்...''

''இல்லையே... இப்பதான் இந்த ரியலிஸம் வந்திருக்கு. ஆனா ஓவர் ஆக்டிங்தானே உங்க முந்தைய ஜெனரேஷன் வரை இருந்திருக்கு.''

''நீங்க சொல்றது எனக்குப் புரியுது. ஆனா அதை ஓவர் ஆக்டிங்னு நான் ஒத்துக்க மாட்டேன். ஒவ்வொரு கால கட்டத்தில ஒவ்வொரு ஸ்டைலை ரசிகர்கள் ரசிச்சாங்க.

ஒரு ரூபாய் கொடுத்தால் நாலு மணி நேரம் சினிமா காட்டணும்னு எதிர்பார்த்தாங்க. இரண்டு மணி நேரம் சினிமா காண்பிச்சா, 'என்னடா ஒரு ரூபாய் கொடுத்திருக்கேன், இவ்வளவு சீக்கிரம் முடிச்சுட்டானுக!'ன்னு சத்தம் போடுவாங்க.

அப்புறமா பாட்டு நெறைய தேவையா இருந்தது. அப்புறமா உணர்ச்சி மிக்க வசனங்கள். இப்ப வாழ்க்கையை அப்படியே பிரச்னைகளோட காட்டறது. அதனால அந்தந்த காலக் கட்டத்துக்கு ஏத்தா மாதிரி அவங்கவங்க நடிச்சிருக்காங்க.

சிவாஜி சார் 'முதல் மரியாதை'யில எவ்வளவு அற்புதமா வேறுபட்ட நடிப்பைக் காட்டியிருக்கிறார்.

''சினிமா தொழில் டெக்னிகலா இப்ப ரொம்ப முன்னேறியிருக்கு. ஆனா தரத்துல முன்னேறியிருக்குன்னு நினைக்கிறீங்களா? முந்தி மாதிரி மனசுல எதுவுமே ஒட்ட மாட்டேங்குதே!''

''கலைங்கிறது அர்ப்பணிக்கப்பட வேண்டிய விஷயம். கலை மட்டுமே அல்ல எந்தத் தொழிலுமே முழுமையான அர்ப்பணிக்கப்பட்ட மனசோட செய்தாத்தான் அது அழகாக இருக்கும்.

மைதா மாவு தனி வடாம்

தேவையான பொருட்கள்:

மைதா மாவு — ¼ படி.
சீரகம் — 1 டீஸ்பூன்.
தேவையான அளவு காரம்.
பச்சை மிளகாய்
தேவையான அளவு உப்பு.
எலுமிச்சம்பழம் — 1.

செய்முறை:

பச்சை மிளகாய், உப்பை நன்றாக மிக்ஸியில் அரைத்துக் கொண்டு ஒரு பாத்திரத்தில் மேலே கூறிய மைதா மாவைப்போட்டுக்கொள்ள வேண்டும். பஜ்ஜிக்கு மாவைக் கரைப்பது போல் நீரைச் சேர்த்துக் கலந்து கொள்ள வேண்டும். இக்கலவையுடன் எலுமிச்சம் பழச் சாற்றையும் சீரகத்தையும் சேர்க்க வேண்டும். மாடியில் வடாம் போடும் பாலிதின் பேப்பரை வெயிலில் விரிக்க வேண்டும்.

அடுப்பை ஏற்றி அதன்மேல் இட்லி வாணலியை தண்ணீர் விட்டு வைக்க வேண்டும். அந்தத் தண்ணீரில் எண்ணெய் வடிதட்டைக் கவிழ்த்துப் போட வேண்டும். சில வாழை இலை (அ) மந்தார இலைகளைச் சிறு துண்டுகளாக எடுத்துக் கொள்ளவும். அவ்விலைகளில்சிறிதளவு கடலைஎண்ணெய்தடவி பிறகு கரைத்த மாவை சிறிய கரண்டியினால் அரிசி மாவு, தனி வடாம் இடுவது போல் இட்டு இட்லி வாணலியின் வடிதட்டின் மேல் வைக்கவும். சிறிது நேரம் ஆவியில் வைத்து எடுத்தால் அந்த மாவு ஆவியில் நன்றாக வெந்திருக்கும். இரண்டு மூன்று நிமிடங்களில் இலையில் உள்ள மாவு வெந்துவிடும். உடனே அதனை (இலையோடு எடுத்து) விரித்து வைத்திருக்கும் பாலிதீன் பேப்பரில் கவிழ்த்தால் வடாம் இலையை விட்டு விழுந்து விடும்.

காலை முதல் மாலை வரை இந்த வடாம் வெயிலில் உலர்ந்தால் போதும். ¼ படி மைதா மாவுக்கு 50 வடாம்கள் செய்யலாம்.

— லக்ஷ்மி நாராயணன்.

இன்னிக்கு சினிமாவுல நெறைய பேர் வராங்க. யார் வேணா தயாரிக்கலாம், யார் வேணா டைரக்ட் செய்யலாம், ஈஸியா புகழையும், பணத்தையும் சம்பாதித்துத் தர்றது. அதனால அந்த 'அர்ப்பணித்தல்'ங்கிறது இல்லாம போயிட்டதால நெறைய மனகலங்காம போயிடுது.

ஆனா இன்னைக்கும் வித்தியாசமா ஒரு முழு கலைஞனின் அர்ப்பணிக்கப்பட்ட மனத்தோட பலர் இருக்காங்க. அவங்க முயற்சிகள் வெற்றி அடைஞ்சுக்கிட்டுத் தான் வருது.

''ஏன் உங்களைப் போன்ற புதிய தலைமுறை அப்படிப்பட்ட ஒரு 'ஸ்கூல் ஆஃப் தாட்ஸ்' ஐக் கொண்டு வரக் கூடாது...? எப்படி வேண்டுமானாலும்பணம்சம்பாதித்து விடலாம் என்ற குறுப்பிலிருந்து விலகிய ஒரு குழுவை அமைத்து சாதனைகளைப் புரியக் கூடாது?''

''குழுவன்னு அமைக்காட்டாலும் அப்படிப்பட்ட பலமுயற்சிகள் இன்னிக்குத்திரையுலகில நடந்துக்கிட்டுதான் இருக்கிறது. ஆனா இந்த ஈஸியா வாழ்ந்துட்டுப் போறதுங்கிறது எந்த புரொஃபஷன்ல இல்லே!

முந்தி மாதிரி சின்சியரா டாக்டர்கள் பலர் வொர்க் பண்றாங்களா? பல வக்கீல்கள் இருக்காங்களா? நிறைய போட்டிகள் வந்துட்டதால நமக்கு சான்ஸ் கிடைக்கிறப்ப பணம் சம்பாதிச்சுடணும், 'அர்ப்பணித்தலாவது, ஒண்ணாவது'ன்னு பலதுறைகளையும் நினைக்க ஆரம்பிச்சுட்டாங்க. அதுல சினிமா தொழிலும் ஒண்ணாச்சு. என்ன பண்ண முடியும்?

மோகனமாகப் புன்னகைக்கிறார் ரேவதி.

''செப்டம்பரில் மணப்பெண்ணாக ஆகப் போறீங்க. அப்புறம் ஃபுல் டைம் குடும்பத் தலைவிதான் இல்லையா? எதிர்காலக் குடும்பத் தலைவியாகிய உங்ககிட்டே இப்போ கேக்கறேன்.

சமுதாயப் பிரச்னைகள் நெறைய இருக்கு. உதாரணமா சினிமாவிலேயே பெண்ணைக் கவர்ச்சி சாதனமா காட்டி கேவலப்படுத்தறாங்க...''

''ஒரு நிமிஷம்... இதுக்கு நான் பதில் சொல்லிடறேன். அப்புறமா நீங்க கேக்க வந்ததைக் கேளுங்க. நான் படத்துக்கு நடிக்க வந்த ஆரம்ப காலத்திலேயே கவர்ச்சியா நடிக்க மாட்டேன்னு சொன்னேன். நிறைய பிரஸ் ரிப்போர்ட்டர்ஸ் கேலியா கூட சிரிச்சாங்க...''

''இப்படித்தாம்மா எல்லாரும் சொல்வாங்க. ரெண்டு படம் நடிச்சு முடிச்சவுடனே பார்க்கணுமே''ன்னாங்க. ஆனா இன்னைக்கு வரைக்கும் நான் அந்த மாதிரி நடிச்சதில்லே.

நான் சொல்லவும் சொல்லியிருக்கேன், ''இந்த மாதிரி கேவலமா நடிச்சுட்டு நீங்கள்லாம் காரிலே போயிடறீங்க ஆனா பாதிக்கப்படறது தெருவுல போற பொண்ணுதான்.

பிரிமியர்


மிக்ஸர் மேட்

சிறிதளவு பொருட்களை பெரிய மிக்ஸிகளில் அரைக்க இயலாமல் அவதிப்படுவது உங்களின் அன்றாட பிரச்சனையாகும்.

இப்போது பிரிமியர் மிக்ஸர்-மேட் உங்கள் தொல்லைகளை முற்றிலும் நீக்குகிறது.

பிரிமியர் மிக்ஸர்-மேட் எல்லா வகையான மிக்ஸிகளுக்கும் பொருந்தும் வகையில் கிடைக்கிறது. (இந்திய மற்றும் வெளிநாடு)

இனி குறைந்த அளவுள்ள மசாலா மற்றும் சட்டினியை பிரிமியர் மிக்ஸர்-மேட்டில் மிக நேர்த்தியாக அரைப்பது ஓர் இனிய அனுபவம், ஆகும்.



இப்போது ஸ்டெயின்லஸ்ஸ்டீலிலும் கிடைக்கிறது

மார்கெட்டட் பை:
எஸ்.கே. அசோசியேட்ஸ்
வைகிகி காம்ப்ளக்ஸ்
289, புரசவாக்கம் நெடுஞ்சாலை
சென்னை-600 007. போன்: 663904



PP 274/86/TAM

PALGHAT PERMANENT FUND LIMITED

Registered Office

No. 16, Nana Street, T. Nagar, Madras-600 017

Present rate on deposits allowed to members

RATES ON FIXED DEPOSITS: Rs. 100/- and multiples thereof

Fixed Deposit Period	Interest Payable Monthly	Interest Payable Once in six months
Six Months	9% per annum	(Interest payable on maturity
One Year	11% per annum	12% per annum
Two Years	12% per annum	13% per annum
Three Years	13% per annum	14% per annum
Four Years	14% per annum	15% per annum
Five Years	15% per annum	16% per annum

CASH CERTIFICATE: Pay any amount in multiples of Rs. 100/- and draw **DOUBLE** the amount after 5 years.

"For Renewal[New Deposit Incentive in Cash allowed for 12 Months and above"

SAVINGS DEPOSIT: 6%

RECURRING DEPOSIT: From 9% upto 15% on Annual Compound

A.S.P. AYYAR
Director

List of Branches & Phone Nos.: George Town Branch, Madras — 23651, T. Nagar Branch — 442583, Ayanavaram — 615090, Purasawalkam — 662315, Palghat — 4403, Coimbatore — 22491, Hyderabad — 235935.

அந்த மாதிரி போஸ்டரையெல்லாம் பார்த்துட்டு அந்த அப்பாவிப் பெண்களை கேலி செய்யறாங்க. அந்தப் பெண்கள் உங்க சகோதரிகள் போல''ன்னு. சொல்வேன்.''

அப்படி செக்ஸ் அப்பீலிங்கா நடிக்க இன்னைக்குப் பல நடிகைகள் மறுத்திருக்காங்க. நதியா, அமலா, ரேகாவெல்லாம் அந்த விதத்துல ரொம்பக் கண்டிப்பா இருக்கறது பார்க்கறப்ப ரொம்ப சந்தோஷமா இருக்கு. ஒரு படம் ஓடறது கேவலமான டான்சாலயோ, காட்சியாலேயோ அல்ல....

நான் ஃபீல்டுல இருக்கற வரைக்கும் என்னை அந்த மாதிரி அசிங்கமா காட்டி பெண்ணினத்தைத் தரம் தாழ்த்தறதை நான் ஒத்துக்க மாட்டேன். ஆனா தனியொரு பெண்ணா நான் எந்த அளவுக்குச் செய்ய முடியும்..?''

''ஆங்... அந்த பாயிண்டுக்குத்தான் வருகிறேன். சில சினிமா நடிகைகள் கவர்ச்சி காட்டிப் பெண்ணினத்தைக் கேவலம் செய்வதும் பிரச்னைதான். இன்னும் பெண்களைக் கேவலப்படுத்துகிற பல கொடுமைகள் இருக்கின்றன. நீங்க அப்படிப்பட்ட கொடுமைகளுக்குக் குரல் கொடுக்கும் பெண்ணாக மாறுவீர்களா?

ஏன் கேட்கிறேன் என்றால், ஒரு சாதாரண குடும்பத் தலைவி கொடி பிடித்து முழக்கம் செய்தால், அது பொது மக்களைக் கவருவதில்லை. ஆனால் 'ஷப்னா ஆஸ்மி' போராட்டம் நடத்தினால், தலைப்புச் செய்தியாகிறது. நீங்க ஏன் உங்க புகழை அந்த விதத்திலே நல்ல பணிக்குச் செலவிடக் கூடாது...?''

''செய்யலாம். ஆனால் ஒரு ஊர்வலம் போகிறதுன்னு என்ன காரணம்னு தெரிஞ்சு நிறைய பேர் போவாங்க. என்ன காரணம்னு தெரியாமலேயே பலர் போவாங்க. நான் அந்தமாதிரி போக விரும்பலை. ஆனால் எனக்கு மனசுக்கு சரின்னு பட்டதைச் செய்வேன். எனக்கு வேலை நிறுத்தங்களில் நம்பிக்கையில்லை. மனசுக்குக் கஷ்டம்னா இன்னும் கொஞ்சம் அதிகமா வேலை செய்யணும். ஜப்பானியர்களைப் போலன்னு நினைப்பவள் நான்...''

''அப்போ உங்க எதிர்காலத் திட்டமா என்ன நினைச்சிருக்கீங்க...?''

''இப்போ நான் அதைப் பத்தித் தீவிரமா நினைக்கலை. ஆனா பரதநாட்டியத்துல கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்தலாம்னு நினைச்சிருக்கேன்...''

இன்றைக்குச் சினிமாவில் நுழைந்திருக்கும் பல இளம் பெண்கள் வாழ்க்கையைப் பற்றி அறிவு பூர்வமாகத் தெரிந்து வைத்திருப்பவர்கள், புத்திசாலிகள். வாழ்க்கையை எப்படி நல்லபடியாக அமைத்துக் கொள்ளலாம் என்பதற்கு நல்ல உதாரணம் ரேவதி.

அட்டை வண்ணப்படம்:
பிரத்யேக கறுப்பு வெள்ளைப் படங்கள்:

யோகா


சென்ற மாத மங்கையர் மலர் இதழில் 'ஆடிச் செவ்வாய் தேடிக் குளி' என்ற கட்டுரையில், அந்த சகோதரி குறிப்பிட்டிருந்த மஞ்சப் பொங்கலும், தாளகமும் செய்யும் முறை.

மஞ்சப் பொங்கல்: இரண்டு கப் பச்சரிசி, ஒரு கப் துவரம் பருப்பு இவற்றைக் கழுவிக் களைந்து 6 கப் தண்ணீர் விட்டு, சிட்டிகை மஞ்சப் பொடி, தேவையான அளவு உப்புப் போட்டு, பொங்கி (குக்கரிலும் வைக்கலாம்) இறக்கி, இரண்டு ஸ்பூன் வெண்ணெயை மேலே விட்டு அழுத்தி வைத்து விடவும். இது தான் மஞ்சப் பொங்கல்.

தாளகக் குழம்பு: மஞ்சப் பொங்கலுக்குத் தொட்டுக் கொள்ளச் செய்வது தான் தாளகக் குழம்பு. தடியங்காய், கொத்தவரங்காய், கத்திரிக்காய், வாழைக்காய், சேனைக் கிழங்கு, புடலங்காய், அவரைக்காய், காராமணிக்காய், முருங்கைக்காய், மஞ்சப் பூசணிக்காய், உருளைக்கிழங்கு. இவற்றில் அதிகபட்சம் பதினொரு வகைக் காய்கள், குறைந்தபட்சம் ஐந்து வகைக் காய்களைக் கழுவி விரல் பருமனில் நீளத் துண்டுகளாக வெட்டி, உப்பு, மஞ்சப்பொடி போட்டு வேக விடவும். ஒரு மூடித் தேங்காயைத் துருவி வறுத்துக் கொள்ளவும். ஒரு மூடித் தேங்காய்க்கு பதினொரு வற்றல் மிளகாய், இரண்டு ஸ்பூன் கடலைப்பருப்பு, ஒரு ஸ்பூன் தனியா, மிளகு அரை ஸ்பூன், சீரகம் அரை ஸ்பூன் நெய்யில் வறுத்து நன்கு அரைக்கவும். அம்மி கழுவிய நீரில் ஒரு கொட்டைப் பாக்களவு புளியை ஊற வைத்து கரைத்து, வெந்த காயில் கொட்டி, கொதிக்க விடவும். புளி வாசனை அடங்கியதும் அரைத்தக் கலவையைக் கொட்டி சிறு தீயில் அடி பிடிக்காமல் கொதிக்க வைத்து, குழம்பு கெட்டியாகக் கூட்டுப் போலானதும் இறக்கி, தேங்காய் எண்ணெயில் கடுகு, கறிவேப்பிலையைத் தாளித்துக் கொட்டவும். பரிமாறும் போது, ஒரு கீற்று தேங்காய், ஒரு வெல்லத் துண்டுடன் பரிமாறுவார்கள்.

— என். கிரிஜா மகாதேவன்.

சொல்ல விரும்புகிறோம்



* சி. சரஸ்வதி எழுதியிருந்த ''துறவி'' என்ற இராமாயணக் கதையில் சீதையின் மனக் குமுறல்கள் அருமையாக விவரிக்கப் பட்டிருந்தன!

எஸ். ஏ. கோவிந்தகுமார், நீடாமங்கலம்.

* குக்கரின் முறையான, உபயோகிக்கும் வழிகள் தெரிந்ததோடு அல்லாமல் குக்கரின் வகைகளையும் அறிந்து கொள்ளக் கட்டுரை மிகவும் உதவியாக இருந்தது.

ராதாம்சம் எம். ஏ., ஆட்டையாம்பட்டி.
திருமதி

* 'வாழ்க்கையை சந்தோஷமாக வாழுங்கள்' கட்டுரை நன்றாக இருந்தது. எனினும் துயரில் வாடும் விதவைகளைப் பற்றி எழுத ஸ்நேஹா மறந்து விட்டாரே!

சித்ராதேவி, ஈரோடு — 3.

* ஹலோ உங்களுக்குத்தானே படித்துவிட்டு ரொம்ப மனத்தை மாற்றிக் கொண்டு இருந்தேன். குழந்தை பள்ளியிலிருந்து வந்தவுடன், என் பொறுமை பறக்க, குடிகாரன் பேச்சு விடிந்தாலே போச்சு' கதையாச்சு.

ரேவதி, ஈரோடு — 9.

* மாணவர், ஆசிரியர், நர்சரி பள்ளி நடத்துவோர், பெற்றோர் என்று அனைத்துத்தரப்பினரும் பொதுவான பிரச்னைகளை மெதுவாகப் புரிந்து கொள்ளும்படி அந்த எட்டு பக்க (பள்ளிகள் திறந்தது, தொல்லைகள் தொடர்கிறது) கட்டுரையில் பிட்டுப் பிட்டு வைத்திருந்தீர். சட்டுபுட்டென்று ஏதாவது முடிவு உண்டானால்தான் விடிவு!

எஸ். கண்ணன், வடுவூர்.

* லக்ஷ்மி ராமன் எழுதியிருந்த ''அழுகையை அடக்காதீர்கள்!'' என்ற கட்டுரையைப் படித்தவுடன் ''அழுகையினால் ஏற்படும் பயன்களை இவ்வளவு நாட்கள் தெரிந்து கொள்ளாமல் இருந்து விட்டோமே!'' என்று எண்ணி, மனம் விட்டு அழுது விட்டேன்!'

தஞ்சை, எஸ். ஆராவமுதன்.

* 'ஷைலஜா' எழுதிய கதையின் கடைசியில் விசாலத்துக்கு 'என் மகன் எங்கேயோ வாழ்கிறான்' என்கிற நிம்மதி கூட இல்லாமல் உண்மை தெரிந்து உள்ளம் உடைந்ததற்காக நானும் வருத்தப்பட்டேன். முடிவு உள்ளத்தை உருக்கி விட்டது.

துளசிபாய், விழுப்புரம்.

* நாம் பெற்றிருக்கும் சுதந்திரத்தை அனுபவிக்கக் காரணமாக இருந்த பலரில் இந்தியாவின் சுதந்திரப் போராட்டக் களத்தில் போராடிய பெண்களும் ஏராளம் என்பதைக் கூறி, வீர வணக்கங்களைச் செலுத்தி, அவர்களை நாம் சுதந்திரம் பெற்ற இந்த ஆகஸ்டு மாதத்தில் நினைவு கூர்வது கனப் பொருத்தமே!

எஸ். ராஜகோபால், திருச்சி — 16.

* ''தீர்க்க முடியாத வியாதியா? அதோடு வாழப் பழகிக் கொள்'' என்ற ஆங்கிலப் பழமொழியை எடுத்துக் காட்டி இயந்திரமயமான வாழ்க்கை வாழ்வதில் பயன் இல்லை. அதை சந்தோஷமாகப் பிரித்து நாம் அனுபவிக்க வேண்டும் என்ற கருத்தினை வடித்துக் காட்டிய கட்டுரையாளருக்கு என் பாராட்டுக்கள்.

இந்திராணி சண்முகம், திருவண்ணாமலை.

* அகிலா கிருஷ்ணன் பெரிய குறும்புக்காரரோ! கொல்லி மலைக்குப் போனதை அவர் சொன்னவிதம் இருக்கிறதே! அப்பப்பா! வார்த்தைகளில் விளையாடி விட்டார். ரூ. 500 பரிசு கொடுத்தது சரிதான். பாராட்டுக்கள்.

எஸ். சௌரிராஜன், லெட்சுமாங்குடி.

காலின் மேல் கால் போட்டுக் கொண்டு வெகு தோரணையாக உட்கார்ந்திருந்த நித்யானந்தனைக் கண்டு திடுக்கிட்டுப் போகிறாள் காதம்பரி. யாரோ வந்ததும், ஆயா உட்காரச் சொன்னதும் கேட்டு, பிரபுதான் பெங்களூரிலிருந்து திரும்பிவிட்டிருப்பான் என்று அவசரமாய் வந்தவள், நித்யாவை எதிர்பார்க்கவில்லை. திடீர் பிரேக் போட்டன கால்கள். எத்தனை முறை வந்துவிட்டான். அதற்குள்.... மறுபடியுமா....

"என்னடா மறுபடி வந்து நிக்கறானேன்னு யோசிக்கிறயா....?"

ஆயா இருப்பது நினைவுக்கு வர, "நீங்களா வாங்க..... நம்ம ஊர்க்காரர்தான் ஆயா... வேலையெல்லாம் ஆயிடிச்சுன்னா நீ கிளம்பு..." என்று அவசர அவசரமாக அவளை அனுப்பி வைக்கிறாள்.

"தட்ஸ் பெட்டர். உன் சாமர்த்தியத்துக்குக் கேக்கணுமா..... ம். யோசிச்சியா...."

"எதைப் பத்தி?"

"எதைப் பத்தின்னா? நான் அன்னிக்கு வந்து கேக்கலே....."

படியும்..... உங்களை ரொம்பக் கெஞ்சிக் கேட்டுக்கறேன். நித்யா ப்ளீஸ்....."

"என் டேஸ்ட்டு, எங்க பரம்பரைது எல்லாம் தெரிஞ்சு போச்சு இல்லே. உங்க வீட்டுது மட்டும் கண்ணிலேயே படலியா? பெரிய பண்டிதன் அந்தக் கிழவர், உங்க தாத்தா. அவர் ஏகபத்தினி விரதன். அப்படியே மனசாலேகூட யாரையும் நினைக்காம, ஏறெடுத்துப் பார்க்காம இருந்துட்டார். அவரோட பிள்ளைதானே உங்க அப்பா வாஞ்சிநாதன். அவர் டேஸ்ட் எப்படின்னேன். லட்சுமியைப் பாத்தா தெரியல்லே..... இதுக்கு என் டேஸ்ட் குறைஞ்சுப் போச்சாடியம்மா....."

சுள்ளென்று வலிக்கிறது. முதன்முதலில் லட்சுமியைப் பார்த்த தினத்திலிருந்து உறுத்திக் கொண்டிருக்கும் இடம் அது. அங்கே பார்த்து எய்கிறானே பாவி. அவள் இங்கே எங்கேயோ நிம்மதியாக இருப்பது கூடவா பொறுக்கவில்லை. அவளுக்காக வரவில்லையாம். இவனுடைய சுயநலம் தெரியாதா என்ன.... நினைத்ததை அப்படியே சாதித்து

20

கோடுகள்

"நியாயமா ஏதாவது கேட்டிருந்தா யோசிச்சிருக்கலாம்...."

"அப்படி நியாயமில்லாம என்னத்தைக் கேட்டுட்டேன். அனுமத்தா போட்டுக் கிடக்கிற பிராபர்டிதானே. அவள் என்னத்தைப் பெரிசா வாடகைக் கொடுத்துட போறாள். இன்னி தேதியில நிலத்துக்கு என்ன மதிப்பு தெரியுமா.... வீட்டைச் சுத்தி எவ்வளவு இடம். அப்படி எனக்கே தர இஷ்டமில்லேன்னா, உன்னை ஒரு பார்ட்னரா போட்டுக்கலாம்னுகூட....."

"பார்ட்னராவா, என்னையா.... உங்க கூட பார்ட்னராகி நீங்க பண்ற அநியாயத்துக்கெல்லாம் துணை போயிண்டு.... அதான் லைப்லே பார்ட்னரா இருந்தே கொஞ்ச காலம் பார்த்துட்டேனே, இன்னும் என்ன பிஸினஸ்லே வேறே தனியா..... வேண்டாண்டா சாமி! உங்க சகவாசம் உதவாதுன்னுதானே நான்....."

"சரிதான், உனக்குத்தான் பேசத் தெரியும்னு ஆரம்பிச்சுடாதே....ஏற்கெனவே நிறைய கேட்டாச்சு."

"நீங்கதானே தேடிண்டு வரீங்க."

"உன்னைத் தேடிண்டா வரேன் நான்..."

"அது வேறேயா? என்னையெல்லாம் எப்படி தேடிண்டு வருவீங்க நீங்க... உங்க டேஸ்ட் எப்படின்னு தெரியாது? வேணது பார்த்தாச்சே.... ம். இப்ப என்னத்துக்கு மறு

விட வேண்டுமென்ற மூர்க்கத்தனம். அவன் கேட்டதும் அப்படியே அத்தனையையும் தூக்கிக் கொடுத்துவிட வேணுமாம். லட்சுமியைப் போல நூறு மடங்கு விஷம். விஷத்தோடு விஷமமும்கூட.....

"என்ன கம்முனு இருக்கே.... யோசனைப் பண்றியா.... உன் டேஸ்ட் எப்படின்னு யோசிச்சு பாத்துக்கறே போலிருக்கு: தாத்தா போலவா, அப்பா போலவான்னு.... அப்பா ரத்தம்தான் கிட்டக்க.... என்னதான் தாத்தா உதாரண புருஷரா உனக்கு இருந்தாலும், அப்பாவைத்தான் கொண்டிருப்பேன்னு தோணறது எனக்கு!"

ஓவென்று கத்தலாமா, இவன் கழுத்தைப் பிடித்துத் தள்ளலாமா... பிறாண்டலாமா... அழலாமா.... — அவள் தவிக்கையில் முசுமுசுவென்று நெஞ்சுக்குள் கோபமும் வலியும் கலந்து பொங்கலாமாவென்று பார்க்கையில், அவனே எழுந்திருக்கிறான்.

"என்னமோ பெண்டாட்டியா பார்த்துட்ட தோஷம். சொல்றேன். உன் வயசிலே.... அதுவும் இப்படி சும்மா ஜம்முனு இருக்கச்சே, தாத்தாவாட்டமா விரக்தியா இருக்க முடியாது. அப்பனாட்டந்தான் இரு. ஆனா அவராட்டம் மட்டும் ஒரு செலக்ஷனைப் பண்ணிடாதே; காதலுக்குக் கண்ணில்லேன்னு. அப்கோர்ஸ் உன் டேஸ்ட்டே வேறேன்னு தெரியும். இருந்தாலும் சொல்லி

வெச்சேன். அப்புறம் லட்சுமிக்கு என்ன பதில்னு அதையும் யோசிச்சு வை...."

அழுத்தலாய் சொல்லிவிட்டு கதவை அறைந்து, சாத்திக் கொண்டு போகிருள் நித்யா.

தலையில் ஓங்கி அறைந்து கொள்ள உயர்த்திய கையை சட்டென்று நிறுத்தி சிலிர்த்து, தன்னைக்கட்டுப்படுத்திக்கொண்டு நாற்காலியில் சரிகிருள் காதம்பரி.

பாவி, மெனக்கெட்டு வீடு தேடிக் கொண்டு வருகிருன். இப்படியெல்லாம் சொல்லி விட்டுப் போக. நாலு நாள் அவள் சேர்ந் தாற்போல் சந்தோஷமாக இருக்க முடிவ தில்லையே.... முடியாமல் இல்லை, விடுவ தில்லை. இயற்கையா, விதியா எது எது. அதற் கென்ன காரம் அவளிடம்.... பிரபுவிடம் அவளுக்கு ஏற்பட்டுள்ள ஈடுபாட்டைத்தான் இப்படி சூசகமாய் அடித்துவிட்டுப் போகிறதா... அவளுக்கென்று ஒரு மனித ஆதரவு கூடாதா.... யாருக்குப் பொறுக்க வில்லை இது..... எந்தத் தெய்வத்துக்குப் பிரீதியில்லை இது.....

இரவெல்லாம் குமுறிய குமுறலில் மறு நாள் விகாஸுக்குப் போகக்கூடப் பிடிக்க வில்லை. யாரையும் பார்க்கவே முடியாது போலிருக்கிறது. ஆனாலும் இதையே நினைத் துக் குமைப்பிக் கொண்டு வீட்டில் உட்கார்ந் திருப்பது சரியா.... சரியா......

கிளம்பிய பின்தான் நினைவுக்கே வரு

கோபமாய

கோமளா வரதன்



கிறது. கிருபாகரனுக்கு அன்று ஆபரேஷன் டே. ஒத்தாசைக்கு வருவதாய் சொல்லியிருந்தானே.:.. நல்லவேளை! நேராக ஆபரேஷன் தியேட்டருக்கு விரைகையில், ஏற்கெனவே மனக்குமுறல் குறைந்த் மாதிரி இருந்து, ''வெல்கம்... வெல்கம்....'' என்று முக மலர்ச்சியோடு ராம்குமார் வரவேற்கையில் மறந்தே போகிறது.

அவன் முன்னதாகவே வந்து ஆபரேஷன் தியேட்டரில் ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறான். எல்லா விஷயங்களிலும் அவன் கிருபாகரனுக்கு வலது கை மாதிரி தானென்று காதம்பரிக்குத் தெரியும்.

''வந்துட்டாரா....'' கேட்டுக் கொண்டே கைகளை கழுவிக் கொள்கிறான்.

''டேக்யுவர் கௌன்'' ஆள் நீட்டிய அந்த ஸ்டெரிலைஸ்ட் கவுனை வாங்கி அணிந்து கொண்டே பேச்சுக் கொடுக்கிறான்.

''ரொம்ப காம்ப்ளிகேடட் கேஸ் இல்லே இது....''

''ம்.''

''பதினெட்டு பத்தொம்பது வயசிலே.... இமாஜின்....''

''டைரக்டருக்கே ஆபரேஷன் பண்ண ரொம்ப யோசனைதான். ஆனாலும் ரிலடிவ்ஸ் ரொம்ப வற்புறுத்தறாங்க... எப்படியானாலும் ஒரு சான்ஸ் பார்த்துவிடலாமேன்னு அதனாலே, அரை மனசா....'' சட்டென்று அவன் குரல் தணிகிறது. ''வராரே, அவர் தான் அந்தப் பையனோட அப்பா. பன்னி நமஸ்காரா. ஹீடுகன நோடிதரா....''

''நோடிதே.....'' என்றவருக்கு பார்வை காதம்பரியின் மேல் விழுகிறது.

''ப்ளீஸ் மீட் காதம்பரி. இது மிஸ்டர் புருஷோத்தம். மைசூர்ல இவரைத் தெரியாதவங்க இருக்க முடியாது. வெரி வெல் நோன் பர்ஸன். நீங்க கவலைப்படாதீங்க ஸார். வீ வில் ட்ரை அவர் பெஸ்ட்.''

அவருக்கு ஆறுதலாய் இரண்டு வார்த்தைகளைச் சொல்லிவிட்டு தியேட்டருக்குள்ளே செல்கையிலும் புருஷோத்தமைப் பற்றிச் சொல்லிக் கொண்டு வருகிறான் ராம்குமார்.

''மினிஸ்டர்களென்ன, கவர்னரேகூட இந்தப் பக்கத்தில எதானு செய்யனும்னு, புருஷோத்தமை கேக்காம பிரவேசிக்க மாட்டாங்க. அவ்வளவு இன்புளுயன்ஸ். ஆனாலும் பாருங்க, இப்போ அவர் பையன் விஷயத்திலே அதெல்லாம் பயன்படாது. எல்லாருக்கும் மேலே ஒருத்தனோட இன்புளுயன்ஸ்தான் வேண்டியிருக்கு.

உள்ளறையில் கிருபாகரனோடும், மற்றவர்களுடனும் சேர்ந்து கொண்டபோது, ஆபரேஷன் மேஜையில் குப்புற படுக்க வைக்கப்பட்டிருந்த நாகராஜின் ஆபரேஷன் விவரங்களைப் பரிமாறிக் கொள்ளத் தொடங்கியபோது.... அங்கே அவர்களுடைய உலகமே வேறாகிப் போகிறது.

ர்ர்ரென்று ஓசை சுருதி கூட்ட எலக்ட்ரிக் ஷேவரில் தாடை மழிப்பு நடக்கிறது. கபில்தேவின் விளம்பரம் போல் இருக்கிறதாவென்று தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொள்கிறான் பிரபு.

மழமழப்பு போதுமா, இல்லே ஐய்யே! முள் குத்தறது.... என்று விலகி ஓடுவாளா... எப்படியும் இந்தமாதிரி மெத்தனமாய் இருக்க விடமாட்டாள். விரட்டு விரட்டென்று விரட்டுவாள். காலை ஒன்பதுக்கெல்லாம் விகாஸில் இருக்க வேண்டுமானால் டாணென்று எட்டுக்கெல்லாம் பிரேக்பாஸ்ட் சாப்பிட போய்விட வேண்டாமோ... அரை மணி நாழி ஷேவிங், அப்புறம் எருமையாட்டம் ஊறிக் குளிக்க ஒரு மணியென்று நேரம் ஏது....

அடேயப்பா! கிட்ட நெருங்கவில்லை. சுமுகமாய் நாலு வார்த்தை பேசுகிறாள் பழகுகிறாள் என்ற உடனேயே இத்தனை சேஷ்டைகளா.....!''

காதம்பரிக்கு போன் செய்தால்.... சாயங்காலம் ரெடியாய் இருக்கச் சொன்னால்....

ம்ஹூம், ஸர்ப்ரைஸே இருக்காது. ஒன்றும் சொல்லாமல் திடீரென்று போய்... பேச்சுவாக்கில் மெள்ள விரலைப் பிரித்து டக்கென்று மோதிரத்தை மாட்டி.... ஆச்சரியத்தில் அவள் விழிகள் விரிவதை ரசிக்க வேண்டாமோ.....!

அப்படியொருகாட்சியைதிரும்பத்திரும்ப உருவகப்படுத்திக் கொண்டு கிளம்பும் போது ஞாபகமாய் மோதிரத்தையும் எடுத்துக் கொண்டு கிளம்புகிறான் பிரபு.

மாலை நாலு மணிக்கு மேல் இருப்புக் கொள்ளவில்லை. விகாஸில்தான் இருப்பாள் என்று அவன் போனபோது, அத்தனை நேரமும் ஆபரேஷன் ஆன நாகராஜின் அருகிலேயே இருந்துவிட்டு, அவள் அப்போது தான் அறைக்குத் திரும்பியிருக்கிறாள்.

கூப்பிட்டதும் கிளம்புகிறாள்.

வழியில் ஒரு ஹோட்டலில் சூடான காப்பி தேவையாகத்தான் இருக்கிறது இருவருக்கும். மானஸ கங்கோத்ரி ரோடில்


காலையில் தாமரைப்பூவின் ஓரிதழைத் தின்றால் தாது விருத்தியாகும்!

நல்லெண்ணெயைக் காதில் ஊற்ற போதை நீங்கும்.

நிலைப் பனைக்கிழங்கை நெய்யிலி ழைத்து உட்கொண்டால் சர்ப்பம் உண்டாகும்.

— மைதீன் பாட்சா

Comforting cover, after Every Shower!




The Blend of Beauty
Wealth of Comfort
Lasting Durability

Mfd. Under German Know-how.

Kwality

Knitted Towels

Kwality Textiles
Post Box No. 27,
Udumalpet Road,
POLLACHI-642 003



For the joyous moments of life... plan ahead with KCUB.

A perfect wedding? A fine higher education? Whatever it be—you can't leave such events to chance!

Plan for every good moment of your life. Save with KCUB.

- MONTHLY SAVINGS • CASH CERTIFICATES
- VAMANA VISWARUPA DEPOSIT
- FIXED DEPOSIT.

KCUB

THE KUMBAKONAM CITY UNION BANK LTD.,

Registered Office: Kumbakonam-612 001

KCUB—The Bank that's committed to growth — your growth.

MCS KCUB 192

காரைச் செலுத்த, மௌனமாய் நொடிகள் நகர, அவள் வழக்கம் போலில்லையென்று உணருகிறான் பிரபு. அந்த மாதிரியொரு சிக்கலான மேஜர் ஆபரேஷனின் பின்விளைவாய் களைப்பா.... உற்சாகமூட்ட ஏதாவது தேவைதான். சரியான சமயத்தில்தான் பரிசை வாங்கி வந்திருக்கிறான்.

ஒரு கிளைப் பிரிவில் ஒதுக்குப்புறமாய் காரை நிறுத்துகிறான். அவனே பேச்சை ஆரம்பிக்கிறான்.

''நான் எப்போ வந்தேன், என்ன சமாசாரம்னு கேக்கவேயில்லையே நீ.....''

அவள் எதிரே மரத்தில் ஏறி இறங்கித் துரத்தி விளையாடும் அணில்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். வாழ்க்கையே இப்படித் துரத்திப் பிடிக்கும் ஒரு விளையாட்டு தானா.....

''காதம்பரி.....''

''ம், சொல்லுங்க. எல்லாம் சரியா முடிஞ்சுதா..... எல்லாரையும் பார்த்து ஏற்பாடெல்லாம்....''

''ஓ, எல்லாம் நான் நினைச்ச மாதிரியே நடந்துடுச்சு. பெரிய சக்ஸஸ். நேத்திக்கே ஓடி வந்து உங்கிட்ட சொல்லணும்னு. வழியிலே சரியான மழை. ராம நகரத்திலே. அதனாலே லேட்டா போயி.... எவ்வளவு பெரிய காண்ட்ராக்ட் தெரியுமா இது.... ஐ யாம் ஸோ ஹாப்பி....''

''ஐயாம் ஆல்ஸோ ஹாப்பி.....'' சொன்னாலும் அவள் உற்சாகம் தொற்றிக் கொண்டதாய்த் தெரியவில்லை.

''நான் என்ன வாங்கிண்டு வந்தேன்னு பாரேன்.''

அவன் பாக்கெட்டில் கையைவிட்டு எடுத்து நீட்டுகிறான்.

சிறிய வெல்வெட் பெட்டி. அவள் அவனைத் திரும்பிப் பார்க்கிறாள்.

''திறந்துதான் பாரேன். பார்த்துச் சொல்லு....''

யோசனையோடு திறக்கிறாள். கண் தானே அகலுகிறது. ஒற்றை வைரம் நட்சத்திரமாய் சிரிக்கிறது.

''பியூட்டிபுல்! என்ன விலை....?''

''விலையா பெரிசு காதம்பரி....'' அவன் குரல் மெத்தென்று தடவிக் கொடுப்பது போல் ஒலிக்க, அவன் அவள் கையைப் பற்றுகிறான். அவள் சும்மாயிருக்கிறாள். மோதிரத்தை எடுத்துக் கொண்டு, அவள் விரலைப் பிரிக்கையில் அவனுக்காக வாங்கிக் கொண்டது என்று நினைத்தவள், டக்கென்று கையைப் பின்னுக்கு இழுத்துக் கொள்கிறாள்.

''கமான், கையைக் காட்டு....''

''எனக்கா, நன்னாயிருக்கு.... என்ன எங்கேஜ்மெண்ட் ரிங்கா....''

''அப்படின்னா?''

''இந்த மாதிரி வாங்கி நீட்டலாம். நான் வாங்கிண்டுடுவேன்னு உங்களுக்கு எப்படித் தோணித்து.....''

சுருக்கென்று அவள் கேட்ட மாதிரியில் அதிர்ந்து போகிறான் அவன். தெர்மா மீட்டரின் பாதரஸம் போல் உற்சாகம் வடித்துக் கொண்டு வர, ''உனக்குப் பிடிக்கலையா?''

அவள் வெறுமேயிருக்கிறாள்.

''ஆல்ரைட். நான் பிரசெண்ட் கொடுத்தால் உனக்கு பிடிக்கல்லே. ஏன்னு சொல்லலாமா, உனக்கு வாங்கிக் கொடுக்கலாம்கற அளவுக்கு நாம பழகியிருக்கோம். அந்த உரிமையை நீ எனக்குக் கொடுப்பேன்னு.... ஒருவேளை நான்தான் தப்பா புரிஞ்சுண்டிருக்கேனா.... ம்....?''

அவளால் பேச இயலவில்லை. பட்டென்று தான் அங்கேயே அப்படியே மறைந்துவிட மாட்டோமாவென்று இருக்கிறது.

அந்த நித்யாவின் நாக்கில் சனிதான் இருக்கிறது. அதுதான் நேற்றைக்குப் பார்த்து வந்து அப்படிக் கேட்டுவிட்டுப் போனாள். அப்பாவையா, தாத்தாவையா யாரைக் கொண்டிருக்கிறாயென்று. இதுமட்டும் காதில் விழட்டும், சொத்து பத்து வில்லங்கத்தோடு இதையும் சேர்த்துக் குதறிவிட மாட்டாளா....

குனிந்த தலை நிமிராமல் பெட்டியை மூடி பிரபுவிடம் நீட்டுகிறாள் காதம்பரி.

(தொடரும்)

உங்கள் வீட்டில் வாட்டர் ஃபில்டர் இருக்கிறதா? தினமும் நீரைக் கொதிக்க வைத்து, ஆற வைத்து அதில் விட்டு வைக்கிறீர்களா? அதிலிருந்து 'ஜில்' என்று தண்ணீர் கிடைக்க இதோ ஒரு சுலபமான வழி.

வாட்டர் ஃபில்டரின் கீழ்ப்பாகத்தில் வெளிப்புறம் கனமான ஒரு டர்க்கி டவல் துணியால் நல்ல இறுக்கமாக ஒரு உறை தைத்துப் போடவும். (ஒரு பக்கம் பட்டனும், மறு நுனியில் லூப்பும் வைத்து சுற்றிப் போடுவது போலவும் தைக்கலாம்.)

மேல் பாகத்தில் தண்ணீர் நிரப்பி, கீழே வடிகட்டி வரும் பொழுது, சுற்றி இருக்கும் துணியையும் ஓரிரு முறை ஈரப்படுத்தவும்.

கீழ்ப்பாத்திரத்தில் இருக்கும் நீர் மேல் வரை நிரம்பி, சிறிது வெளியில் கசிவது போல் வைத்தால் துணி எப்பொழுதும் ஈரமாகவே இருக்கும். இதற்காக மேல் பாத்திரத்தில் கொஞ்சம் உபரி நீர் சேர்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

துணியிலுள்ள ஈரம் ஆவியாகப் போகப் போக ஃபில்டரில் உள்ள நீரின் வெப்பம் குறையும். நீர் 'ஜில்' என்று பானைத் தண்ணீர் போல் இருக்கும்.

— ஜெயா. வி. ராமன்.

இதற்கு என்ன செய்வது?



டி.ஆர்.ரமேஷ்

சி. பாலகுமார். கோவை.

என் மனைவி தன் தாய்வீட்டாரின் பேச்சை நம்பி நகைக்கு ஆசைப்பட்டு என்னிடம் இருந்த பணத்தைப் பல வழிகளில் கடத்தித் தன் தாய் வீட்டில் சேர்த்து வைத்திருந்தாள். இதை அவர்கள் இவளுடைய தங்கையின் திருமணத்திற்காகச் செலவழித்துவிட்டனர். இவள் கடத்திய செய்தி எனக்குத் தெரியவே பணத்தை எடுத்துச் சென்றாய் அல்லவா? 'உன் நகைகளைத் தா' எனக்கூறியதற்கு அவள் அப்பணத்தை வாங்கிக் கொண்டு வருகிறேன் என்று கூறி மூத்த மகனை என்னிடம் விட்டுவிட்டு கைக்குழந்தையை மட்டும் எடுத்துச் (1980) சென்றாள். அவள் சொந்த ஊர் திருப்பூர். இதுவரை திரும்பவில்லை. நேரில் சென்று அழைத்தும் வரவில்லை. விவாகரத்து நோட்டீஸ் அனுப்பியும் பதில் ஏதும் அனுப்பாமல் இருக்கிறாள். கோர்ட்டுக்குச் சென்றால் ஆறேழு வருடங்கள் ஆகும். இதைக் கூடிய விரைவில் நல்லபடி முடிக்க என்ன செய்ய வேண்டும்?

இந்தக் கடிதத்தைத் தொடர்ந்து நீங்கள் விரிவாக எழுதியுள்ள விஷயங்களிலிருந்து, நீங்களே மிகவும் குழப்பத்தில் இருக்கிறீர்கள் என்பது தெரிகிறது. உங்களுடைய மனைவியை நீங்களே திருடி என்று சொல்கிறீர்கள். திரும்பவும் சாப்பாட்டுக்குக் கஷ்டமாக இருக்கிறது என்கிறீர்கள். வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பியிருக்கிறேன் என்கிறீர்கள்.

உங்களுடைய வாழ்க்கையில் மனைவி வேண்டுமா, வேண்டாமா என்பதைத் தீர்மானியுங்கள். விவாகரத்து வழக்குகள் முடிய நீண்ட காலம்தான் ஆகும்.

.... திருச்சி.

நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த என் காதலருக்கு இப்போதுதான் மாதம் ரூ. 400/— சம்பளத்தில் நிரந்தர வேலை கிடைத்திருக்கிறது. இரண்டு ஆண்டுகளாக என்னிடம் அன்புடன் இருந்து வந்த அவர் இப்போது அவர்கள் வீட்டில் பார்த்த மாதம் ரூ. 1200/— சம்பாதிக்கும் பெண்ணை வசதியாக வாழ விரும்பிப் பணத்திற்காக மட்டுமே மணக்கச் சம்மதித்திருக்கிறார். இன்னும் என்னிடம் அன்பு மாறாத அவர் என்னை இரண்டாம் தாரமாக மணம் செய்து கொள்வதாய் சொன்னார். என்னை ஒத்த ஒரு பெண்ணுக்கு நான் துரோகம் செய்ய விரும்பவில்லை. ஆதலால் அவரை விட்டு விலகி விடுவதாக அவரிடமே கூறி வந்து விட்டேன்.

அவர் என்னை விரும்பியதை ஏற்றுக் கொண்ட பாவத்தைத் தவிர வேறு ஒரு குற்றமும் செய்யாத நான் என் பெற்றோர் பார்க்கும் பிள்ளையை ஏற்கவும் முடியாமல் மறுக்கவும் முடியாமல் அவதிப்படுகிறேன். என் திருமணத்திற்குப் பின் அவர் என்னை நாடி வந்து பிரச்னை ஏற்பட்டால் மரணம்தான் என் முடிவாக அமையும்.

நான் திருமணம் செய்து கொள்ளலாமா? அவர் பணத்திற்காக அந்தப் பெண்ணை மணந்தாலும் உள்ளத்தால் என்னை நேசிக்கிறார் என்பது முற்றிலும் உண்மை. பின்பு பிரச்னை ஏற்பட்டால் சட்டம் எனக்கு உதவுமா? நான் என்ன செய்வது?

எப்பொழுது இன்னொரு பெண்ணுக்குத் துரோகம் செய்ய விரும்பவில்லை எனச் சொல்லி உங்கள் காதலரைப் பிரிந்து விட்டீர்களோ அப்பொழுதே அவரை மறந்து விடுங்கள். பணத்துக்காக அவளை மணக்கிறார், நெஞ்சில் நான்தான் என்று சொல்வதெல்லாம் நடைமுறை வாழ்க்கைக்காக ஒவ்வாதது. உண்மையான காதலுக்காக அரச பதவியைத் துறந்தவர்கள் உண்டு. உண்மைக் காதல் அத்தனை சக்தி வாய்ந்தது.

உங்களுக்கு நல்ல பிற்காலம் உண்டு. பெற்றோர் பார்த்த பையனைத் திருமணம்

செய்து கொண்டு நடந்ததெல்லாம் கெட்ட கனவாக மறந்து விடுவது நல்லது.

உங்கள் காதலர் உங்களை இரண்டாம் திருமணம் செய்து கொண்டால் அது சட்டப்படி செல்லாது. அதற்குத் தண்டனையும் உண்டு.

சி. எஸ். சந்திரசேகரன் சென்னை — 30.

நான் தலைமைச் செயலகத்தில் (நிதித் துறை) உதவிப் பிரிவு அலுவலராகப் பன்னிரண்டு ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறேன். அலுவலகத் தேர்வுகள் அனைத்திலும் வெற்றி பெற்றுள்ளேன். எனது தனிக் கோப்பில் (Personal File) தொடர்ச்சியாக அனைத்து அதிகாரிகளின் பாராட்டுதலையும், நற்சான்றினையும் பெற்றுள்ளேன். இதுவரை எந்தவிதமான குற்றச்சாட்டிற்கும் உள்ளாகி தண்டனையும் பெற்றதில்லை. எல்லாத் தகுதிகளையும் பெற்றிருந்தும், சில மூத்த அதிகாரிகளின் பொறாமையாலும், காழ்ப்புணர்ச்சியாலும் எனக்கு 1984 ஆம் ஆண்டு முதல் வர வேண்டிய பதவி உயர்வு (பிரிவு அலுவலர் பதவி) கிடைக்கப் பெறவில்லை. இதற்கான காரணமும் தெளிவுபடுத்தப்படவில்லை. ரிட் மனுவில் உயர்நீதி மன்றத்தில் வழக்கினையும் பதிவு செய்து, முடிவான நிலையில் அவ்வழக்கு உள்ளது.

இதற்கிடையில் ஏராளமான மனுக்களையும் (மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் உள்பட) தொடர்ந்து அளித்தும், எந்தவிதமான பதிலும் அளிக்கப்படவில்லை. உயர்நீதிமன்றத்திலுள்ள ரிட் மனுவிற்கு அளிக்கப்பட்ட பதிலில், என் மீது சில அலுவலகக் குற்றச்சாட்டுக்கள் (கீழ்ப்படிதலின்மை) உள்ளதாகவும் (1979 ஆம் ஆண்டு முதல்) அதன் பொருட்டே உரிய பதவி அளிக்கப்படவில்லை என்றும் பதில் கூறப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஒரு விசாரணை நடத்தப் போவதாக அறிவித்து, அந்த அதிகாரி ஒரு மாதத்திற்குள் அறிக்கையினை சமர்ப்பிப்பார் என்றும் ஜனவரி மாதமே அறிவிக்கப்பட்டது. அந்த அதிகாரி விசாரணை நடத்தவே இல்லை.

இதுகுறித்து எங்கள் மேல் அதிகாரியை பல முறை சந்தித்துக் கேட்டு வந்துள்ளேன்.

உங்களுடைய நீதிமன்ற ரிட் மனுவிற்குப் பிறகு விசாரணைகள் ஆரம்பித்ததா? அப்படியானால் உங்களைப் பழிவாங்கவே இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டது என நீங்கள் வாதாடலாம். அல்லது ரிட் மனுவிற்கு முன்பே விசாரணைகள் இருந்தன என அவர்களால் ரெகார்டு பூர்வமாக நிரூபிக்க முடியுமா? அப்படி முடியுமானால் நீங்கள் நீதிமன்றத்திலேயே அதற்கும் வழக்காடலாம். விசாரணைகளின் காரணமாக வழக்கு தாமதப்படுகிறது. எனவே விசாரணை துரிதமாக நடைபெற வேண்டும் என மனு செய்யலாம். பிரச்னைகள் வந்துவிட்ட பிறகு அதற்காகச் சோர்ந்து வருந்தாமல் துணிச்சலுடன் போராடுவதே புத்திசாலித்தனம்.

ராஜலட்சுமி, சென்னை — 34.

எங்களுடைய வீட்டில் ஐந்து வருடங்களாக குடித்தனம் இருக்கிற குடித்தனக் காரர் காலி செய்ய மறுக்கிறார். நாங்கள் குடித்தனம் வைக்கும்போது வெளியூரில் இருந்தோம். அதனால் வாடகைக்கு விட்டோம். சென்னையில் மாற்றலாகி இரண்டு வருடமாக காலி செய்யச் சொல்லியும் செய்யவில்லை. 15 மாதமாக வாடகையும் தருவதில்லை.

கோர்ட்டில் கேஸ் போட்ட போது கோர்ட்டில் எங்களுக்குச் சாதகமாக தீர்ப்பாகும் சமயம் வீடு சம்பந்தமான கேஸ்கள் வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் மூலமாகத்தான் வரவேண்டும் என்று புதிய சட்டம் வந்தபடியால் திரும்பக் கேஸ் மாற்ற வேண்டியது என்று சொல்கிறார்கள்.

எங்களுக்கு ஒரு வீடுதான் இருக்கிறது. வாடகையில் கஷ்டப்படுகிறோம். பாடுபட்டு கடன் வாங்கிக் கட்டிய வீடு எங்களுக்குத் திரும்பக் கிடைக்கும் வழி என்ன? இதற்கு என்ன செய்வது?

நீங்கள் இரண்டு பலமான காரணங்களை அடிப்படையாக வைத்தே 'ரெண்ட் கண்ட்ரோல்' சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரலாம். 1. உங்கள் குடித்தனக்காரர் வாடகை தராதது. 2. நீங்கள் குடியிருக்கவே வீடு கேட்கிறீர்கள். உங்களுடைய பழைய வழக்கின் தகவல்களையும்கூடச் சேர்த்துவழக்குத்தொடருங்கள். வழக்கு என்று வந்துவிட்டால் அதன் செயல்முறைகளில் சென்றுதான் ஆக வேண்டும்.

எஸ். கமலா, சென்னை — 14.

என் கணவர் திரு. சீனிவாசன், நாகப்பட்டினம் வெளிப்பாளையம் முனிசிபல் பள்ளியில் உபாத்தியாயராகப் பணிபுரிந்து வந்தார். அதற்கு முன் நாகையில், ஆரிய நாட்டுத் தெருவில் உள்ள முனிசிபல் பள்ளியிலும், நாகூர் முனிசிபல் பள்ளியிலும்

நெல் பொறியை வாங்கி அதிலிருக்கும் நெல் உமிகளை நீக்கிச் சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகள் தின்பதற்கு ஏதேனும் வேண்டும் என்று கேட்கும்போது இதில் சிறிது சர்க்கரையையும், தேங்காய்த் துருவலையும் சேர்த்துக் கொடுங்கள். தேங்காயில் இருக்கும் கொஞ்ச சரப்பசையும் சர்க்கரையும் சேர்ந்ததால் இதன் ருசி குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும். உடம்புக்கும் நல்லது.

— பிரியா ரமணி.


நறுக்கலாம்·சீவலாம்·உரிக்கலாம்·
செதுக்கலாம்.
இப்போது, ஒஜஸ்
உங்களுக்கு
பல்வகை
ஸ்டெயின்லெஸ்
ஸ்டீல் கத்திகளை
வழங்குகிறது
ப்ரெட் கத்தி.
காய்கறிக் கத்தி.
பழக்கத்தி மற்றும்
சமையலறைக் கத்தி.
தேர்ந்தெடுக்கப்
பல்வேறு அளவுகள்
மற்றும் கைப்பிடிகள்.
ஒஜஸ்®
கூரான முனைகொண்ட சீரான கத்திகள்.

பாலை விடத் தேன் ஆறு மடங்கு சத்து நிறைந்தது. பேரீச்சம்பழமோ தேனைவிட இருமடங்கு சத்து நிறைந்தது. நாம் பேரீச்சம் பழத்தை வாங்கி நிறையக் கொடுக்கலாமே குழந்தைகளுக்கு!

— எஸ். விஜயா சீனிவாசன்

கட்டிப் பெருங்காயத்தில் ஒரு பச்சை மிளகாயைப் போட்டு வைத்தால் பஞ்சு மாதிரி இளகும். வெட்டுவதற்குக் கஷ்டப் பட வேண்டாம்.

— ஜி. இந்திரா

தொடர்ந்து பணியாற்றியிருக்கிறார். அவர் கடைசியாகப் பணியாற்றிய இடம் நாகப்பட்டினம், வெளிப் பாளையம் பள்ளிக்கூடம் 11.12.1951 அன்று காலை வீட்டிலிருந்து கிளம்பிச் சென்றவர் மீண்டும் வீடு திரும்பவில்லை. அவரைத் தேட எடுத்த முயற்சிகள் ஏதும் பலனளிக்கவில்லை. சக உபாத்தியாயர்களும், பள்ளித் தலைமையும், போலீஸ் துறையும் எவ்வளவோ முயன்றும், அவர் என்ன ஆனார் என்பதைக் கண்டறியவே முடியவில்லை.

என் 15 வயது மகனையும், 12 வயது மகளையும் வளர்த்துப் படிக்க வைத்து, முன்னுக்குக் கொண்டு வர நான் பட்ட கஷ்டங்கள் எழுத்திலடங்கா. காணாமற்போன என் கணவரைப் பற்றி ஏதேனும் செய்தி கிடைக்காதா, திடீரென்று தன் குழந்தைகளையும், மனைவியையும் நினைத்துக் கொண்டு வந்துவிட மாட்டாரா என்ற ஆதங்கத்துடன் நானும் காலத்தைப் போக்கிக் கொண்டிருக்கிறேன். அவருக்கு ஏதாவது ஆகியிருந்தால்? என்றால் அந்த எண்ணத்தைக் கூடத் தாங்க முடியவில்லை.

அவர் காணாமற்போனது 1951 இல். அப்போது அவருக்கு 42 வயது. எனக்கு 32 வயது. திடீரென்று ஏற்பட்ட இந்த துர்சம்பவத்தினால், அவரது கணக்கில் சேர்ந்திருந்த க்ஷேம நல நிதித் தொகையோ, வேறு எந்த நிதி உதவியுமோ எங்களுக்குக் கிடைக்கவில்லை. தமிழக அரசு 1979 இல் வெளியிட்டுள்ள ஆணைப்படி அரசுப் பணியில் குறைந்தபட்சம் ஒரு வருட காலமாகிலும் தொடர்ந்து பணியாற்றி இறந்து போன அரசு ஊழியர்களின் குடும்பத்திற்கு (மனைவிக்கு) குறைந்தபட்சப் பென்ஷன் தொகை வழங்க ஏற்பாடாகி செயல்பட்டும் வருகிறது.

கணவரின் இருப்பிடமோ, அவரைப் பற்றிய வேறு எந்தவிதத் தகவலுமோ (35 ஆண்டுகளாகியும்) இதுவரை கிடைக்காத எனக்கு என் கணவர் பல ஆண்டுகள் அரசுப் பள்ளியில் பணிபுரிந்த/ சான்றுகளைக் கொண்டு உதவித் தொகை கிடைக்க ஏதேனும் வகையுண்டா?

நீங்கள் உங்களுடைய மாவட்டக் கல்வியதிகாரிக்கும், டைரக்டர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னைக்கும் உடனடியாக உங்களுடைய நிலைமையை விளக்கி மனு செய்யுங்கள். ஏழு ஆண்டுகள் ஒருவர் காணாமல் போயிருந்தால், அவர் மறைந்தவராகவே கருதப்படுவார். (இப்படிச் சொல்வதற்காக வருத்தப்பட வேண்டாம்.) சென்னை போலீஸ் கமிஷனர் திரு. தேவாரம் எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு பெண்மணிக்கு பென்ஷன் பெற உதவினார். இதை நீங்கள் குறிப்பிட்டு எழுதலாம். உங்களுடைய கடிதத்தை எங்களுடைய அலுவலகம் மூலமாகவும் அனுப்புகிறோம்.

இரா. இராதாகிருஷ்ணன், சென்னை.

நான் சென்ற வருடம் மேல்நிலைப் பள்ளித் தேர்வில் 75% மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றேன். என்னுடைய உண்மையான பிறந்த தேதி 17.7.1968 ஆகும். ஆனால் என்னுடைய தந்தை எனக்கு மூன்றாம் வயது நடக்கும்போதே, எனக்கு வயது ஐந்தாகி விட்டது எனக் கூறி என்னுடைய பிறந்த தேதியை சுமார் இருபத்தியொரு மாதங்கள் குறைத்து 14.11.1966 எனச் சொல்லி பள்ளியில் சேர்த்திருக்கிறார். நான் பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வு எழுதும் வரை பிறந்த தேதியின் முக்கியத்துவத்தை உணரவில்லை. தற்போது மிகவும் தாமதமாக உணர்ந்துள்ளேன். இதனால் நான் பிற்காலத்தில் வேலைகளுக்கு மனு செய்யும்போது அல்லது என்னுடைய மேற்படிப்புக்கு விண்ணப்பம் செய்யும்போது மிகவும் பாதிப்புக்கு உள்ளாவேன்.

என் தந்தை என் உண்மையான பிறந்த தேதியை (17.7.1968) நான் பிறந்தவுடன் பிறப்பு — இறப்பு கணக்கெடுப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார். அதனை ஆதாரமாகக் கொண்டு என் எஸ். எஸ். எல். சி. புத்தகத்தில் பதிவு செய்துள்ள தேதியை (14.11.1966) மாற்ற இயலுமா?

முடியும். உங்களுடைய பிறப்புச் சான்றிதழை உங்களுடைய மாவட்டக் கல்வியதிகாரிக்கு அனுப்பிப் பதிவேடுகளில் மாற்ற விண்ணப்பியுங்கள். அந்த மாற்றப்பட்ட சான்றிதழைக் கொண்டு எஸ். எஸ். எல். சி. புத்தகத்தில் திருத்தலாம்.

தையலுக்குத் தையல்

தங்கம் சுப்ரமணியன்

இன்றைய நாகரிக உலகில் விஞ்ஞானம் வளர்ந்து வரும் உலகில் உடைகளுக்கு மிகுந்த மகத்துவம் ஏற்பட்டுள்ளது. ஆயத்த உடைகளை நாம் சினிமாவிலும், மற்றும் கடைகளிலும் வெளியிடங்களுக்கு, செல்லும் சமயம் அறிந்து, காலத்துக்கு ஏற்றாற்போல், உடைகளை மாற்றி அமைத்து அணிந்து கொள்கிறோம். ஆயத்த உடைகளின் விலை மிக அதிகமாக உள்ளது. தையல் தொழிலாளியிடம் தைக்கக் கொடுத்தால் துணியின் விலையை விட கூலி மிக அதிகமாக உள்ளது என்பதை நாம் கண்கூடாக காண்கிறோம். இம்மாதிரி நிலைமையில் இக்கலையை நாம் பயின்றால் நம்முடைய ஆடைகளை நாமே தைத்து அணிந்தோம் என்ற பெருமையை முதலில் அடைந்து, குடும்ப வருவாயை பெருக்கி, ஓய்வு நேரத்தை மிகப் பயனுள்ளதாக்கிக் கொள்ள உதவுகிறது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

ரவுண்டு கழுத்துடன் கூடிய சாதா சோளி

தேவையான பொருட்கள்:

93 செ. மீ. நீளம் 110 செ. மீ. அகலம் உள்ள பழுப்புத் தாள், பென்சில், ரப்பர், கலர்ப் பென்சில், குண்டூசி, அடி ஸ்கேல், காகிதம் வெட்டும் கத்தரிக்கோல், துணி வெட்டும் கத்தரிக்கோல்.

பாப்ளின், பட்டு, டெரின், டெரிகாட்டன், பருத்தி — 2/2 — 1/2, வாயில் சில்க் போன்ற துணிகள். உபயோகப்படுத்தலாம். 60 செ. மீ. நீளமும் 100 செ. மீ. அகலமும் உள்ள துணி அல்லது 70 செ. மீ. நீளம் 90 செ. மீ. அகலம் உள்ள துணி தேவை. துணியின் நிறத்திற்கேற்ற 40 எண் நூல் கைத்தையல் ஊசி எண் 7. சாதா நூல் 1 கண்டு. ஹூக்ஸ் அல்லது ப்ரஸ் பட்டன்.

சைஸ், 14 வயதுப் பெண்ணின் அளவுகள்

இடுப்பு — 72, மார்பு — 80, முழு நீளம் — 32, புஜம் (அகலம்) — 18, கைநீளம் — 20, கை கீழ் சுற்றளவு — 27.

பொதுவாக அளவு எடுக்கும் முறைகள்

உடையில் இருவகை. அதாவது மேல் உடை — கீழ் உடை. இப்போது மேல் உடை பற்றிக் கவனிப்போம்:

மேல்உடை: அளவு எடுக்கும் முறைகள்:

A — B — C —. சம நிலையைக் குறிக்கும் கோடு (Balance Line) (படம்-உ)

1. ஸ்தன பாகத்தைச் சுற்றி, பின்பாகத்தில் கொஞ்சம் மேலே ஏற்றி எடுப்பது ஸ்தன சுற்றளவு.
2. இயற்கையான இடுப்பைச்சுற்றி எடுப்பது இடுப்பு சுற்றளவு.
3. பருமனான பாகமாகிய புட்டத்தைச் சுற்றி எடுப்பது ஸீட் (அல்லது) ஹிப் சுற்றளவு.
4. மார்பு அகலம்.
5. பின் முதுகு அகலம்.
6. A யிலிருந்து 5 செ. மீ. கீழே வைத்து எடுப்பது புஜ அகலம் (A—B) இயற்கையான இடுப்பு நீளம்).
7. இடுப்பிலிருந்து முழங்கால் பாதம் வரை எடுப்பது ஸ்கர்ட் நீளம் B to C.
8. வெளிக்கை நீளம்.
9. கை கீழ்ச் சுற்றளவு.
10. மணிக்கட்டுச் சுற்றளவு.
11. கழுத்து.
12. உள் கைநீளம்.

சுற்றளவுகளை எடுக்கும் போது 2 விரல்களை உள்ளே விட்டு எடுக்க வேண்டும். மற்ற அளவுகளைப் படத்தில் காட்டியபடி எடுக்கவும்.


படம்-1

ரவுண்டு கழுத்துடன் கூடிய சாதா சோளி

பாகங்கள் :

1. பின்பாகம்
2. முன்பாகம்
3. கைகள்
4. பட்டன்பட்டி
5. ப்யாஸ் குறுக்குத் துண்டுகள்

(ஸ்கேல் 1 = 4)



உடையின் நீளத்தைப் பொறுத்தவரை அவரவர் விருப்பம் போலும் நாகரிகப் பிரகாரம் கூட்டியும் குறைத்தும் எடுக்கலாம்.

காகித மாதிரி தயாரிக்கும் முறை:

நீளம் 93 செ. மீ., அகலம் 110 செ. மீ. உள்ள பழுப்புத் தாளை எடு. அதில் 110 செ. மீ. உள்ள அகலப் பக்கத்தை (55 செ. மீ.) சமமாக மடி. படத்தில் காட்டியது போல் கீழ்க்காணும் வழிமுறைகளைக் கொண்டு மடிப்புப் பாகத்திலிருந்து ஆரம்பித்து படத்தை வரையவும். தேவையான அடையாளங்களைக் குறிக்கவும். (வரையும் போது கவனித்து ஒரு தடவைக்கு இரண்டு தடவை

வழிமுறை (அடிப்படை)

0விருந்து 1 = முழு நீளம் + 2 = 34
0.2 = மா/4 − 4 = 80/4 = 20 − 4 16
2 − 3 = மா/4 = 80/4 = 20 + 4 24

3 − 4 = நேர்கோடு
4 − 5 = 2½ செ. மீ. உள்ளே 2½
0.6 = புஜ அகலம் + 1 17 + 1 18
(6.7 = நேர்கோடு)
6 − 8 = 1½ செ. மீ. கீழே 1½
0.9 = மா/12 + 1 = 80/12 = 63/4 + 2 = 83/4
0-10 = 2½ செ. மீ. 2½
9-10 = ஐ சதுரம் செய்து வளைவு கொடுக்கவும்.

X − 8 க்கும் 7 க்கும் மத்திய பாகம் 7¼

3-8 = படத்தில் காட்டியபடி வளைவு கொடுக்கவும்
குறிப்பு: 0-1 = மடிப்புடன் கூடியதாக இருக்க வேண்டும்.
முன்பாகம்:
0.11 = மா/8 + 1 = 80/8 = 10 + 1 =
9, 11 = ஐ சதுரம் செய்து வளைவு கொடுக்கவும்.

X − Y 1 செ. மீ. உள்ளே 1
7 − 12 = 2½ செ. மீ. மேலே 2½
3 − 12 = Y − 8 = படத்தில் காட்டிய படி கவனமாக வளைவு கொடுக்கவும்.
டாட்ஸ் (darts)
(உடல் உருவ அமைப்புக்கு உடையின் அதிக துணியை கூடிய ஒரு முறை)
1 − A = மா/12 = 80/12 = 6 3/4

2 − B = மா/12 = 80/12 = 6 3/4
A − B = இணை.

B − C = 5 செ. மீ. கீழே 5
இடுப்புச் சுற்றளவை கவனித்து தேவையான அளவு பிடித்தம் பிடிக்கவும் (டாட்ஸ்)
"V" − "வீ" போன்ற வடிவ வெட்டுக்கு நாட்சஸ் எனப் பெயர். இது முன்பாகம் பின் பாகம் எனப் பிரித்துக் காட்ட காட்டவும். இணைப்பிற்கும் உபயோகமாகிறது.

கை

கை நீளம் 20 கை கீழ் சுற்றளவு = 24
0-1 = கைநீளம் + 2 20 + 2 = 22
20 + 2
0-2 = பாடி படத்தில் உள்ள 0.2 (80/4 = 20 − 4 = 16)

(மா/4 = மார்பு − 4 = 80/4 = 20 − 4 16

2 − 3 = நேர்கோடு
2 − 4 = மா/8 − 1 = 80/8 = 10 − 1 = 9 9
4 − 5 = 2 செ. மீ. உள்ளே 2
4 − 5|0-4 = படத்தில் உள்ளபடி வளைவு கொடுக்கவும். 1 − 6 = பாதி கைகீழ் சுற்றளவு + 1½ = 24/2 = 12 + 1½
6 − 4 = படத்தில் உள்ளபடி இணை. 13½

புதிய
மேம்படுத்தப்பட்ட

கேர்:ப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ்

சில பெண்களுக்கு இது தேவை.



இது மிக நீளமான நேப்கின்



இது மிக அகலமான நேப்கின்



இது மிக தடிப்பான நேப்கின்

கூடுதலான பெரிய சைஸிலே தரமுள்ள நேப்கினின் சுகமும் பாதுகாப்பும் தேவைப்படும் பெண்களுக்கு—இதோ ! புதிய கேர்:ப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ்.


நீளத்தினையும், அகலத்தினையும், தடிப்புத் தன்மையினையும் கூடுதலாகவே பெற்றிருக்கும் இந்த நேப்கினின் நூலிழைகள் உறிஞ்சும் திறன் அதிகமாகப் பெற்று மிகுந்த நம்பிக்கையைத் தருகிறது.

ஒண்டர்ராப் உறைகள் ஈரத்தை உள் அடுக்கிற்குள் செலுத்துவதால் ஈரம் சீராக உறிஞ்சப்பட்டு உலர்வினையும் சுகத்தினையும் உங்களுக்குத் தருகிறது. நாப்கினின் இந்த சிறப்பான டாப்-நுனிகள் சரியாகப் பொருந்த உதவுவதோடு கச்சிதமாகவும் இருக்கிறது.

இப்போது கேர்:ப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜில் ஒரு சிறப்பான (ஈரம் கசியாத) 3 வழி நீலநிற பிளாஸ்டிக்-ஷீல்டு—அடிப்புறம் அணைப்புக்கொடுத்து பக்கங்களோடு மேற்புறம் வரை பரவியமைகிறது. படத்தில் நீங்கள் காண்பதுபோல, இவ்வகையில் உங்களுக்கு அதிகப் பாதுகாப்பு, அதிக பத்திரத் தன்மை.

புதிய கேர்:ப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ்—முழுமையான சுகம், முழுமையான பாதுகாப்பு.
கூடுதலான பெரிய
சைஸில்.

தேர்ந்தெடுத்த நகரங்களில் மட்டுமே கிடைக்கிறது.





OBM/6784/TM

தவிரவும் கிடைப்பவை: கேர்:ப்ரீ ரெகுலர் 10'கள், 20'கள், 30'கள் அடங்கிய பேக்குகள்.

ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக் அனுகூலம்



திட உணவின் முதற் சுவையிலிருந்தே.

நான்கு மாதங்கள் ஆகும் பொழுது உங்கள் குழந்தைக்கு பாலுடன் கூட திட உணவும் தேவை. அவனுக்கு செரிலாக்கின் அனுகூலங்களைப் புகட்ட இதுவே உகந்த வேளை.

போஷாக்கு அனுகூலம்: ஒவ்வொரு தடவை செரிலாக் ஊட்டும் பொழுதும் உங்கள் குழந்தைக்குத் தேவையான புரத சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின் மற்றும் தாது ஆகிய எல்லா போஷாக்கு சத்துக்களும் அவனுக்கு கிடைக்கின்றன. அனைத்தும் குழந்தையின் விசேஷ தேவைக்கு ஏற்றபடி சரியான விகிதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.


சுவையில் அனுகூலம்: செரிலாக் நலம் தரும் போஷாக்குடன் நல்ல சுவையும் கொண்டது. செரிலாக் சுவை என்றாலே குழந்தைகளுக்கு கொள்ளை ஆசை.

தயாரிப்பதில் அனுகூலம் : செரிலாக் குழந்தை உண்பதற்கேற்ப முன்கூட்டியே பதமாக்கப்பட்டுள்ளது. கொதிக்கவைத்து ஆறிய வெது வெதுப்பான நீரில் கலந்தால் போதும். நொடியில் தயார் செரிலாக் உணவு.

உங்கள் குழந்தைக்கு சரியான விகித சத்து கிடைக்கவும், சுகாதார முறையில் கலக்கவும், டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.

இலவச செரிலாக் புத்தகம் பெற

இம்முகவரிக்கு எழுதவும் :
செரிலாக்,
தபால் பெட்டி எண் : 3
புது டில்லி 110 008.



செரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை

Nestlé


சரிபார்த்துச் செய்தபின் வெட்டும் கோட்டின் மேல் வெட்டவும். (தேவையான பாகங்கள்.)

1.பின் பாகம்,2.முன் பாகம்,3.கைகள் (2), 4.பட்டன் பட்டி துண்டுகள், 5.ப்யாஸ் துண்டுகள்.

தைக்கும் முறைகள்

தைக்கும் மிஷினைச் சுத்தப்படுத்தி மேல் கீழ் நூல்களைப் பொருத்தி தையல்கள் நன்றாக உள்ளனவா எனக் கவனித்துப் பின் தைக்க ஆரம்பிக்கவும். தேவையான பொருட்களையும் பக்கத்திலேயே வைத்துக்கொள்ளவும்.

1. இடுப்புச் சுற்றளவுக்குத் தகுந்த மாதிரி டார்ட்ஸ் பிடிக்கவும்.
2. முன்பாக பின்பாக தோள் அகல இணைப்பு (3/4 செ. மீ. அகலம்)
3. முன் பாகத்தில் பட்டன்பட்டி பொருத்துதல் சாதாபட்டி — கல்வும்பட்டி படம்
4. (தைக்கும் கோட்டின் மேல்) முன்பாக பின்பாக பக்க இணைப்பு (1½ செ. மீ. அகலம்)
   மேற்கூறியவைகளை ஒட்டுத் தைய விட்டு உடலில் பொருத்திப் பார்த்துப் பின் மெஷின் தையலிடவும்.
5. வலது இடது என கவனித்து கையின் கீழ்பாகத்தைத் தேவையான அளவு மடித்து சாய்வுத் தையல் அல்லது மெஷின் தையலிடவும்.
6. கையின் பக்க இணைப்பு (1½ செ. மீ. அகலம்)
7. தயாரான கையை புஜத்துவாரத்தில் இணைத்தல் கையின் சமநிலை புஜத்துவாரத்தில் சமநிலையை கவனித்துப் பொருத்தவும்.
8. குறுக்குத் துண்டு தயாரித்தல் (ப்யாஸ்) படம்.
9. கழுத்துப் பாகத்தில் தயாரித்த ப்யாஸ் துண்டைச் சரியான பக்கம் இரண்டும் ஒன்றோடொன்று பொருந்தும்படி வைத்து இழுக்காமல் மெஷின் தைய விட்டு மடித்து சாய்வுத்தையல் அல்லது மெஷின் தையலிடவும்.
10. இடுப்புச் சுற்றளவு அளந்து 4 செ. மீ. அகலமுள்ள பட்டியைக் கொடுத்து தைக்கவும். (R. S. to R. S.) ஒட்டுத்தைய விட்டு உடலில் பொருத்திச் சரி பார்த்து மெஷின் தையலிடவும்.
11. ஹுக்ஸ் அல்லது ப்ரஸ் பட்டன் தைக்கவும்.
12. இஸ்திரி செய்யவும்.



படம்-2

குறுக்குத் துண்டு தயாரிக்கும் முறை: (படம்-3)

கத்தரித்தல்: துணியை முக்கோணமாக மடித்து இஸ்திரி செய்து வெட்டவும். (படம் 3 இல் A).

வெட்டும்போது நேர் (Warp) இழை அகல (Weft) இழை பாகத்தில் படிமானமாக இருத்தல் வேண்டும். அடையாள நிறக்கட்டியின் உதவியால் தேவையான அகலத்தைக் குறியிட்டு அந்தக் குறியின்மேல் வெட்டவும். (படம் 3 இல் b) இதுவே சரியான ப்யாஸ் குறுக்குத் துண்டாகும்.


இணைத்தல்: கத்தரித்த துண்டுகளை நேர் இழை நூல் **கோணங்கள்** சமமாகச் செய்து படம் c இல் உள்ளபடி பக்கம் ஒன்றோடொன்று பொருத்தவும். படம் 4 இல் dயில் உள்ளபடி ஓரத்திலிருந்து 0.5 செ. மீ. உள்ளே தள்ளி அடையாளக் குறியிட்டு, குண்டூசி பொருத்தி ஒட்டுத் தையலிட்டு மெஷின் தையலிடவும். ஒட்டுத்தையலைப் பிரித்து இணைப்பைச் சமப்படுத்தி இஸ்திரி செய்யவும். ஓரங்களைச் சமப்படுத்தவும். (படம் 5 இல் e)

படத்தின் விளக்கக் குறிப்புகள்: ந. ப. நல்ல பக்கம் — த. ப. தவறான பக்கம். S to G நேர் இழை நூலுடைய கரைபாகம் (Selvedge) = Warp = நேர் இழை நூல் (தார் நூல்) நீளம் = Weft = குறுக்கு நூல். (அகலம்).

பட்டன்பட்டி (படம்-4)

சாதாபட்டி — பேய்சிங் முறை


திறப்பின் நீளத்தை அளந்து அதனுடன் 2 செ. மீ. அதிகம் எடுக்க வேண்டும் (உ—ம்) நீளம் 10 செ. மீ. என்றால் 10 + 2 = 12




செ. மீ. நீளம் எடுக்க வேண்டும். (பட்டியின் அகலம் நமக்கு பட்டியின் மடிப்பு எவ்வளவு தேவையோ அத்துடன் 1 செ. மீ. அதிகம் எடுக்கவும்.

அகலம் 1.5 செ. மீ தேவையென்றால் 1.5 செ. மீ. + 1 = 2.5 செ. மீ. எடுக்க வேண்டும். இந்தத் துண்டு நேர் இழையாக இருக்க வேண்டும். இத்துண்டின் நல்ல பக்கம் இரண்டும் ஒன்றோடொன்று பொருந்தும்படி படத்தில் படம் 1 இல் உள்ள படி துணியின் ஓரத்திலிருந்து 0.5 செ. மீ.

படம்-4



அளவு குறியிட்டு அதன்மேல் குண்டூசி பொருத்தி ஒட்டுத் தையலிட்டு மெஷினில் வைக்கவும். ஒட்டுத் தையலைப் பிரித்து பட்டித் துண்டை உடையின் தவறான பக்கம் மடிக்கவும். மடிப்பு சமமாக இல்லாமல் படம் 2 இல் உடைத்துணி சிறிது வெளியே தெரியும்படியாக மடிக்கவும். பட்டித் துண்டின் பிசிறுள்ள ஓரத்தை 0.5 செ. மீ. உள்புறமாக மடித்து உடைத் துணியுடன் சேர்த்து குண்டூசி பொருத்தி ஒட்டுத் தையலிட்டு சாய்வுத் தையல் அல்லது மெஷின் தையலிடவும்.



ஒட்டுத் தையலைப் பிரித்து இஸ்திரி செய்யவும். இதை பேய்சிங் முறை என்று கூறுவர்.

கவ்வும்பட்டி

சாதாபட்டியைப் போலவே நீளமும் பட்டியின் அகலம் எவ்வளவு தேவையோ அது மாதிரி இரண்டு மடங்கு பட்டியின் அகலம் + ஓரம் மடிக்க 1.25 செ. மீ. தேவை. உதாரணம் 1.5 × 2 = 3 + 1.25 = 4.25. கவ்வும் பட்டி துண்டின் நல்ல பக்கம் இரண்டும் ஒன்றோடொன்று பொருந்தும்படி வைத்து துணியின் ஓரத்திலிருந்து படம் 1 இல் உள்ள படி 0.5 செ. மீ. விட்டு குண்டூசி பொருத்தி ஒட்டுத்தையலிட்டு மெஷின் தையலிடவும். ஒட்டுத்தையலைப் பிரித்து மற்றொரு பிசிறுள்ள ஓரத்தை படம் 2 இல் உள்ளபடி 0.5 செ.மீ. உள்புறமாக மடித்து உடைத் துணியில் முன் தைத்த தையல் வெளியில் தெரியாமல் மூடி வரும்படியாக குண்டூசி பொருத்தி ஒட்டுத் தையலிட்டு மெஷின் தையல் அல்லது சாய்வுத் தையலிடவும். தையலைப் பிரித்து இஸ்திரி செய்யவும். முடிவடைந்த பட்டியின் தோற்றம் கவ்வும்பட்டி கீழாகவும் சாதாபட்டி கவ்வும்பட்டியின் மேல் பொருந்தும்படி வைத்து ப்ரஸ் பட்டன் அல்லது ஹூக்ஸ் பொருத்த வேண்டும். (படம் 3.)

புக் ஷெல்ஃப்



சிரிக்கும் பூக்கள்

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் கவிதைத் தொகுப்பு. குழந்தைகளுக்கேற்ற முறையில் ஒவ்வொரு கவிதையோடும் நெஞ்சையள்ளும் படங்கள். விலை ரூ. 20/—

இனிக்கும் பாடல்கள்

'சிரிக்கும் பூக்கள்' தொகுப்பிலிருந்து சில பாடல்களின் தொகுப்பு. விலை ரூ. 2.50/—
(பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை — 108)

திருச்செந்திலாதிபன்

முருகனைப் பற்றிய பாடல்கள், கட்டுரைகள். தொகுப்பு: வ. முத்தையா செட்டியார்.

(அலமேலு பிரிண்டிங் பிரஸ், 14 3, வடக்கு மாசி வீதி, மதுரை — 625 001.)

கல்லுக்குள் ஈரம்

சுதந்திரப் போராட்ட காலத்தைப் பின்னணியாக வைத்து எழுதப்பட்ட பரிசு பெற்ற நாவல். ஆசிரியர் ர. சு. நல்லபெருமாள். உணர்ச்சி மயமாகப் படைத்துள்ள புதினக் காவியம். விலை ரூ. 47/—

மேடை ஓடை

எளிய தமிழில் இனிய கவிதைத் தொகுப்பு. ஆசிரியர் ச. சவுரிராஜன். விலை ரூ. 6/—

தமிழ் விருந்து மூன்று

தாய்மை, மானம், ஆறுறு, முருகு முப்பத்தாறு எனும் நீண்ட கவிதைத் தொகுப்பு. விலை ரூ. 7/—

கள்வனின் காதலி

'கல்கி'யின் புகழ்பெற்ற நவீனம். முத்தையன், கல்யாணி, அபிராமி என சாகாவரம் பெற்ற பாத்திரங்கள். விலை ரூ. 17/—

சோலைமலை இளவரசி

1942 ஆம் ஆண்டுப்புரட்சி வீரன்குமாரலிங்கத்தின் அபூர்வமான அனுபவங்களைச் சுவையான நாவலாகப் படைத்துள்ளார் பேராசிரியர் கல்கி. விலை ரூ. 12/—

மயிலைக் காளை

கல்கியின் மூன்று சுவையான நெடுங்கதைத் தொகுப்பு. விலை ரூ. 6/—

கதவு

குடும்ப வாழ்க்கையில் ஆணும் பெண்ணும் எப்படி இருக்க வேண்டும் என்பதைச் சித்திரிக்கும் பரிசு பெற்ற நாவல். விலை ரூ. 31/—

(மேற்கண்ட ஏழு புத்தகங்களின் பதிப்பாளர் வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, சென்னை — 17).

பாரதியும் மில்டனும்

தமிழ் இலக்கிய ஆர்வம் கொண்டவர்களுக்கு விருந்து. ஆசிரியர் எம். சோலையன். விலை ரூ. 12/—

களத்துமேடு

கிராமப் பின்னணியில் அமைந்த குடும்ப நாவல் ஆசிரியர் பூவை. எஸ். ஆறுமுகம். விலை ரூ. 15/—

தாகூரின் கவிதை, சிறுகதை, நாடகம்

வீர. எம். செட்டியார் வானொலியில் ஆற்றிய சொற்பொழிவுகள் விலை ரூ. 5/—

(மேற்கண்ட மூன்று புத்தகங்களின் பதிப்பாளர்— செல்வி பதிப்பகம், காரைக்குடி.)

ஒரு யாழ்ப்பாணக் குயில் பேசுகிறது

இலங்கையிலிருந்து தமிழகம் வந்த கவிஞரின் நெஞ்சை உருக்கும் கவிதைத் தொகுப்பு. விலை ரூ. 3/—

(சுதா பதிப்பகம், 6, சங்கரபுரம் மூன்றாவது தெரு, சூளை மேடு, சென்னை — 94.)

புரட்சிப் பொன்மொழிகள்

பல்வேறு அறிஞர்களின் பொன்மொழிகள்: தொகுப்பாளர் — ப. மூர்த்தி விலை ரூ. 9.50/—

எண்ண வடிவங்கள் — வண்ணக் கற்பனைகள்

சிறுகதைத் தொகுப்பு ஆசிரியர் — வ. இளவழகன். விலை ரூ. 9.50/—


இன்பக் கனவுகள்

கவிதைத் தொகுப்பு. விலை ரூ. 5.50/—

(மூன்று நூல்களின் பதிப்பாளர், செல்வராசன் பதிப்பகம், 83, பாசியம் நகர், பெங்களூர் — 560 021).

V.V.D


கற்பனை பல சிறகடிக்க
இளமை கொஞ்சிடும் அழகி.
அவள் நெஞ்சைக் கவர்ந்தவைப் பல.
மெல்லத் தவழ்ந்து செல்லும் நீரோடை..
செல்லமாக வீசும் தென்றல்.
உள்ளம் கவர்ந்த கட்டழகன்.
கொள்ளை அழகு மலர்கள்.
பளபளப்பான நீண்ட கூந்தல்
அக்கூந்தலுக்கு
வி.வி.டி தேங்காய் எண்ணெய்...



VVD-1/86

வி.வி.டி. தேங்காய் எண்ணெய்
இயற்கைக் கூந்தலின் இளமை ரகசியம்

V.V.D



புரட்டாசி பிரம்மோற்சவம்

எங்க ஊர் உற்சவம்

எழும்பூர் ஸ்ரீனிவாசரையும் பத்மாவதித் தாயாரையும் இதயத்தில் இருத்தி வழிபட்டால் வாழ்வில் வளம் கொழிக்கும்; ஒளி பிறக்கும்; மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடும்; துன்பங்கள் சாயும்; ஆம்! இது ஒப்புக்காக எழுதப்படும் வார்த்தை அல்ல. இதய பூர்வமாக இறைவனது கருணையை அனுபவபூர்வமாக அறிந்தும், தெரிந்தும், புரிந்தும் சொல்லப்படும் கலப்படமில்லாத உண்மைகள். அல்லும் பகலும் அனவரதமும் ஆண்டவனைத் தொழுது பேரின்பமடைவதில் உள்ள சுகத்திற்கு இணை ஏது?

எங்கள் சென்னையிலுள்ள எழும்பூர் ஸ்ரீனிவாசர் கோயிலில் வருடா வருடம் புரட்டாசி மாதம் பத்து நாட்கள் "பிரம்மோற்சவம்" நடைபெறும். உற்சவத்திற்குப் பத்து நாட்கள் முன்பாகவே கோயில் களை கட்டிவிடும். பந்தக்கால் உற்சவத்தை நடத்தி, பின்பு கோயில் முழுவதும் அழகாகப் பந்தல் போடுவார்கள். பின்பு நல்லதொரு நாளில் கோயில் "துவஜஸ்தம்பத்தில்" (கோயில் கொடி மரம்) கொடி ஏற்றுவார்கள். அதன் அடியிலே நவதானியங்களை வைத்திருப்பார்கள். இந்தக் கொடி ஏற்று விழாவை கோலாகலமாக ஆரம்பித்து வைப்பார்கள்.

கோயிலின் உள்ளே சென்றால் முதலில் துவஜஸ்தம்பம். அதன் எதிரில் ஸ்ரீனிவாசர் ஸன்னதி. அதன் கர்ப்பக்கிருஹத்திலே மூலவர் குடிகொண்டிருப்பார். சந்தனக் காப்பிலும், பூவலங்கி சேவையிலும், முத்தங்கி சேவையிலும் கண்கள் திறந்து, கருணையுடன் பக்தர்களைப் பார்த்து வரம் அளிக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். பக்கத்திலே தாயார் ஸன்னதி. பத்மாவதித் தாயார் பத்மாஸனமிட்டு அமர்ந்து, அள்ளித் தருகிறாள் செல்வத்தை. தாயாரை வலம் வந்து நின்றால் ஸ்ரீராமர் ஸன்னதி. ஸ்ரீராமர், லக்ஷ்மணர், சீதை, ஆஞ்சநேயர் சகிதம் நின்று கொண்டு காட்சியளிப்பார். ராமரை வலம்வரும்போது அழகிய தோட்டம் காட்சியளிக்கும். பின்பு சிறிய துளஸி மாடம். எதிரே நாகர் சிலை. ஆண்டவனின் பாதுகை. கடைசியில் ஸ்ரீ ஆஞ்சநேயர் மூலவர் ஸன்னதி.

முதல் நாள் காலையில் சூரியப் பிரபையில் பகவான் (ஸ்ரீனிவாசப் பெருமாள் உற்சவர்) ஸ்ரீதேவி, பூதேவி சகிதம் அமர்ந்து அழகாக உலா வருவார். சூரியப்பிரபையில் அலங்காரத்துடன் பகவான் வரும்போது, அந்த அழகைக் காண சூரிய பகவானே வந்துவிடுவார் என்றால் மிகையாகாது.

அன்று இரவு சந்திரப் பிரபை. ஆஹா! முதலில் ஸ்ரீனிவாசனையும், உபய நாச்சியார்களையும் வெண்பட்டாடையில் அலங்கரித்து, வெண்ணிற மாலைகள் அணிந்து, இரண்டு பக்கங்களிலும் கிளிகளை அமரச் செய்து, ஒய்யாரமாக, நாதஸ்வர, மேளதாளத்துடன், எடுத்துச் செல்வார்கள். ஏழெட்டு பேர் அழகாக, பாட்டிற்கேற்ப ஆடும் போது, ஆண்டவன், முன்னும், பின்னும், எதிரும், புதிரும் பக்கங்களிலும், சாய்ந்தும், ஆடியும், ஓடியும் வரும் காட்சி இருக்கிறதே! ஆஹா! அதனைக் கண்டுகளித்தால்தான் அந்த இன்பம் புரியும். பின்பு, தாயார் ஸன்னதியில் உள்ள ஊஞ்சலில் பகவானை அமரச் செய்து, ஊஞ்சல் பாட்டுப் பாடுவார்கள். பின்பு மறுபடியும் ஒய்யார நடை நடந்து, சந்திரப் பிரபையில் ஏற்றி அலங்காரமாக வீதி உலா வருவார்கள்.

பின்பு, ஹம்ஸ வாகனம், யாளி வாகனம், அனுமந்த வாகனம் போன்ற வாகனங்களில் ஏற்றி அழகாக வீதி உலா வருவார்கள். மக்கள் எல்லோரும் தெருவை அடைத்துக் கோலம் போட்டு, தெய்வத்திற்காக, தேங்காய்ப் பழத் தட்டுடன் காத்து நிற்பார்கள். பின்பு சேஷ வாகனம். அன்றுதான் எத்தனை அமர்க்களம்! ஒய்யாரியின் போது, நாகப் பாட்டைப் பாடி மகுடி நாதம் வாசித்து, எங்கே அந்த நாகமே தேடி ஓடி வந்துவிடுமோ

என அஞ்சும்படி வாசிப்பார்கள். அன்று கண்டிப்பாக பாண்டு வாத்தியம் உண்டு.

ஆதிசேஷ வாகனத்தில், சர்வாலங்காரத்துடன் பகவான், நாச்சியார்களோடு பவனி வருவார். வாண வேடிக்கைகள் வெடித்து, பளபளப்பாகப் பூவாணம் சொரிந்து நம்மைப் பரவசப்படுத்துமே! ஐந்தாம் திருநாள் ''கருட சேவை'' என்ற வைபவம். மாலை ஏழு மணி முதலே அலங்காரம் தொடங்கிவிடும். பெரிய கருடனை வைத்து, அதன் இரு கைகளும் பகவானின் திருப்பாதங்களைத் தாங்கும். பகவானுக்கோ, பெரியப் பெரிய மாலைகள். வண்ண மலர்களால், வாசனையோடு தொடுக்கப்பட்ட மாலைகளைச் சுமந்து அசைந்து ஆடியபடி அவர் வருவார். எல்லா வாகனங்களுமே மிகக் கனமாக இருப்பதால், இருபது பேர் சுமந்து வந்தால் கருட வாகனத்தை முப்பது பேருக்கு மேல் சுமந்து வருவார்கள்.

கோயில் கதவைத் திறந்து கெட்டி மேளம் கொட்ட, ஆண்டவன் கோயில் வ்ாசலை அடைவார். அப்போது, பல வண்ணத் துணிகளையும், பூசணிக்காய், கற்பூரம் இவற்றையும் சுற்றி வீசிப் போட்டு, சிதறு தேங்காய் உடைத்து, பகவானின் அழகிற்கு திருஷ்டி கழிப்பார்கள்.

அன்றும், பாண்டு, மேளக் கச்சேரி, நாதஸ்வரம், வாண வேடிக்கைகளென அமர்க்களப்பட்டு, ஆண்டவன் மறுபடியும் கோயிலை வந்தடைய அதிகாலை ஐந்து மணியாகிவிடும்.

ஆறாம் திருநாள் யானைவாகனம். இரவிலே வெண்ணிற யானையின் மேல் பகவானை அமரச் செய்து, அதன் பக்கத்திலே வெண்ணிற உடையணிந்து பாகன் வேஷத்தில் ஒருவர் வருவார். இருபுறமும் அழகிய குஞ்சங்களோடு குடைகளைத் தாங்கி இரண்டு பேர் வருவார்கள்.

ஏழாம் திருநாள் தேர். அழகாக அலங்காரம் செய்யப்பட்டு, தேரிலே பவனி வருவார் பகவான். இந்தத் தேர்த் திருவிழாவிற்காக, வெளியூரிலிருந்து உறவுகள் வந்து கூடுவார்கள். இதற்காக, பலப்பல வளையல், ரிப்பன், துணிகள் விற்கும் கடைகள் வந்து விடும். குழந்தைகளின் ராட்டினமும் வந்து நிற்கும்.

எட்டாம் திருநாளன்று இரவு குதிரை வாகனம். பொன்னிறக் குதிரையின் மீது பகவான் பவனி வருவார். கோயிலை அடைவதற்கு முன்பு ''ஏசல்'' என்ற நிகழ்ச்சி நடைபெறும். அதாவது கள்வர்கள் வந்து ஆண்டவனின் பொன், பொருள் ஆபரணங்களைக் கவர்ந்து செல்கிறார்கள் என்பது ஐதிகம். திருமங்கையாழ்வார் போல் ஒருவர் வேடமணிந்து வருவார். பின்பு மறுநாள் காலை, பகவானுக்கு ஒன்றன்மேல் ஒன்றாகப் பல பட்டுப் போர்வைகள் சாற்றியிருப்பார்கள். கோயில் கதவைச் சாத்தி விடுவார்கள். அதாவது, தாயார் பெருமாளிடத்தில் கோபித்துக் கொண்டு கதவைத் திறக்க மறுப்பதாக ஐதிகம். ஒவ்வொரு போர்வையாகக் களைந்து, கடைசியில் தாயார் சமாதானமாகி கதவைத் திறப்பாராம். இப்போது கோயில் கதவைத் திறந்து, தாயாரையும் பெருமாளையும் சேர்த்து மண்டபத்தில் வைத்து, பூப்பந்து ஆடி, மகிழ்வார்கள்.

அன்று மாலை பூப்பல்லக்கில் பகவான் ஒரு புறத்திலும், எதிரே உபநாச்சியார்களும் பேரழகாக அலங்காரம் செய்யப்பட்டு எழில் உறக் காட்சியளிப்பார்கள். அந்தப் பல்லக்கில் மல்லிகைப் பூக்களும் தவனங்களும் மணம் பரப்பி, பூலோகச் சுவர்க்கமாகக் காட்சியளிக்கும். பின்பு ஒருநாள் வெண்ணைத் தாழிக் கண்ணன் அலங்காரமும் வரும்.

கடைசி நாள் அன்று இரவு ''புஷ்பக விமானம்'' அதாவது பகவான் உபநாச்சியார்களோடு, அலங்காரம் செய்து கொண்டு வீதி உலா வருவார். பின்பு வைகுண்டத்திற்குப் போய் விடுவதாக ஐதிகம்.

பகவான் ஏன் வீதி உலா வருகிறார்? தன்னை வந்து தரிசிக்க இயலாத, உடல் ஊனமுற்ற மக்களையும், மழலைகளையும், பிற மக்களையும், தன் தரிசனம் கிடைக்கச் செய்யவே வீதி உலா வருகிறார். பத்தாம் நாள் அன்று, புஷ்பக விமானம் வரும் போது, ''ஐயோ, ஸ்ரீனிவாசா, எங்களை விட்டுப் போகிறாயே!'' என்று முதியவர்கள் கண்ணீர் விட்டு அழுவார்கள். உற்சவம் முடிந்ததும் கொடியை இறக்கி விடுவார்கள்.

— வசந்தா வேணுகோபால்

வாழைக்காய்ப் பொறியல் செய்யும் போது ஒரு டேபிள் ஸ்பூன் கடலைப் பருப்பு, ஒரு டேபிள் ஸ்பூன் அரிசி, ஐந்து அல்லது ஆறு மிளகாய் வற்றல் மூன்றையும் சிறிது எண்ணெய் விட்டு வறுத்து அரைத்துக் கொண்டு வாழைக்காயில் போட்டு, கொஞ்சம் புளித் தண்ணீரையும் தெளித்து வதக்கினால் பொரியலின் ருசி பிரமாதமாக இருக்கும். பீர்க்கங்காய், புடலங்காய் முதலியவற்றையும் இப்படிச் செய்யலாம்.

— ஜெயா

"ஹலோ, உங்களுக்குத் தான் இந்தக் கட்டுரை!"

ஸ்ரீஹரஹா







